REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஏப்ரல் 30 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN
தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 101 | April 30, Friday, 2021 | 24 பக்கங்கள் | 30/-
















அதிகரிக்கும் கொரோனா தொற்று நிலைமை;

## இந்தியாவின் நிலை குறித்து ஜனாதிபதி கவலை தெரிவிப்பு

### பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பி வைத்தார்





கொரோனா தொற்று அதிகரித்திருப்பதன் காரணமாக இந்திய மக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தை இந்தியா மிக விரைவில் முறியடிக்குமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் தற்போதைய நிலை தொடர்பில் தனது கவலையை வெளியிட்டுள்ள ஜனாதிபதி, உங்களது திறமையான தலைமையின் கீழும் அர்ப்பணிப்புள்ள நிபுணர்களின் உறுதியான ஆதரவோடும் இந்தியா விரைவில் நோய்க் கிருமியின் தற்போதைய

06

## இந்தியாவிலிருந்து வருவோர் குறித்து விசேட கவனம்

### சுகாதார தரப்பு பரிந்துரைகளுக்கமைய தீர்மானம்



**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

விமான நிலையத்தில் பயணக் கட்டுப்பாடுகளை விதித்தல் அல்லது சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு கட்டுப்பாடுகளை விதித்தல் தொடர்பில் வழங்கப்படும் சுகாதார பரிந்துரைகளுக்கமைய எதிர்காலத்தில் தீர்மானங்கள் எடுக்கப்படுமென சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகள் குறித்து விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதுடன், பயணிகளின் வருகையை கட்டுப்படுத்தவும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார். "கொவிட் 19 வைரஸின் புதிய பரிமாற்றத்திலிருந்து மக்களை

06



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று (29) அலரி மாளிகையில் சந்தித்த போது..

நாட்டை முடக்கும் தேவை தற்போது இல்லை;

# 2,500 படுக்கை வசதிகளை தயார் செய்யும் முப்படை



### இராணுவ, கடற்படை, விமானப்படை தளபதிகளுடன் பாதுகாப்பு செயலாளர் ஆலோசனை

**ஸாதிக் ஷிஹான்**

கொவிட்19 தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பினால் வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் அவற்றுக்கு முகம் கொடுக்கும் வகையில் 2,500 படுக்கைகளை தயார் செய்யும் நடவடிக்கைகளில் முப்படையினர் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரட்ண தெரிவித்தார்.

இராணுவத் தளபதி, கடற்படை மற்றும் விமானப் படைத் தளபதிகளுடன்

06

**உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டு பாதிப்பு குறைவு என்பதுடன் சுகாதார பிரிவின் செயற்பாடுகள் உயர்தரமானவை**

## பள்ளிவாசல் தொழுகைக்கு 25 பேருக்கு மட்டுமே அனுமதி

முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களம் அறிவிப்பு



சகல பள்ளிவாசல்களிலும் அனைத்து கூட்டுச் செயற்பாடுகளையும் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்தவும், ஒரே நேரத்தில் அதி கூடியது 25 பேர் என்ற உச்ச வரம்புக்குட்பட்டு தொழுகைக்கு அனுமதி

06

தேசிய வெசாக் நிகழ்வு நயினாதீவில்

## முன்னேற்பாடு தொடர்பில் வடக்கு ஆளுநர் களவிஜயம்



2021ஆம் ஆண்டுக்கான தேசிய வெசாக் பண்டிகையை கொண்டாடுவது தொடர்பாக விசேட கலந்துரையாடல் (27) நயினாதீவு நாகதீப ராஜமகா விகாரையில்

06

கொரோனா சிகிச்சை நிலைய பற்றாக்குறை ஏற்படின்

## இராணுவ கட்டிடங்கள், உல்லாச பயண ஹோட்டல்களிலும் ஏற்பாடு



### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் நோய் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான போதிய வசதிகள் இல்லையென எண்ணி எவரும் அநாவசியமாக அச்சப்படத் தேவையில்லை. அரசாங்கம் அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதென கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயலகத்தின் தலைவர்

06

## மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும், உள்ளே வருவோருக்கு எழுமாறான PCR

12 இடங்களை மையப்படுத்தி நேற்று முதல் நடவடிக்கை



மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் மற்றும் மேல் மாகாணத்துக்குள் வரும் 12 இடங்களை மையப்படுத்தி கொவிட்19 பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று (29) நண்பகல் 12.00 மணி முதல் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண

06

## விழிப்புலனற்ற 13 வயது ஜீவந்தவுக்கு பார்வையளித்த பிரதமரின் பாரியார்

### ரோஹித்தவின் கருணையால் உலகை காணும் வரம் கிடைத்தது



கலென்பிந்துனுவெவ, பலுகொல்லேகம கிராமத்தை சேர்ந்த விழிப்புலனற்ற 13 வயதுடைய ஜீவந்த ரத்நாயக்க என்ற சிறுவனின் கண் பார்வைக்கான கோரிக்கை சமூக வலைத்தளம் ஊடாக பிரதமரின் இளைய மகனான ரோஹித் ராஜபக்ஷவின் கவனத்தை ஈர்த்தது.



இந்தச் சிறுவன் மீது ஏற்பட்ட ஆழ்ந்த அனுதாபத்தை தொடர்ந்து ரோஹித் ராஜபக்ஷ, இது தொடர்பில் தனது தாயார், பிரதமரின் பாரியாரான திருமதி.ஷிரந்தி ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டு சென்றார்.

குழந்தைகள் மீது மிகுந்த கருணையும், அன்பும் மிகுந்த

06




வடக்கு,கிழக்கில் பல இடங்களில்

## சிவராமின் நினைவு தினம் அனுஷ்டிப்பு



ஊடகவியலாளர் சிவராமின் நினைவு தினம் வடக்கு கிழக்கில் பல்வேறு இடங்களில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற நினைவு நிகழ்வில் யாழ். ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு

06

## தூர ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தம்



கொவிட் 19 வைரஸ் தொற்று பரவல் காரணமாக நகரங்களுக்கிடையிலான மற்றும் தூர பிரதேசங்களுக்கான சில ரயில் சேவைகள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் இரத்துசெய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

முதலாம் திகதி தொடக்கம் 3 ஆம் திகதிவரை மூன்று கட்டங்களாக ரயில் சேவைகள் இரத்துச்

06

பிணைமுறி மோசடி வழக்கு

## அர்ஜுன் மகேந்திரன் இன்றி முன்னெடுத்து செல்ல தீர்மானம்



மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பான வழக்கின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள வெளிநாட்டிலிருக்கும் மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மற்றும் ஜி.புஞ்சிஹேவா ஆகியோரின்றி வழக்கை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்ல மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றம் நேற்று (29) அனுமதி வழங்கியுள்ளது. மார்ச் 31, 2016 அன்று இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி ஏலத்தில் ரூ.15 பில்லியன் மதிப்புள்ள பத்திரங்களை

06

**விக்கல் வீராச்சாமி**



நாட்டில கொரோனா கோரத்தாண்டவம் ஆடுது, எதிர்க்கட்சிகளுக்கு அது அறிக்கைகள் விடுகிற விளையாட்டாய் இருக்குது....

எதிர்க்கட்சி எண்டா எதிர்க்கோணும் எண்ட தியரி இங்க பழக்கமா போச்சு,, நாடு எந்த நிலைக்குப் போனாலும் இவங்கள திருத்தவே முடியாது...!!!

# சர்வதேச செய்திகள்

## சீன விண்வெளி நிலையத்திற்கு முதல் தொகுதி அனுப்பிவைப்பு

புதிய நிரந்தர விண்வெளி நிலையம் ஒன்றுக்கான முக்கிய தொகுதி ஒன்றை சீனா விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

வென்சாங் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து லோங் மார்ச் 5பி ரொக்கெட் மூலம் விண்வெளி வீரர்கள் தங்கி இருப்பதற்கான தியன்ஹே தொகுதி அனுப்பப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் இந்த புதிய விண்வெளி நிலையத்தை இயக்க சீனா எதிர்பார்த்துள்ளது.

தற்போது விண்வெளியில் சர்வதேச விண்வெளி நிலையம் என்ற ஒரே விண்வெளி நிலையமே இயங்கி வருகிறது. அதில் சீனா இடம்பெறவில்லை.

சீனா தனது விண்வெளித் துறை ஆராய்ச்சிகளை அண்மைக்காலத்திலேயே ஆரம்பித்தது. 2003 ஆம் ஆண்டிலேயே அந்த நாடு தனது முதலாவது விண்வெளி வீரரை பூமியின் சுற்றுவட்டப்பாதைக்கு அனுப்பியது. எனினும் சோவியட் ஒன்றிம் மற்றும் அமெரிக்காவுக்கு அடுத்து இதனைச் செய்த மூன்றாவது நாடாக அது பதிவானது.



சீனா இதற்கு முன்னர் பூமியின் சுற்றுவட்டப்பாதையில் இரு விண்வெளி நிலையங்களை நிறுத்தியது. டியாங்கொங் 1 மற்றும் டியாங்கொங் 2 என்ற அந்த இரு விண்வெளி நிலையங்களும் ஒரு சாதாரண வடிவத்தை கொண்டதாக விண்வெளி வீரர்கள் குறுகிய காலம் தங்கி இருக்க முடியுமானதாகவே இருந்தன.

## எகிப்தில் பாரோக்களுக்கு முந்திய அரிதான கல்லறைகள் கண்டுபிடிப்பு

நைல் டெல்டா பகுதியில் அகழ்வாராய்ச்சி பணியில் ஈடுபட்டு வரும் ஆய்வாளர்கள் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் முதல் முறை தோன்றிய எகிப்தின் பாரோ பேரரசுக்கு முந்திய காலத்து கல்லறைகளை கண்டுபிடித்துள்ளனர்.

அதேபோன்று எகிப்தின் மத்திய கால பேரரசை முடிவுக்குக் கொண்டுவந்து மேற்கு ஆசிய குடியேறிகள் நாட்டை கைப்பற்றிய ஹைக்சோஸ் காலத்து (கி.மு. 1650 தொடக்கம் 1500 வரை) கல்லறைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


இதில் சுமார் கி.மு 3300 ஆண்டு ஆரம்பமான புடோ காலத்தின் 68 கல்லறைகள், கி.மு 3,100 ஆம் ஆண்டு வாக்கில் முதல் முறை தோன்றிய மூன்றாவது நகடா காலத்தின் ஐந்து கல்லறைகளும் உள்ளடங்குவதாக எகிப்து சுற்றுலா மற்றும் தொல்பொருள் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. கெய்ரோவின் வடக்காக டகாஹ்லி நிர்வாகப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட இந்த கண்டுபிடிப்புகள் பண்டைய எகிப்தின் முக்கிய இரு நிலைமாற்றுக் காலங்களை காட்டுவதாக உள்ளது என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் புடோ காலத்து கல்லறைகள் நீல் வட்ட வடிவான குழிகளில் கருவில் சிசு இருப்பது போன்று உடல்கள் வைக்கப்பட்டுள்ளன என்று அமைச்சின் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

நகடா காலத்தின் சில கல்லறைகளில் உருளைகள் மற்றும் பாதிரங்களில் உடல்கள் வைக்கப்பட்டுள்ளன.



## ஸ்பெயின் சிரிப்பு மனிதன் மரணம்




தனது சிரிப்பால் உலகப் பிரபலம் பெற்ற ஸ்பெயின் நகைச்சுவை நடிகர் ஜுவான் ஜோய் போர்ஜா தனது 65 ஆவது வயதில் காலமானார்.

"ஸ்பெயின் சிரிப்பு மனிதன்" என்று இணையதளத்தில் பிரபலம் பெற்ற இவர், 2014 ஆம் ஆண்டு தேசிய தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் சிரிக்கும் காட்சி சமூக ஊடகங்களில் வைரலானது. அந்த சிரிக்கும் காட்சி 'மீம்' பதிவுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

அவர் மருத்துவமனையில் வைத்து கடந்த புதன்கிழமை மரணித்ததாக ஸ்பெயின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## பராமரிப்பு நிலையம்: நான்கு பேரை கொன்ற மருத்துவ பெண் கைது



ஜெர்மனியில் விசேட தேவையுடையோருக்கான பராமரிப்பு இல்லத்தில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் நான்கு நோயாளர்கள் கொல்லப்பட்டதோடு மற்றுமொருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

பெர்லினுக்கு அருகில் போஸ்டாம் பகுதியில் இருக்கு இந்த நிலையத்தில் பணியாற்றும் 51 வயது பெண் ஒருவரை இந்த தாக்குதல் சதேகத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பராமரிப்பு இல்லத்தின் வெவ்வேறு அறைகளில் இருந்த நோயாளர்கள் தாக்கப்பட்ட நிலையிலேயே கடந்த புதன் இரவு பொலிஸார் அழைக்கப்பட்டுள்ளனர்.

திட்டமிட்ட கொலையில் ஈடுபட்ட சந்தேகத்தில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். எனினும் இந்த தாக்குதலுக்கான நோக்கம் தெரியவில்லை.

தாக்குதல் இடம்பெற்றிருக்கும் ஒபர்சில் சிறப்பு மருத்துவ பராமரிப்பு நிலையம் விசேட தேவையுடையவர்களுக்கு உதவி வருகிறது.

## இந்திய வகை கொரோனா 17 நாடுகளில் கண்டுபிடிப்பு



இந்திய வகையைச் சேர்ந்த இருமுறை உருமாறிய கொரோனா வைரஸ் 17 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் கடந்த வாரம் மேலும் 57 இலட்சம் பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இந்தியாவிலும் பல லட்சம் பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கு பி.1.617 என்ற வகையைச் சேர்ந்த இந்திய வகை கொரோனா வைரஸ் காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்த நிலையில், உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், ஏப்ரல் 27ஆம் திகதி வரை 17 நாடுகளில் இருந்து 1,200 முறை பி.1.617 வகை கரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது. இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து அதிகம் இந்த வகை கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவித்தது.

இந்தியாவில் பரவும் மற்ற வகை கொரோனா வைரஸை விட பி.1.617 வகை வைரஸ் வேகமாக வளர்ந்து பரவும் தன்மை கொண்டது. இதனால்தான் இந்தியாவில் முதல் அலையைக் காட்டிலும் இரண்டாவது அலை வேகமாகப் பரவி வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

மேலும், பொது சுகாதார விதிகளைப் பின்பற்றாமல் இருப்பது, கொரோனா நெறிமுறைகளைப் பின்பற்றாமல் தேர்தல், திருவிழா, கலாசார நிகழ்ச்சிகளுக்கு மக்கள் ஒன்றாகக் கூடுவதும் கொரோனா பரவலுக்கு காரணமாக இருக்கலாம்.

இவை தொடர்பாக மேலும் பல ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'வாய்வழி' கொரோனா தடுப்பு மருந்தை தயாரிக்கிறது பைசர்




வாய்வழியாக உட்கொள்ளும் வகையிலான கொரோனா தடுப்பு மருந்துகளை பைஸர் நிறுவனம் விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

உலகெங்கிலும் ஊசி வகையிலான தடுப்பு மருந்துகளே தற்போதைய நிலையில் பயன்பாட்டில் உள்ளன. பைஸர் நிறுவனம் வாய்வழியாக உட்கொள்ளும் மருந்தை அறிமுகப்படுத்தினால் அதிகமான மக்களை கொரோனா தடுப்பு மருந்து சென்றடைவதற்கு ஏதுவாக இருக்கும் என்று மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

"எல்லாம் நல்லபடியாகச் சென்றால் இந்த ஆண்டின் இறுதியில் வாய்வழியாக உட்கொள்ளும் கொரோனா தடுப்பு மருந்துகளை எதிர்பார்க்கலாம்" என்று பைஸர் நிறுவனத்தின் பணிப்பாளர் அல்பர்ட் போர்லா தெரிவித்துள்ளார்.

தவிர, 06 மாதம் தொடக்கம் 11 வயதுடைய சிறுவர்களுக்கான தடுப்பு மருந்தையும் பைசர் நிறுவனம் ஆராய்ந்து வருகிறது. கொரோனா பெருந்தொற்றை முடிவுக்குக் கொண்டுவர இந்த ஆய்வு தீர்க்கமானதாக இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக 12 தொடக்கம் 15 வயது வரையான சிறுவர்களுக்கு தடுப்பு மருந்து 100 வீதம் செயல்திறனை காட்டியதை அடுத்து அந்த வயதுடையவர்களுக்கு தடுப்பு மருந்தை அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் விரிவு படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## நீல் ஆம்ஸ்ட்ரோங் உடன் நிலவுக்கு சென்றவர் மரணம்

நிலவுக்கு சென்ற முதல் விண்வெளி வீரர் குழுவினரில் ஒருவரான மைக்கேல் கொலின்ஸ் தனது 90 ஆவது வயதில் காலமானார்.

புற்றுநோயால் அவதிப்பட்ட கொலின்ஸ் கடந்த புதன்கிழமை மரணமடைந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அபலோ விண்கலம், 1969 ஆம் ஆண்டில் நிலவில் மனிதன் முதலில் கால்பதித்த சம்பவத்திற்கு பெயர்பெற்றது. அதன் விமானி, மைக்கல் கொலின்ஸ் சக விண்வெளி வீரர்கள் நீல் ஆம்ஸ்ட்ரோங், பஸ் ஆல்ட்ரின் ஆகியோர் நிலவில் கால் பதிக்கச் சென்றபோது, விண்கலத்தில் தனியாக இருந்தார்.

அதற்காகவே, "வரலாற்றில் மிகத் தனிமையான மனிதன்" என்று அப்போது வருணிக்கப்பட்டார்.

நிலவுப் பயணம், பூமி குறித்த தம்முடைய கண்ணோட்டத்தை முழுமையாக மாற்றிவிட்டதாகக் கொலின்ஸ் கூறியிருந்தார். பூமி மிகவும் வலிமையற்றது என்றும், அதைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை தாம் உணர்ந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

கொலின்ஸின் மரணத்திற்கு 91 வயதான பஸ் ஆல்ட்ரின் தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

இத்தாலியில் பிறந்த கொலின்ஸ் விமானப்படை விமானியாக இருந்து பின்னர் ஜெமினி திட்டத்தில் விண்வெளி வீரரானார். விண்வெளியில் மிதந்த மூன்றாவது அமெரிக்கராக அவர் உள்ளார்.

மைக்கேல் கொலின்ஸ், சுமார் 238,000 மைல்கள் பயணித்து நிலவை நெருங்கினார். நிலவில் இருந்து 69 மைல்கள் தொலைவுக்கு வந்தபோதும், நிலவில் கால் வைக்கவில்லை. ஆல்ட்ரின் மற்றும் ஆம்ஸ்ட்ரோங் இருவரும் நிலவின் மேற்பரப்பில் இருந்தபோது அவர் கிட்டத்தட்ட ஒரு நாள் சுற்றுப்பாதையில் கழித்தார்.

இந்த தருணத்தில் தான் தனிமையில் இருக்கவில்லை என்றும், ஒரு கட்டுப்பாட்டு அமைப்பின் சிறப்பு விமானியாக இருந்ததால், விண்வெளி பயணத்தின் ஒரு முக்கிய அங்கமாக உணர்ந்ததாகவும் மைக்கேல் கொலின்ஸ் கூறியது குறிப்பிடத்தக்கது.



## சீனாவில் பாலர் பாடசாலையில் கத்திக்குத்து: 2 சிறுவர்கள் பலி

தென் சீனாவில் பாலர் பாடசாலை ஒன்றிற்குள் கத்தியுடன் நுழைந்த ஆடவர் ஒருவர் நடத்திய தாக்குதலில் இரு சிறுவர்கள் கொல்லப்பட்டு மேலும் 18 பேர் காயமடைந்துள்ளனர்.

குவாங்சி சுவாங் என்ற சுயாட்சி பெற்ற பிராந்தியத்தின் பெய்லியோ நகரில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்த இருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர்.

சந்தேக நபரை பொலிஸார் கைது செய்திருப்பதோடு தாக்குதல் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சின்ஹுவ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

சீனாவில் பாடசாலைகளில் இவ்வாறான கத்திக்குத்து தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான தாக்குதலில் ஈடுபடுபவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்களாக அல்லது அதிகாரிகளை பழிவாங்குபவர்களாக அல்லது அறியப்பட்ட தனிநபர்களாக உள்ளனர்.

இந்நிலையில் கடந்த புதனன்று நடைபெற்ற இந்தத் தாக்குதலுக்கான காரணம் உறுதி செய்யப்படவில்லை.

இதில் பதினாறு மாணவர்களுடன் இரு ஆசிரியர்களும் காயமடைந்துள்ளனர். மூன்று தொடக்கம் ஆறு வயதான சிறுவர்களே சீனாவில் பாலர் பாடசாலைகளில் சேர்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



கடைசியாக 2019ஆம் ஆண்டு ஹுபெய் மாகாணத்தில் உள்ள சிறுவர் பாடசாலையில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் ஒன்பது மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

## பனிப்பாறை உருகும் வேகம் அதிகரிப்பு

உலகின் துருவப் பகுதிகளில் பனிப்பாறைகள் மிக வேகமாக உருகி வருவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து நேச்சர் இதழில் வெளியான ஆய்வறிக்கையில், பனிப்பாறைகள் உருகும் வேகம் அதிகரித்துள்ளதால் கடற்கரையோர நகரங்கள் பெரும் ஆபத்தில் சிக்கியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை நாசா நடத்திய ஆய்வில் கிரீன்லாந்து மற்றும் அண்டார்க்டிகா தவிர்த்து ஏனைய பகுதியில் ஆண்டுக்கு சுமார் 267 ஜிகா தொன் அளவிற்கு பனிப்பாறைகள் உருகியது தெரியவந்துள்ளது.

தற்போது இந்த அளவு அதிகரித்துள்ளதாகவும் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பருவநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல் போன்ற காரணத்தினால் பனி உருகுவதாகவும், இதனைக் கட்டுப்படுத்தா விட்டால் கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஒட்டுமொத்த கடல் மட்ட உயர்வு 21 வீதமாக இருப்பது அல்லது ஆண்டுக்கு 0.74 மில்லிமீற்றர் கடல் மட்ட உயர்வுக்கு இந்த பனிப்பாறை உருகுவது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதாக இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 ஏப்ரல் 30 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්




**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.39 |
| ளுஹர் | 12.09 |
| அஸர் | 03.25 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.31 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மாசி 20

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)




## குர்ஆனின் அற்புதம்

உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொரு மனிதனதும் இம்மை மறுமை வாழ்வின் விமோசனத்தில் அல்லாஹ் விஷேட கவனம் செலுத்தியுள்ளான். அதனடிப்படையில் தான் நன்மை தீமைகளையும் சத்தியம் அசத்தியத்தையும் தெளிவாகப் பிரித்தறிவிக்கக்கூடிய அல் குர்ஆனை அவன் அருளி இருக்கின்றான். மனிதனின் ஈருலக வாழ்வுக்கு தேவையான உயிரோட்டம் மிக்க நேர்வழிகாட்டல்களை வழங்கிக் கொண்டிருக்கின்றது இக்குர்ஆன். இது தெளிவானதும் முழுமையானதுமான அறிவியல் பொக்கிஷமாக விளங்குவதோடு தனித்துவமான ஈர்ப்பையும் ஆகர்ஷிப்பையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது.

மனிதனின் எந்தவொரு நூலையும் இரண்டொரு தடவைக்கு மேல் படிக்க முடியாது. அலுப்பு தட்டிவிடும். அத்தோடு மனிதனின் வசனங்களை சொல்லுக்கு சொல் வசனத்திற்கு வசனம் நினைவில் வைத்துக்கொள்ளவும் முடியாது. ஆனால் அல்லாஹ்வின் சொற்களையும் வசனங்களையும் கொண்டுள்ள குர்ஆனை எத்தனை தடவைகள் படித்தாலும் வாசித்தாலும் அலுப்போ, சலிப்போ ஏற்படாது. அதனைப் படிக்க படிக்க அதன் மீதான பற்றும் ஈர்ப்பும் உள்ளத்தில் ஊருவிக்கொண்டே இருக்கும். சிந்தனையும் பார்வையும் விரிவடையும். அத்தோடு இக்குர்ஆனின் சொற்களையும் வசனங்களையும் அச்சொட்டாக மனனமிடவும் நினைவில் வைத்துக்கொள்ளவும் முடியும். அல்லாஹ்வை ஆசானாகக் கொண்டதல்லவா இக்குர்ஆன். அதனால் இக்குர்ஆனின் அருளை அடைந்து கொள்ளும் நோக்கில் அதனை அணுகும் போது அதன் அருள்களை அடைந்திடலாம். இதனை நபி (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக்கூறியுள்ளார்கள்.

அந்த வகையில் குர்ஆனின் நிழலில் வாழ்ந்த அறிஞரொருவர் 'நீங்கள் எந்தளவுக்கு குர்ஆனை நெருங்கிச் செல்கின்றீர்களோ அந்தளவுக்கு அதன் கருவூலங்கள் உங்களுக்கு திறக்கும். ஒவ்வொரு முறையும் அதன் நிமித்தம் உங்கள் உள்ளம் விரிவடையும். அந்தளவுக்கு அதன் மின்னல்களும் வெளிச்சங்களும் ஞானங்களும் உங்களுக்கு வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும்' என்றுள்ளார்.

ஆகவே அல் குர்ஆன் அருளப்பட்ட இம்மாதத்தில் அதனை அதிகமதிகம் ஓதுவோம், படிப்போம். அதற்காக திடசங்கற்பம் பூணுவோம். அதற்கான தொடக்கமாக இம்மாதத்தை அமைத்துக்கொள்வதோடு குர்ஆனின் கருவூலங்களை அடைந்திடுவதை இலக்காகக் கொள்வோம்.

மர்லின் மரிக்கார் ...

# இந்தியாவில் உருமாறிய கொரோனா வைரஸ்

### 17 நாடுகளுக்கு பரவல் -WHO தெரிவிப்பு

இந்தியாவில் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனா வைரஸ் குறைந்தது 17 நாடுகளுக்கு பரவியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் உருமாற்றமடைந்து புதிய வகை வைரஸ் பரவியமை கண்டறியப்பட்டது. இதற்கு பி1617 என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந் நிலையில், தற்போது இந்தியாவில் கொரோனா வேகமாக பரவுவதற்கு இந்த உருமாற்ற கொரோனா தான் காரணமாக இருக்கலாமென அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே இந்தியாவில் உருமாறிய கொரோனா ஏனைய நாடுகளுக்கும் பரவி வருகிறது. இதனால் பல்வேறு நாடுகள் இந்திய விமானங்களுக்கு தடை விதித்துள்ளன.

இந்தியாவில் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனா வைரஸ் குறைந்தது 17 நாடுகளுக்கு பரவியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

தரவு தளத்தில் 120இற்கும் மேற்பட்ட வைரஸ் வரிசைகளை ஆய்வு செய்ததில் இது தெரியவந்துள்ளதாகவும் பெரும்பாலான வைரஸ் வகைகள் இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து பதிவேற்றப்பட்டன என்றும் தெரிவித்துள்ளது. இந்தியாவிலிருக்கும் ஏனைய மாறுபாடுகளை காட்டிலும் பி1617 அதிக வளர்ச்சி விகிதத்தை கொண்டுள்ளதென்றும் இது வேகமாக பரவக் கூடிய தன்மை கொண்டது என்றும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

### இலங்கை - சீன இருதரப்பு கலந்துரையாடல்

# வெற்றிகரமாக நிறைவு

ஸாதிக் ஷிஹான்

சீன தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் ஃபெங்கின் உத்தியோகபூர்வ விஜயத்தின் ஒர் அங்கமாக இலங்கை மற்றும் மக்கள் சீனக் குடியரசுக்கிடையே இருதரப்பு கலந்துரையாடல் கொழும்பு ஷங்ரி லா ஹோட்டலில் (28) நடைபெற்றது.

இலங்கைக்கு விஜயம் செய்த சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ஃபெங் தலைமையிலான சீன தூதுக் குழுவுடன் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண (ஓய்வு) தலைமையிலான இலங்கை பிரதிநிதிகள் இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்த கலந்துரையாடலில் இலங்கைக்கான சீன தூதுவர் கி சென்ஹோங், இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே மற்றும் முப்படை தளபதிகள் கலந்து கொண்டனர்.



இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் நீண்டகால இருதரப்பு உறவுகளை நினைவு கூர்ந்த ஜெனரல் கமால் குணரட்ண, பௌத்தம், வர்த்தகம், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் உலகளாவிய இணைப்பு உள்ளிட்ட பல வழிகளில் சீனா இலங்கையின் வரலாற்று ரீதியில் நட்பு நாடாக இருந்து வருகின்றது என்றார்.

அண்மையில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையினால் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் போது சீன அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்கு பாதுகாப்பு செயலாளர் இதன்போது நன்றி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கிடையில் காணப்படும் இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பு தொடர்பாக கருத்து தெரிவித்த ஜெனரல் ஃபெங், நடைமுறை சாத்தியமான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இலங்கையுடன் தொடர்ந்து இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, சீன தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தை பாதுகாப்பு செயலாளர் மற்றும் இலங்கை சுங்க திணைக்கள பணிப்பாளர் நாயகமும் மாணவர் சங்கத்தின் தலைவரும் ஸ்தாபக உறுப்பினருமான மேஜர் ஜெனரல் (ஓய்வு) விஜித ரவிப்பிரிய ஆகியோரின் அழைப்பின் பேரில் சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ஃபெங் இணையதளத்தை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்தார்.

உயர்மட்ட சீன பாதுகாப்பு தூதுக் குழுவின் உத்தியோகபூர்வ விஜயத்தின் ஒர் அங்கமாக இரு நாடுகளுக்கு மிடையிலான இராணுவ உதவிகள் தொடர்பான ஆவணங்களும் கைச்சாத்திடப்பட்டன.


இந்த நிகழ்வை நினைவு கூரும் வகையில் பாதுகாப்பு செயலாளர், முப்படை தளபதிகள் மற்றும் சீன தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கி வந்த ஜெனரல் ஃபெங் ஆகியோருக்கிடையில் நினைவுச்சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இந்த இரு தரப்பு கலந்துரையாடலில் சீன இராணுவ இணைந்த படைகளின் பிரதிப் பிரதானியான லெப்டினன்ட் ஜெனரல் ஷாவோ யுவான்மிங், மத்திய இராணுவ ஆணைக்குழுவின் சர்வதேச இராணுவ ஒத்துழைப்புக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சி குவேய், பொது அலுவலக பிரதி பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஷென் பாங்வ், தென் பிராந்திய கட்டளையகத்தின் உதவிப் பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் ஹூ சியான்ஜுன் மற்றும் சீன தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் சிரேஷ்ட கேர்ணல் வான் டோங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காலி, களுத்துறையிலும் பிரிட்டன் திரிபு வைரஸ்

### பாதுகாப்பாக இருக்க வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்



கொழும்பு, குருநாகல் உள்ளிட்ட சில பிரதேசங்களில் பரவியுள்ள பிரிட்டனின் திரிபுபடுத்தப்பட்ட கொரோனா வைரஸ் காலி மற்றும் களுத்துறை மாவட்டங்களின் சில பிரதேசங்களிலும் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஜீவவாயு விஞ்ஞானத்துறை பணிப்பாளர் மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

நேற்று அப்பிரதேசங்களில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகளின் பரிசோதனை முடிவிலேயே பிரிட்டனின் பி 1 1 7 வகை வைரஸ் காணப்பட்டுள்ளதாகவும் எவ்வாறெனினும் அது தொடர்பில் தொடர்ந்தும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கொழும்பு, குருநாகல் மற்றும் பொரலஸ்கமுவ பிரதேசங்களில் நேற்று முன்தினம் வேகமாக பரவக் கூடியதும் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியதுமான பிரித்தானிய திரிபுபடுத்தப்பட்ட கொரோனா வைரஸ் பரவல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வைரஸ் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என்றும் மக்கள் இந்த வைரஸ் தொடர்பில் மிகவும் கவனமாக செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதிய திரிபு வகை வைரஸானது நாட்டில் தற்போதுள்ள கொரோனா வைரஸ் போன்றல்லாது அதை விட 55 வீதம் வேகமாக பரவக்கூடியது என்றும் 50 வீதத்துக்கும் அதிக வீத மரணத்தை ஏற்படுத்தக்கூடியது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

# திருகோணமலை மாவட்டத்தில் மேலும் 6 பிரிவுகள் தனிமைப்படுத்தலில்

### இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவிப்பு

சுப்பிரமணியம் நிஷாந்தன்

திருகோணமலை மாவட்டத்தில் 06 கிராம சேவகர் பிரிவுகள் நேற்றுக் காலை 06.00 மணிமுதல் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சீனக்குடா, காவட்டிக்குடா, லிங்கன் நகர், கோயிலடி, சுமேதங்கரபுர, மட்கோ ஆகிய கிராம சேவகர் பிரிவுகளே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் நாடுமுழுவதும் 07 மாவட்டங்களில் 107 கிராம சேவகர் பிரிவுகள் இதுவரை முடக்கப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டு வருவதாகவும் நாட்டின் எந்தவொரு பகுதியும் முடக்கப்படும் நிலைகள் ஏற்படலாம் என்பதால் பல நாட்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்து வைத்துக்கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேல் மாகாணத்திற்குள் உள்நுழையும் வெளியேறும் 12 இடங்களில் பி.சி.ஆர். மற்றும் என்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ளும் பணி நேற்று வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மாஅதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை இவ்வாறு பி.சி.ஆர் மற்றும் என்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். பரிசோதனைகளில் கொவிட் தொற்று உறுதிசெய்யப்படுபவர்கள் உரிய சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம் கையாளப்படுவார்கள்.

முகக்கவசங்களை அணியாத 147 பேர் நேற்றுமுன்தினம் மாத்திரம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுவரை 4,087 பேர் மொத்தமாக கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையும் தொடர்ந்து இடம்பெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, நேற்றைய தினம் காலை 6 மணிவரையான 24 மணித்தியாலத்தில் மாத்திரம் 1,466 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இலங்கையில் ஒரு நாளில் அதிகமான தொற்றாளர்கள் பதிவான நாளாக நேற்றுமுன்தினம் மாறியுள்ளது. இலங்கையில் இதுவரை மொத்தமாக 1,04,953 பேர் கொவிட் தொற்றாளர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். புதிய தொற்றாளர்களில் 1,451 பேர் உள்நாட்டில் உள்ளவர்கள் என்பதுடன 15 பேர் வெளிநாட்டில் இருந்து இலங்கை வந்தவர்களாவர்.

பொது சந்தைகள் மற்றும் இரவுச் சந்தைகளில் அதிகமான தொற்றாளர்கள் கண்டறியப்படுவதால் இந்த நெருக்கடியான தருணத்தில் சந்தைகளை நடத்த வேண்டாமென பொது சுகாதார பரிசோதகர்கள் வேண்டுகோள்

06

# தடுப்பூசிகள் தேவைப்படும் நேரத்தில் இராணுவ தளபாட கொள்முதல் ஏன்?

### சஜித் பிரேமதாச அரசிடம் கேள்வி

சுப்பிரமணியம் நிஷாந்தன்

கொரோனா தடுப்பூசிகள் 440 மில்லியன் டோஸ் தேவைப்படும் இத்தருணத்தில் ஹெலிகொப்டர்களைக் கொள்வனவு செய்ய பில்லியன்கள் செலவிடப்படுகிறது. தேசிய பாதுகாப்பு வலுப்படுத்தப்பட வேண்டும் ஆனால் முதலில் கொவிட்19 தடுப்பூசிகள்தான் எமக்கு தேவையென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றுமுன்தினம் நொச்சியாகம, ஹொருவில ஸ்ரீ தபோதனாராம ரஜமஹா விகாரைக்குச் சென்று மகா சங்கத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்று, பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

720 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ரஷ்யாவிலிருந்து நான்கு

06

# இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு ஆட்சேர்ப்புக்கான எழுத்துமூல பரீட்சை

### மே. 08 இல் 06 பரீட்சை நிலையங்கள் தெரிவு

இலங்கை பொலிஸ் பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் பயிலுனர் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஆட் சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சையில் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கான எழுத்து மூலப் பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் 08 ஆம் திகதி நடத்தப்படவுள்ளன. இப் பரீட்சை 06 பரீட்சை மத்திய நிலையங்களில் காலை 08.30 தொடக்கம் 10.30 வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பரீட்சை மத்திய நிலையங்களாக கொழும்பு 12 ஹமீட் அல் ஹுசேனி மகா வித்தியாலயம், கொட்டாஞ்சேனை விவேகானந்தா மகா வித்தியாலயம்,

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 151.62 | 156.62 |
| கனடியன் டொலர் | 158.26 | 162.94 |
| யூரோ | 235.78 | 242.81 |
| ஜப்பான் யென் | 1.7858 | 1.8429 |
| சிங்கப்பூர் டொலர் | 147.08 | 151.19 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 271.21 | 279.00 |
| சுவிஸ் பிராங்க் | 213.48 | 220.33 |
| அமெரிக்க டொலர் | 196.11 | 199.87 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 529.84 | கட்டார் ரியால் | 54.86 |
| குவைத் டினார் | 663.73 | சவூதி ரியால் | 53.25 |
| ஓமான் ரியால் | 518.84 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.38 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் சித்திரை மாதம் 17ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 17

குறள் தரும் சிந்தனை



தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேறின்
அருளாதான் செய்யும் அறம்

அருள் மேற்கொள்ளாதவன் செய்கின்ற அறச்செயலை ஆராய்ந்தால், அஃது அறிவு தெளியாதவன் ஒரு நூலின் உண்மைப் பொருளைக் கண்டாற் போன்றது.

# அயல் தேசத்தின் பேரவலம் தருகின்ற அனுபவப் பாடம்!

எமது அயல்நாடான இந்தியாவின் இன்றைய நிலைமை மிகவும் கவலை தருகின்றது. கொவிட்19 தொற்று இந்தியாவில் கோரத் தாண்டவமாடுகின்றது. நாளாந்தம் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அந்நாட்டில் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். தினமும் இலட்சக்கணக்கானவர்கள் புதிதாக கொரோனா தொற்றுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றனர். இவை தவிர, கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் குணமடைந்தும் வருகின்றனர்.

இந்தியாவில் ஒரு வருட காலத்துக்கு முன்னர் கொரோனா தொற்று பரவத் தொடங்கிய பின்னர் இவ்வாறானதொரு அவல நிலைமை ஏற்பட்டிருந்ததில்லை. ஆயிரக்கணக்கானவர்கள் தினமும் தொற்றுக்கு உள்ளான போதிலும், உயிரிழப்புகள் இவ்வாறு அதிகரித்திருந்ததில்லை. இந்தியாவில் முதலாவது அலையின் போது கொரோனா தொடர்பான மரண அச்சம் மக்கள் மத்தியில் இருந்ததுமில்லை.

இந்தியாவில் இன்றைய நிலைமை இவ்வாறில்லை. வீதியோரங்களில் பிரேதங்கள் தகனத்துக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. தகனக் கிரியை செய்வதற்காக மயானங்களில் இடமில்லையென செய்திகள் வருகின்றன. தற்காலிகமாக வேறு இடங்களில் சடலங்கள் தகனம் செய்யப்படும்படியாக உயிரிழப்புகளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துள்ளது. சில இடங்களில் உள்ள மயானங்களில் சடலங்கள் இரவு பகலாக எரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

தலைநகர் டில்லியிலும், வேறு சில முக்கிய நகரங்களிலும் நிலைமை பாரதூரமாக காணப்படுகின்றது. டில்லியில் மாத்திரம் கொரோனாவினால் நாளாந்தம் 350 இற்கு மேற்பட்டவர்கள் மரணமடைவதாக தெரிவிக்கப்படுகின்றது. மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற பிரதேசம் அதுவென்பதால், கொவிட்19 தொற்று பரவுவதை கட்டுப்படுத்துவதென்பது கடினமான காரியமாக உள்ளது.

இந்தியாவில் இன்று கொரோனாவின் தாக்கம் அதிகரித்திருப்பதற்கு இரண்டு பிரதான காரணிகளைக் குறிப்பிட முடியும். முதலாவது காரணி இந்தியாவில் தற்போது பரவி வருவது கொரோனாவின் திரிபடைந்த வைரஸ் என்பதாகும். கொரோனாவின் முதலாவது அலைத் தாக்கத்தின் போது பரவிய வைரஸை பார்க்கிலும், இன்றைய திரிபடைந்த வைரஸானது பல மடங்கு வேகமாகப் பரவுவதாக மருத்துவ அறிவியலாளர்கள் கூறுகின்றார்கள். அதேசமயம், புதிய வைரஸ் ஏற்படுத்துகின்ற தாக்கமும் கொடூரமானதாகவே உள்ளது.

இரண்டாவது காரணி இந்தியாவில் நிலவுகின்ற ஒக்சிஜன் பற்றாக்குறை ஆகும். கொவிட் தொற்றினால் கடுமையாகப் பீடிக்கப்பட்டுள்ளோருக்கு மருத்துவ சிகிச்சையளிப்பதற்கு ஒக்சிஜன் பிரதானமாகத் தேவை. ஆனால் இந்தியாவில் போதுமான ஒக்சிஜன் சிலிண்டர்கள் இன்றைய நிலையில் கையிருப்பில் இல்லை. எனவே தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் அநேகமானோர் ஒக்சிஜன் கிடைக்காமல் பரிதாபமாகப் பலியாகிப் போனார்கள்.

அதேசமயம், இந்தியாவில் தலைநகர் டில்லி உட்பட பல நகரங்களில் உள்ள வைத்தியசாலைகள் கொரோனா நோயாளிகளால் நிரம்பி வழிவதனால், தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதில் பெரும் நெருக்கடி எதிர்கொள்ளப்படுகின்றது. எனவே உரிய சிகிச்சை கிடைக்காததால் ஏராளமானவர்கள் மரணமடைந்து போனார்களென்பது வேதனை தருகின்றது.

இந்தியாவின் இன்றைய அதிர்ச்சி தரும் நிலைமையைக் கண்டு உலக நாடுகளே விழித்துக் கொண்டுள்ளன. பல நாடுகளில் இருந்து ஒக்சிஜன் கொள்கலன்கள் இந்தியாவுக்கு விரைகின்றன. பெருமளவு நிதியை உதவித் தொகையாக பல நாடுகள் வழங்கியுள்ளன. கொள்கை கோட்பாடுகள் வேறுபட்டிருந்தாலும், இடுக்கண் நேர்கையில் விரைந்து சென்று சென்று உதவுகின்ற பண்பு கொண்ட நாடாக இந்திய தேசம் உள்ளது. எனவே இந்தியாவின் இன்றைய நெருக்கடி நிலையில் மற்றைய நாடுகளும் அது போன்றே இந்தியாவுக்கு உதவிக் கரம் நீட்டுவதை காண முடிகின்றது.

எமது நாட்டுக்கு அயலில் உள்ள இந்திய மாநிலமான தமிழ்நாட்டிலும் கொரோனா வேகமாகப் பரவி வருகின்றது. ஆனாலும் டில்லி போன்ற நகரங்களுடன் ஒப்பிடுகையில் தமிழக நிலைமை பாரதூரமானதாக இல்லை. எனினும் மக்கள் அலட்சியத்தைக் கடைப்பிடிப்பார்களானால் தமிழக நிலைமையும் மோசமடையுமென்றே அஞ்சப்படுகின்றது.

இந்தியாவின் பெருமளவு மாநிலங்களில் தற்போது நிலவுவது இரண்டாவது அலைத் தாக்கமாகும். ஆனால் டில்லி மற்றும் குஜராத் மாநிலங்களில் தற்போது நிலவுவது மூன்றாவது அலைத் தாக்கம் ஆகும். ஏனைய மாநிலங்களிலும் மூன்றாவது அலைத் தாக்கம் ஏற்பட்டு விடக் கூடுமோ என்பதுதான் அங்கு இன்றுள்ள அச்சம்!

எது எவ்வாறிருந்த போதிலும், இந்தியாவின் இன்றைய அவல நிலைமைக்குக் காரணம் மக்கள் கடைப்பிடித்த அலட்சியமேயாகும். சமூக இடைவெளியை உரியபடி கடைப்பிடித்து சுகாதார அறிவுறுத்தல்களை சரிவரப் பேணியிருப்பின் இன்றைய பேரவலம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. கொரோனா என்பதையே முற்றாக மறந்தபடி மக்கள் நடந்து கொண்டதன் விபரீதமே இன்றைய நெருக்கடியாகும். இந்தியாவில் இடம்பெற்ற கும்பமேளா கொண்டாட்டம் மற்றும் சட்டசபைத் தேர்தல் கூட்டங்களும் சமூக இடைவெளி பேணுவதில் பாதிப்பை ஏற்படுத்தின.

இது இவ்வாறிருக்க, இலங்கையிலும் கொவிட் தொற்று இன்று வேகமெடுத்துள்ளது. ஆனாலும் எமது நாடு இன்னுமே மூன்றாவது அலைத் தாக்கத்துக்கு வந்து விடவில்லை. எமது மக்களின் விழிப்புணர்வில் தான் அது தங்கியுள்ளது. கொவிட் பற்றிய அவதானம் என்றும் அவசியமென்பதை நாம் மறந்து விடலாகாது!

editor.tkn@lakehouse.lk

# இலங்கை-சீன பாதுகாப்பு பிரதானிகள் நடத்திய இருதரப்பு கலந்துரையாடல்



சீன நாட்டின் கவுன்சிலரும், பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் வெய் ஃபெங்கின் உத்தியோகபூர்வ விஜயத்தின் ஓர் அங்கமாக இலங்கை மற்றும் மக்கள் சீனக் குடியரசு இடையே இருதரப்பு கலந்துரையாடல் கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நேற்று முன்தினம் (ஏப்ரல் 28) நடைபெற்றது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ஃபெங் தலைமையிலான சீன தூதுக்குழுவுடன் இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தலைமையிலான இலங்கை பிரதிநிதிகள் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென்ஹோங், இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே மற்றும் முப்படைத் தளபதிகள் கலந்து கொண்டனர்.

இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் நீண்ட கால இருதரப்பு உறவுகளை நினைவு கூர்ந்த ஜெனரல் குணரத்ன பௌத்தம், வர்த்தகம், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் உலகளாவிய இணைப்பு உள்ளிட்ட பல வழிகளில் சீனா இலங்கையின் வரலாற்று ரீதியில் நட்பு நாடாக இருந்து வருகின்றது எனக் குறிப்பிட்டார். மேலும், அண்மையில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையினால் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் போது சீன அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்கு பாதுகாப்பு செயலாளர் இதன் போது நன்றி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கிடையில் காணப்படும் இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பு தொடர்பாக கருத்து தெரிவித்த ஜெனரல் ஃபெங், நடைமுறைச் சாத்தியமான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இலங்கையுடன் தொடர்ந்து இணைந்து பணியாற்றவும் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

## வரலாற்று ரீதியான நட்பு நாடுகள் இரண்டுக்குமிடையே இராணுவ உதவிகள் தொடர்பான ஆவணங்களும் கைச்சாத்து

இதேவேளை, சீன தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை பாதுகாப்பு செயலாளர் மற்றும் இலங்கை சுங்க திணைக்கள பணிப்பாளர் நாயகமும் மாணவர் சங்கத்தின் தலைவரும், ஸ்தாபக உறுப்பினருமான மேஜர் ஜெனரல் (ஓய்வு) விஜித ரவிப்பிரிய ஆகியோரின் அழைப்பின் பேரில் சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ஃபெங் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

உயர்மட்ட சீன பாதுகாப்பு தூதுக்குழுவின் உத்தியோகபூர்வ விஜயத்தின் ஓர் அங்கமாக இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ உதவிகள் தொடர்பான ஆவணங்களும் கைச்சாத்திடப்பட்டன.

மேலும் இந்த நிகழ்வை நினைவு கூரும் வகையில் பாதுகாப்பு செயலாளர், முப்படைத் தளபதிகள் மற்றும் சீன தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கி வந்த ஜெனரல் ஃபெங் ஆகியோருக்கிடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந்த இரு தரப்புக் கலந்துரையாடலில் சீன இராணுவ இணைந்த படைகளின் பிரதிப் பிரதாணியான லெப்டினன்ட் ஜெனரல் ஷாவோ யுவான்மிங், மத்திய இராணுவ ஆணைக் குழுவின் சர்வதேச இராணுவ ஒத்துழைப்புக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சி குவேய், பொது அலுவலக பிரதி பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஷென் பாங்வ்,தென் பிராந்திய கட்டளையகத்தின் உதவிப் பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் ஹ_ சியான்ஜுன் மற்றும் சீன தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் சிரேஷ்ட கேர்ணல் வான் டோங் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஸாதிக் ஷிஹான்...

# விழிப்புலனற்ற 13 வயது ஜீவந்தவுக்கு உலகை காணும் வரத்தைப் பெற்றுக் கொடுத்த பிரதமரின் பாரியார்



கலென்பிந்துனு வெள பலுகொல்லேகம கிராமத்தைச் சேர்ந்த விழிப்புலனற்ற 13 வயதுடைய ஜீவந்த ரத்நாயக்க என்ற சிறுவனின் கண் பார்வைக்கான கோரிக்கை சமூக வலைத்தளம் ஊடாக பிரதமரின் இளைய மகனான ரோஹித ராஜபக்ஷவின் கவனத்தை ஈர்த்தது.

அச்சிறுவன் மீது ஏற்பட்ட ஆழ்ந்த அனுதாபத்தைத் தொடர்ந்து ரோஹித ராஜபக்ஷ இது தொடர்பில் தனது தாயாரான, பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

குழந்தைகள் மீது மிகுந்த கருணையும், அன்பும் மிகுந்த பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ, கண் பார்வை கோரிய சிறுவனின் காணொளியை பார்த்து மிகவும் மனம் வருந்தினார்.



இச்சிறுவனுக்கு உலகைக் காண்பதற்கான அதிர்ஷ்டம் கிட்டுமா என சிந்தித்த திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ, ஜீவந்த ரத்நாயக்க என்ற சிறுவனை கொழும்புக்கு அழைத்து வந்தார். நாட்டின் மிகச் சிறந்த மற்றும் புகழ் பெற்ற கண் மருத்துவர்களில் ஒருவரைக் கொண்டு சிறுவனுக்கு கண் சோதனை நடத்துவதற்காகவே அச்சிறுவன் கொழும்புக்கு அழைக்கப்பட்டான்.

கொழும்பு கண் மருத்துவமனையில் இச்சிறுவன் ஒரு நிபுணரின் பரிந்துரையின் பேரில் பல சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டான். சோதனை அறிக்கையின்படி, கண் விழிவெண்படல மாற்று அறுவைச் சிகிச்சை இல்லாமல் இச்சிறுவனின் ஒரு கண்ணுக்கு பார்வையைக் கொடுக்க முடியும் என்று சிறப்பு மருத்துவர் முடிவு செய்தார். அதற்கு நீண்ட கால சிகிச்சை அவசியம் என நிபுணர் பரிந்துரைத்தார்.



அதற்கான சகல சுமைகளையும் ஏற்றுக் கொள்வதற்கு திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ தீர்மானித்தார். அன்று விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்த விழிப்புலனற்ற சிறுவனான ஜீவந்த ரத்நாயக்கவை சகல பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளுக்கு உட்படுத்தி, பல சந்தர்ப்பங்களில் அச்சிறுவனை கொழும்புக்கு அழைத்து வந்து சிகிச்சையளிப்பதற்கு பிரதமரின் பாரியார் நடவடிக்கை மேற்கொண்டார்.

சில மாதங்களின் பின்னர் ஜீவந்த ரத்நாயக்க நேற்றுமுன்தினம் (28) அலரி மாளிகையில் பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷவை மீண்டும் சந்தித்தது ஒரு கண்ணில் நூற்றுக்கு 30 வீதத்திற்கும் அதிகமான பார்வையுடனாகும்.

இன்று இச்சிறுவன் புத்தகங்களை வாசிப்பதற்கு முயற்சிப்பதுடன் தொலைக்காட்சி பார்த்தல், கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு உலகை காண்கிறார்.

ஜீவந்தவிற்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சை இன்னும் நிறைவு பெறவில்லை. இன்றும் அவர் வைத்திய சிகிச்சைக்காகவே கொழும்பிற்கு வருகை தந்துள்ளார். தனக்கு உலகை காண வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, தனது வாழ்வில் ஒளியேற்றிய திருமதி ஷிரந்தி ராஜபக்ஷவை சந்தித்து வணங்கி நன்றி கூறுவதற்காகவே அச்சிறுவன் அலரி மாளிகைக்கு வருகை தந்திருந்தான்.

# இந்தியாவில் நாளுக்கு நாள் தீவிரமடையும் கொரோனா



இந்தியாவில் கொரோனா வைரசின் 2ம் அலை கட்டுக் கடங்காமல் பரவி வருகிறது. தினமும் நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. உயிரிழப்பும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நோய்த்தொற்று அதிகம் உள்ள மாநிலங்களில் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டு, கூடுதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்தியாவில் கொரோனா பாதிப்பு நிலைவரம் குறித்து மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த தகவலின்படி இந்தியாவில் இதுவரை இல்லாத அளவிற்கு, கடந்த 24 மணி நேரத்தில்(நேற்றுக் காலை வரை) 3,79,257 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது முந்திய நாள் பாதிப்பை விட 18297 அதிகம் ஆகும். மொத்த பாதிப்பு 1,83,76,524 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 3645 பேர் கொரோனா பாதிப்பினால் மரணம் அடைந்துள்ளனர். கொரோனா வைரசால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2,04,832 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 1,50,86,878 ஆக உயர்ந்துள்ளது. நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 2,69,507 பேர் குணமடைந்துள்ளனர். நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 30,84,814 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். நாடு முழுவதும் நேற்று முன்தினம் வரை 15,00,20,648 நபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

# தடுப்பூசி விடயத்தில் தவறான புரிதல்கள்!

**கொரோனா தடுப்பூசி குறித்த தவறான புரிதலுடன் பலர் இருப்பதை அவதானிக்க முடிகிறது. உலகளவில் பரவிய கொரோனா தொற்று இலங்கையையும் விட்டு வைக்காத நிலையில், தொற்று பரவ ஆரம்பித்து ஒரு வருடத்தின் பின்னர் தடுப்பூசியை வழங்குவது குறித்து உலக நாடுகள் அவதானம் செலுத்தின.**



இலங்கை ஜனவரி மாதம் 29ஆம் திகதி தொடக்கம் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது. இலங்கைக்கு மொத்தமாக 12 இலட்சத்து 64 ஆயிரம் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனகா தடுப்பூசி நாட்டிற்கு கிடைத்துள்ளதுடன், அவற்றில் 9 இலட்சத்து 25 ஆயிரத்து 242 தடுப்பூசிகள் சுகாதார மற்றும் பாதுகாப்புத் தரப்பு உள்ளிட்ட பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

எனினும் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்டதோடு, ஏற்கனவே இறக்குமதி செய்து எஞ்சியுள்ள 2 இலட்சத்து 36 ஆயிரம் தடுப்பூசிகளை, இரண்டாவது டோஸை பெற்றுக் கொள்வதற்காக காத்திருப்பவர்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, சீன அரசாங்கத்தின் நன்கொடையாக 6 இலட்சம் தடுப்பூசிகள் நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன. நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ள தடுப்பூசிகளை முதலில் இங்கு வசிக்கும் சீனப் பிரஜைகளுக்கு ஏற்ற தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய இதுவரை இரண்டாயிரத்து 469 தடுப்பூசிகள் (முதல் டோஸ்) நாட்டில் வாழும் சீனப் பிரஜைகளுக்கு ஏற்றப்பட்டுள்ளது. மேலும் 13 இலட்சம் 'ஸ்புட்னிக் V' தடுப்பூசிகளை ரஷ்யாவில் இருந்து கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

இலங்கையில் கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தில் இவ்வாறான ஒரு நிலைமை காணப்படுகின்ற நிலையில், பொதுமக்கள் மத்தியில் ஒருவித நம்பிக்கையீனம் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டால் ஏற்படும் பக்க விளைவுகள் குறித்த உறுதிப்படுத்தப்படாத கருத்துக்கள் சமூக வலைத்தளங்களிலும், வாய்மொழி மூலமாகவும் பரவுகின்றமை இதற்கு மிக முக்கிய காரணம் எனலாம். அதனை விட பக்கவிளைவுகள் குறித்த சில தகவல்கள் உண்மை என்ற வகையில் சுகாதாரத் தரப்பினரும் கருத்து வெளியிடுகின்ற நிலையில், பொதுமக்கள் மத்தியில் இந்த அச்சமும், சந்தேகமும் நிலவுகின்றன.

**சிறியளவிலான பக்கவிளைவுகள் தவிர்க்க முடியாதவை. ஆனாலும் கொரோனாவிலிருந்து பாதுகாப்பு பெறுவதாயின், சுகாதார பழக்கவழக்கங்கள் மாத்திரம் கைகொடுக்க போவதில்லை**

உலக சுகாதார ஸ்தாபனம் என்னக் கூறுகிறது?

"ஒவ்வொரு தடுப்பூசி மருந்தும் மிதமான சில பக்கவிளைவுகளை ஏற்படுத்தலாம். தடுப்பூசி உங்களுக்கு போடப்பட்ட இடத்தில் சிறிது வலி ஏற்படலாம், சிவந்து போதல் அல்லது வீக்கம், தலைவலி அல்லது இலேசான காய்ச்சல் ஆகியன தடுப்பூசிகளினால் ஏற்படும் பிரதானமான பக்கவிளைவுகளாகும். இவற்றில் பெரும்பாலானவற்றை மிதமான சில வலிநிவாரணிகளைக் கொண்டு கட்டுப்படுத்தலாம். இவை அச்சப்படுவதற்கான காரணங்கள் அல்ல" என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கின்றது.

அனைத்து கொரோனா தடுப்பூசிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவும் வகையில் கடுமையான பாதுகாப்புகள் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. மேலும் உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் தேசிய ஔடத நிறுவனங்களிடமிருந்து அனுமதியைப் பெறுவதற்கு முன்னர், கொரோனா தடுப்பூசிகள் வைத்திய பரிசோதனைகளில் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவை பாதுகாப்பு மற்றும் செயல்திறனுக்காக சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறைகளை பூர்த்தி செய்கின்றன என்பதை நிரூபிக்க வேண்டுமென உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஏனைய தடுப்பூசிகளையும் போலவே, கொரோனா தடுப்பூசிகளின் பயன்பாடு தொடர்ந்து கண்காணிக்கப்படும் எனவும், அவற்றைப் பெற்றுக் கொள்ளும் அனைவருக்கும் அவை பாதுகாப்பாக இருப்பது உறுதிப்படுத்தப்படும் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இந்த அடிப்படையிலேயே உலக சுகாதார ஸ்தாபனம் அஸ்ட்ரா செனகா தடுப்பூசிக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை, இலங்கையில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட அஸ்ட்ராசெனகா கொரோனா தடுப்பூசிக்கு அனுமதி வழங்கியுள்ள விடயத்தை உலக சுகாதார ஸ்தாபனம் தனது உத்தியோகபூர்வ இணைய தளத்தில் உறுதிப்படுத்தியுள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இந்தியாவின் சீரம் (Serum) நிறுவனம் மற்றும் எஸ்.கே பயோ (SKBio) ஆகிய நிறுவனங்கள் தயாரிக்கும் அஸ்ட்ராசெனகா கொரோனா தடுப்பூசிக்கு அவசர பயன்பாட்டிற்கான அனுமதியயை வழங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கையில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனகா தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களில் மூன்று பேர் இரத்த உறைவு காரணமாக பாதிக்கப்பட்டனர். எனினும் அவர்களின் மரணத்திற்கு தடுப்பூசி மாத்திரம் காரணமல்லவென்பதை உலக சுகாதார நிறுவனம் உறுதி செய்துள்ளது. அஸ்ட்ராசெனகா தடுப்பூசியினால் இரத்தம் உறைதல் தொடர்பாக சில நாடுகள் அச்சத்தை வெளியிடப்பட்டுள்ள போதிலும், உலக சுகாதார ஸ்தாபனம் அதனையே பரிந்துரைத்திருக்கிறது. தடுப்பூசி செலுத்தப்படும் ஒரு மில்லியன் பேரில் 45 பேர் இரத்தம் உறைவினால் உயிரிழப்பதை தவிர்க்க முடியாது என்பதை உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரசவத்தை எதிர்பார்க்கும் பெண்கள் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதை ஒத்தி வைக்க வேண்டிய எதுவித அவசியமில்லையென உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. எவ்வாறெனினும் கர்ப்பமாக இருந்தால், கர்ப்பமாக இருக்கக் கூடும் என எண்ணினால் அல்லது தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் வைத்திய ஆலோசனைக்கு அமைய தடுப்பூசியை பெற்றுக் கொள்ள முடியும் என சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவுறுத்தியுள்ளது.

ஐரோப்பாவில் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட சுமார் 23 ஆயிரம் பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில், 52.6 வீதமானோருக்கு தலைவலியும், 53.1 வீதமானவர்களுக்கு உடல் சோர்வும், 44 அல்லது 26 வீதமானவர்களுக்கு தசை அல்லது மூட்டுவலியும், 33.6 வீதமானவர்களுக்கு காய்ச்சலும், 31.9 வீதமானவர்களுக்கு உடல் குளிர்வது போன்ற தன்மையும், 21.9 வீதமானவர்களுக்கு வாந்தி வருவது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.

தடுப்பூசி பெறும் ஒவ்வொரு ஒரு மில்லியன் மக்களில் 4 முதல் 10 பேர் வரை சில பாரதூரமான பக்கவிளைவை எதிர்கொள்ள நேரிடும். அவர்களில், ஒருவர் உயிரிழக்கக் கூடும் எனினும் இது மிகவும் அரிதான ஒரு விடயம் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கின்றது.

மூச்சுத் திணறல், மார்பு அல்லது வயிற்று வலி, ஒரு காலில் வீக்கம் அல்லது குளிர்,

கடுமையான தலைவலி, மங்கலான பார்வை, காயம் ஏதும் இல்லாத தோலின் கீழ் தொடர்ந்து இரத்தப்போக்கு, சிவப்பு அல்லது ஊதா நிற புள்ளிகள் அல்லது தோலின் கீழ் இரத்தக் கொப்புளங்கள் போன்ற மிக அரிதான பக்கவிளைவுகள் ஏற்படுமாயின் உடனடியாக வைத்தியரின் உதவியை நாட வேண்டும் எனவும், எனினும் இது மிகவும் அரிதானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசியில் அடங்கியிருப்பது ChAdOx1 எனப்படும் வைரஸ் மூலக்கூறாகும். இது மனிதர்களில் எவ்வித நோய்த் தன்மையையும் ஏற்படுத்தாது என்பதுடன், இங்கு அடங்கியுள்ள மரபணு குறித்த பகுதி மூலம் வழங்கப்படும் சமிக்கைக்கு ஏற்ப கொரோனா வைரஸை அடையாளம் காணக் கூடிய குறித்த புரதத்தின் ஒரு பகுதி நம் உடலினுள் உருவாக்கப்படும். அத்துடன் அதேநேரத்தில், நமது நோயெதிர்ப்புக் கட்டமைப்பு இந்த spike protein கூறுகளை அடையாளம் காணவும் அழிக்கவும் ஆரம்பிக்கிறது. புரதக் கூறுகளின் இத்தடுப்பு நடவடிக்கையானது, spike proteinற்கு எதிராக எமது நோயெதிர்ப்புக் கட்டமைப்பினால் புதிதாக உருவாக்கப்பட்ட விசேட பிறபொருளெதிரிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

இது முறையாக இடம்பெற 23 வாரங்களாவது செல்லும். ஆகவேதான் கொரோனா தடுப்பூசிப் பெற்றுக் கொண்டவர்களுக்கு தொற்று ஏற்பட்டுள்ளது என பணியகம் விளக்கமளிக்கிறது. மேலும், இரண்டாவது தடுப்பூசியினை பெற்றுக் கொண்ட பின்னர், இச்செயல்முறை மீண்டும் செயற்படுத்தப்பட்டு எமது உடலில் அதிகளவில் பிறபொருளெதிரிகள் உருவாக்கப்படுகின்றன. இது உடலில் கொரோனா வைரஸிற்கு எதிராக ஆயுதக் களஞ்சியத்தை அமைப்பது போன்றதாகும்" என அந்த அமைப்பு தெரிவிக்கின்றது.

**சமூக வலைத்தளங்கள் ஊடாக பரவுகின்ற ஆதாரமற்ற கருத்துகள் மக்களுக்கு அச்சம் தருகின்றன**

தடுப்பூசி ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது பக்கவிளைகள் ஏற்படுவது வழமையே எனினும், இலங்கையில் கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டதன் பின்னரான காலப் பகுதியில் மக்கள் உடல்நல விடயங்கள் குறித்து சுகாதார அமைச்சு அவதானம் செலுத்தவில்லை. அவ்வாறு செலுத்தியிருந்தால் மக்களுக்கு இவ்வாறான அவநம்பிக்கைகள் ஏற்பட்டிருக்காது என்கிறார் வைத்திய ஆய்வக அறிவியல் கல்லூரியின் தலைவரும், விசேட வைத்திய நிபுணருமான ரவி குமுதேஷ்.

"தடுப்பூசி ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது சில பக்கவிளைவுகள் ஏற்படுவது வழமையே. எனினும் இதுத் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அது உறுதிப் படுத்தப்பட வேண்டும். கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டதன் பின்னரான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பில் ஆராய்வதற்கு தனியான குழுக்களை அமைக்க வேண்டும். தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களின் தகவல்களை திரட்டி ஆராய வேண்டும். சுகாதார அமைச்சு இந்த பணியை மேற்கொள்ள வேண்டும். பக்கவிளைவுகள் குறித்த தகவல்கள் மருந்துச் சாலைகளில் வைத்தியர்கள் ஊடாகவே பதிவாகின்றன. அவர்களிடம் இருந்து தகவல்களைப் பெற சரியான வேலைத் திட்டமொன்று இல்லை" என்கிறார் அவர்.

### பொய்யை பரப்பும் சமூக வலைத்தளங்கள்:

"பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் வெளியாகும் சில விடயங்களை நம்பாமல் இருக்க முடியவில்லை. தடுப்பூசி தொடர்பில் உண்மைத் தகவல்களை எவ்வாறு அறிந்து கொள்வது" என ஒருவர் கேள்வி எழுப்பினார்.

கொரோனா தடுப்பூசிகளைப் பற்றிய தவறான தகவல்களை நீக்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது. சுகாதார நிபுணர்களின் உதவியுடன் தடுப்பூசிகள் குறித்த தவறான கூற்றுக்களை அகற்ற திட்டமிட்டுள்ளதாக பேஸ்புக் குறிப்பிட்டுள்ளது. மேலும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படாத தடுப்பூசிகள் குறித்த தகவல்களை நீக்கவுள்ளதாகவும் பேஸ்புக் அறிவித்துள்ளது.

இவ்வாறான ஒரு எதிர்மறையான சிந்தனை இலங்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தாலும், பலர் தடுப்பூசியை நம்பிக்கையுடன் பெற்றுக் கொண்டுள்ளனர்.

### மக்களின் நம்பிக்கை

"தடுப்பூசியை பெற்ற பின்னர் எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்படவில்லை. சாதாரணமாகதான் இருக்கு. நான்கு நாட்கள் குளிக்க வேண்டாம் என அறிவுறுத்தினார்கள். எவ்வித பாதிப்பும் இல்லை" என்கிறார் கொட்டாஞ்சேனை பிரதேசத்தை 65 வயதுடைய ஒருவர்.

"தடுப்பூசி போட்டுக் கொண்டேன். எவ்வித நோய் அறிகுறியும் எனக்கு ஏற்படவில்லை. எனினும் ஒருசிலருக்கு மூன்று நாட்களுக்கு காய்ச்சல் காணப்பட்டதாக கூறினார்கள். சிலருக்கு உடல்வலி ஏற்பட்டதாக தெரிவித்தார்கள். என்னுடைய குடும்பத்தில் அனைவரும் போட்டுக் கொண்டோம். சிறிய வலிகள் ஏற்படலாம். எனினும் தைரியமாக இதனை போட்டுக் கொள்வது நல்லது" என்கிறார் கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயது பெண் ஒருவர்.

"தடுப்பூசி போட்டுக் கொண்டதன் பின்னர் எவ்வித பிரச்சினையும் எனக்கு ஏற்படவில்லை. எங்களுடைய நன்மைக்கே தடுப்பூசியை அரசாங்கம் வழங்குகிறது. அதனைப் பெற்றுக் கொள்வது நல்லது" என்கிறார் கொச்சிக்கடையைச் சேர்ந்த மற்றுமொரு பெண்.

கொரோனா தொற்று பரல ஆரம்பித்த கடந்த வருட ஆரம்பத்தில் தடுப்பூசியை பெற்றுக் கொள்வது தொடர்பில் பொதுமக்களின் அவதானம் திரும்பியிருந்தது. எனினும் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளக் கூடிய சூழ்நிலையில், அது தொடர்பிலான தவறான புரிதல் இன்று பொது மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

தடுப்பூசி ஊடாக சில பக்கவிளைவுகள் ஏற்படும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை, அதற்காக தடுப்பூசியை பெற்றுக் கொள்வதை தவிர்ப்பது எந்த விதத்திலும் நியாயமாக அமையாது என்பதே சுகாதார நிபுணர்கள் மற்றும் சுகாதார நிறுவனங்களின் கருத்தாக அமைந்துள்ளது.

இவ்வாறான சூழலில், கொரோனா தொற்று நோயை கட்டுப்படுத்த வேண்டுமெனின், தடுப்பூசியை விரைவாக வழங்குவதே அதற்கு ஒரே தீர்வு என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தடுப்பூசி மூலமே கொரோனா வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்த முடியுமென ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

மேலும், மக்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான முறையான திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவிக்கின்றார். தற்போது உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மற்றும் அங்கீகரிக்கப்படவுள்ள நான்கு கொரோனா தடுப்பூசிகளை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

ஆகவே தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் இலங்கை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.



**ச. பார்த்தீபன்...**

---

# ஊடகம், கற்பித்தல் துறைகளில் சிறப்பான பணியாற்றிய ஆசிரியர் எம்.ஐ.எம்.அஸ்ஹர்

**சாய்ந்தமருது_17 , ஓய்வு பெற்ற அதிபர் மர்ஹூம் ஏ.ஸி.எம்.இப்றாஹிம்_ மர்ஹூமா கதீஜா இப்றாஹீம் தம்பதிகளின் புதல்வரும் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிக்குடி சிரேஷ்ட ஆசிரியருமான எம்.ஐ.எம்.அஸ்ஹர் நாளை 01.05.2021 அன்று தனது 60 வயதில் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.**

கற்பித்தல் புலத்தில் 35 வருடங்களை பூர்த்தி செய்துள்ள இவர், தனது ஆரம்பக் கல்வியை குருநாகல் மாவட்டத்திலுள்ள பக்மீகொல்ல அல் மினா மகாவித்தியாலயத்திலும், தரம் இரண்டு முதல் ஐந்து வரை சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலயத்திலும், தரம் ஆறு முதல் உயர்தர உயிரியல் விஞ்ஞானப் பிரிவு வரை கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியிலும் சிறிது காலம் யாழ்ப்பாணம் வைத்தியேஸ்வரா கல்லூரியிலும் கற்றார்.

1982 முதல் 1985 வரை மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு தேசிய டிப்ளோமா தொழில்நுட்பம் NDT (Agriculture Engineering) விவசாய பொறியியல் பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்டு அம்பாறை ஹார்டி சிரேஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலமாக மூன்று வருட கற்கையை நிறைவு செய்திருந்தார்.

இவரது தந்தை அந்த காலகட்டத்தில் அமைச்சராக இருந்த மர்ஹூம் எம்.எஸ்.காரியப்பரின் ஆலோசனையின் பேரில் சாய்ந்தமருது 6 ஆம் பிரிவில் (தற்போது 17 ஆம் பிரிவு) சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலயை ஆரம்பித்து அதன் ஸ்தாபக அதிபராக கடமையாற்றி இருந்தார். தனது தந்தை வழியிலேயே தானும் கல்விப் புலத்திற்குள் நுழைய வேண்டும் என்ற ஆசையில் ஆசிரிய சேவையில் தன்னை இணைத்துக் கொண்டார் அஸ்ஹர்.



இவர் 1985.12.26 ஆம் திகதி கம்பஹா மாவட்டத்தில் உள்ள மல்வான அல் முபாரக் தேசியக் கல்லூரியில் (முஸ்லிம் ஆண்/ பெண் கலவன் பாடசாலை )முதல் நியமனத்தைப் பெற்று, அங்கு உயர்தர விஞ்ஞானப் பிரிவை ஆரம்பித்து அதன் பகுதித் தலைவராக இருந்து மாணவர்களுக்கு தாவரவியல் பாடத்தை கற்பித்தார். கம்பஹா மாவட்டத்திலிருந்தே பல்வேறு துறைகளுக்கும் மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்ல இவர் காரணமாக இருந்துள்ளார்.

10 வருடங்களாக மல்வான அல் முபாரக் தேசியக் கல்லூரியில் தாவரவியல் பாடத்தை கற்பித்த இவர் 1994 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் தான் கல்வி கற்ற கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரிக்கு (முஸ்லிம் ஆண்கள் பாடசாலை) இடமாற்றம் பெற்று வந்தார். அங்கு கடந்த 22 வருடங்களாக உயர்தர விஞ்ஞானப் பிரிவில் தாவரவியல் பாட ஆசானாகவும், கல்லூரியில் ஆங்கில பிரிவு bilingual ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முதல் பகுதித் தலைவராகவும், தரம் 6 முதல் தரம் 8 வரையான பகுதிகளுக்கு பகுதித் தலைவராகவும், ஆசிரிய நூலகராகவும், அதிபர் காரியாலய நிர்வாக பொறுப்பாளராகவும், விளையாட்டுக் குழு செயலாளராகவும், சாய்ந்தமருது கோட்டப் பாடசாலைக்கான சுற்றாடல் ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

பல்துறையிலும் செயலாற்றக் கூடிய இவர் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் புலமை பெற்றவராவார். இலங்கையில் வெளியாகும் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூல தேசிய பத்திரிகைகளுக்கு ஊடகவியலாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

தனது உயர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கும், தனக்கு அறிவூட்டிய தமிழ் ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் அவர்களிடம் கற்ற கல்வியை அதே சமூகத்திற்கு வழங்க வேண்டும் என்ற நோக்கில் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயத்துக்கு (தேசிய பாடசாலை_களுவாஞ்சிக்குடி) தானாக விரும்பி இடமாற்றம் பெற்று வந்த இவர் நாளை ஓய்வு பெற்று செல்கின்றார்.

கல்வித்துறையில் மட்டுமல்ல விளையாட்டு துறையிலும் சிறந்து விளங்கிய இவர் 1980 ஆம் ஆண்டு சாய்ந்தமருது பிரதேசத்தில் பிரேவ் லீடர்ஸ் விளையாட்டு கழகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இருந்து அக் கழகத்தின் செயலாளராகவும் 2000 ஆம் ஆண்டு முதல் அதன் தலைவராகவும் இருந்து வந்துள்ளதுடன் சாய்ந்தமருது தாமரை விளையாட்டு மைதானம் உருவாவதற்கும் காரணகர்த்தாவாக திகழ்ந்துள்ளார்.

கல்முனை கலை இலக்கிய பொதுப்பணி மன்றம், கிழக்கு நட்புறவு ஒன்றியம் ஆகியவற்றிலும் இணைந்து செயற்பட்டு வருகின்றார். தாவரங்கள் மீது மிகவும் பற்றுள்ள இவர், தனது வீட்டுத் தோட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இன பல்லின தாவரங்களை பராமரித்து வருவதுடன் வீட்டுச் சூழலையும் அழகாக வைத்துள்ளார்.

**35 வருட அரச சேவையிலிருந்து நாளை ஓய்வு**

**ஏ.எல்.எம்.ஷினாஸ்...**
(பெரியநீலாவணை விசேட நிருபர்)
**எம்.எம்.ஜெஸ்மின்...**

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் தப்பிக்க முடியாது

## பல்வேறு கோணங்களில் விரிவான விசாரணை

## பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண

**ஸாதிக் ஷிஹான்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் விரிவாகவும் பல்வேறு கோணங்களிலும் நடைபெற்று வருவதுடன் இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் எந்தவிதத்திலும் தப்பிக்க முடியாதவாறு சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென்று பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரட்ண தெரிவித்தார்.

குற்றவாளிகள் தப்பிக்காதவாறு சரிவர விசாரணைகள் நடத்தப்பட்டு பலமான ஆதாரங்கள் தயாரித்து நீதிமன்றில் சமர்பிக்க சிறிது காலம் தேவைப்படும் என்று தெரிவித்த அவர், இந்த சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட உயிரிழந்த, அங்கவீனமுற்ற மக்களுக்கு உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்றார்.

தேசிய பாதுகாப்பு, பொது மக்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பான நிறுவனம் பாதுகாப்பு அமைச்சு என்ற வகையில் மேற்படி சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று தான் உறுதி மொழிவழங்குவதாக பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

யுத்தத்தின் போது உயிர் நீத்த படைவீரர்களின் சம்பள முரண்பாடு தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்ற விஷேட செய்தியாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர் மேலும் விளக்கமளிக்கையில் :

ஊயிர்த்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பு பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் போது நீதிமன்றில் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் உறுதியான சாட்சியங்கள் ஆவணங்கள் சமர்பிக்க முடியுமானதாக இருக்க வேண்டும். இல்லாவிடின் குற்றவாளிகள் ஏதாவது சட்ட காரணங்களை காண்பித்து தப்பிக்க வாய்ப்புண்டு அவ்வாறு தப்பித்தால் நாங்கள் வெட்கிக் வேண்டி ஏற்படும். எனவே சம்பந்தபட்ட நபர்கள் தொடர்பிலும் அவர்களுக்கு எங்கிருந்து நிதி வந்தது இதன் பின்னணியில் யார் உள்ளனர போன்ற பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முடுக்கிவிட உள்ளதால் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றது என்றார்.

இதேவேளை, புர்கா அணிவதை தடைசெய்ய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது இது தொடர்பில் உங்களது கருத்து என்னவென எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர்: புர்கா என்ற வசனத்தை பயன்படுத் நான் விரும்பவில்லை ஏனெனில் ஒரு இனத்தை மதத்தை இலக்கு வைத்து தீர்மானமில்லை மாறாக தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் வகையிலான முகத்தை மூடும் சகல நடவடிக்கைகளையும் தடைசெய்வதற்கான நடவடிக்கைக்கு தேவையான சட்டத்தை வரையும் செயற்பாடே முன்னெடுக்கப் படவுள்ளது என்றார்.

# சீன அமைச்சர் நாடு திரும்பினார்



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வந்த சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் ஃ பெங்கின், நேற்று நாடு திரும்பினார்.

இலங்கைக்கு விஜயம் செய்த சீன பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி மற்றும் பிரமருடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த அவர், இச் சந்திப்பினூடாக இரு நாட்டிற்குமிடையிலான தொடர்பு மேலும் வலுப்பெற்றதாக தெரிவித்திருந்தார்.

அதன்பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினரையும் சந்தித்து அவர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார்.

கடந்த வருடம் ஒக்டோபரில் சீனாவின் மூத்த இராஜதந்திரி யாங் ஜீச்சியின் விஜயத்தைத் தொடர்ந்து சீன அதிகாரி ஒருவர் இலங்கைக்கு மேற்கொண்ட இரண்டாவது உயர் மட்ட விஜயம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தேசிய சேமிப்பு வங்கி

# கொவிட்19 நெருக்கடிக்கு மத்தியில் கடந்த ஆண்டு ரூ.15 பில்.இலாபம்

## தலைவர் கேசல ஜயவர்தன

**சுப்பிரமணியம் நிசாந்தன்**

கொவிட்19 நெருக்கடிக்கு மத்தியில் வரிச் செலுத்துவதற்கு முன்னதாக கடந்த ஆண்டு தேசிய சேமிப்பு வங்கி 15 பில்லியன் ரூபாய் இலாபத்தை பெற்றுள்ளதாக வங்கியின் தலைவர் கேசல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

49 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த தேசிய சேமிப்பு வங்கி, கடந்த வருடம் போன்று வரிச் செலுத்தலுக்கு முன்னர் இவ்வாறு பாரிய இலாபத்தை பெற்றிருக்வில்லை. வரிச் செலுத்தலுக்கு பின்னர் மொத்தமாக 10.5 பில்லியன் இலாபத்தை தேசிய மேசிப்பு வங்கி பெற்றுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரம் அவரது 'சுபிட்சத்தின் நோக்கை' அடைந்துக்கொள்வதற்கான பின்புலத்தை உருவாக்கிக் கொடுப்பது வங்கிகளின் பணியாகும். நாட்டின் பொது மக்களின் தேவையை கருத்தி வினைத்திறன் வாய்ந்த சேவையை எமது மக்களுக்கு வழங்கி வருகிறோம்.

ஊலகளாவிய கொவிட் தொற்றுக்காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் வர்த்தகர்களுக்கு கைகொடுக்கவும் நாம் எதிர்பார்க்கிறோம். ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய 04 இற்கும் 09 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வட்டி சதவீதத்தில் வர்த்தகர்களுக்கு கடன்களை பெற்றுகொடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

## மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும்,...

தெரிவித்தார். இதன்படி கொச்சிக்கடை, தோப்புவ, கொட்டதெனியாவ, படல்கம, நிட்டம்புவ, ஹெலகல சந்தி, மீரிகம,கிரிவுல்ல, தொம்பே,சமனபெத்த, ஹங்வெல்ல,வனஹாகொடை, அளுத்கம, பெந்தர, தினியாவல சந்தி, இங்கிரிய, கெட்டகெதல்ல, பதுரெலிய, கலவானை சமன் தேவாலயம் அருகில், மீகஹாதென்ன, அவித்தாவ மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெலிபென்ன நுழைவாயிலுக்கு அருகிலும் இவ்வாறு சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுபவர்கள் மற்றும் உள்நுழைபவர்களுக்கு எழுமாறான என்டிஜன் பரிசோதனைகளும் நடத்தப்படவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## தூர ரயில் சேவைகள்...

செய்யப்படவுள்ளன.

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை, கண்டி, காங்கேசன்துறை, பொலன்னறுவை, பெலிஅத்த ஆகிய பகுதிகளுக்கு முன்னெடுக்கப்படும் ரயில் சேவைகளே இவ்வாறு இரத்து செய்யப்படவுள்ளன.

தூர பிரதேச ரயில் சேவைக்கான ஆசன ஒதுக்கீட்டு முன்பதிவு மிகவும் குறைந்த அளவில் இடம்பெறுவதை கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

## இந்தியாவின் நிலை குறித்து...

அழிவைத் தடுக்குமென்று நான் நம்புகிறேன். கொரோனா தொற்றுநோயின் தற்போதைய அழிவை இந்தியா விரைவில் முறியடிக்கும் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ள ஜனாதிபதி, இந்தியாவின் சுகாதாரத் துன்பம் மக்களுக்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையிலுள்ள புத்த மத குருமார்கள் 'இந்திய மக்களுக்கு ஆசிர்வதிக்க' ரத்தனா சூத்ராவை 'கருணையுடன் பாராயணம் செய்ய திட்டமிட்டுள்ளனர்.

இது நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான பிணைப்பையும் உறவையும் நிரூபிக்கிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அர்ஜுன் மகேந்திரன் இன்றி...

முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டி முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணநாயக்க மற்றும் அவரது சக பிரதிவாதிகள் மீது பதிவுசெய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணை தொடர்பிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வழக்கில் அரச தரப்பில் ஆஜராகிய சட்டத்தரணி லக்மினி கிரிஹாகம நடத்தை விதிகளின் 458 வது பிரிவின் பிரகாரம் வழக்கின் மூன்றாவது பிரதிவாதிகளாக அர்ஜுன் மகேந்திரன் மற்றும் ஜி.புஞ்சிஹேவா ஆகியோரின்றி வழக்கு விசாரணைகளை முன்னெடுக்க அனுமதி கோரி இருந்தார். அதன்பிறகு, நீதிமன்றத்தின் அனுமதியுடன், பிரதிவாதியை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களிடம் அரச சட்டத்தரணி சான்றுகளை பதிவு செய்தார்.

## இந்தியாவிலிருந்து வருவோர்...

பாதுகாத்துக்கொள்வதற்கும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் சுகாதாரத்துறையும் அரச இயந்திரமும் தயாராகவே உள்ளன.

அதன்படி, சுற்றுலாப் பயணிகளின் வருகையை கட்டுப்படுத்துவது அல்லது சுகாதார பரிந்துரைகளுக்கு ஏற்ப விமான நிலையத்தில் பயணக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தல் குறித்து தீர்மானங்கள் எடுக்கப்படும்.

திட்டத்தினூடாகவே இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகின்றனர். இங்கு எந்தவிதமான மோசடிகளும் இடம்பெறவில்லை. இப்போது கூட இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன.

இந்தியாவின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, நாட்டிற்கு வருகை தரும் இந்திய சுற்றுலாப் பயணிகள், தனி ஹோட்டல் அறைகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்தியாவுடனும் கலந்துரையாடி, இந்த நேரத்தில் இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். என்றாலும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஒரே நேரத்தில் தடைசெய்து விமான நிலையத்தை மூடிவிட முடியாது.

சுற்றுலாப் பயணிகளை விட வெளிநாட்டில் பணிபுரியும் எமது இலங்கையர்களே அதிகமாக நாட்டுக்கு வருகின்றனர். இவர்கள் இலங்கைக்கு வருவதில் எவ்வித தடைகளும் ஏற்படுத்தப்படவில்லை. தனிமைப்படுத்தல் மையங்களில் இடப் பற்றாக்குறை இருந்தால், வெளிநாட்டு தொழிலாளர்களின் வருகையை கட்டுப்படுத்த வேண்டியிருக்கும். இதேவேளை தற்போது பொது மக்கள் விமான நிலையத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை. பயணிகள் மட்டுமே விமான நிலையத்திற்குள் நுழைய முடியும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

## இராணுவ கட்டிடங்கள், உல்லாச...

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டிலுள்ள அனைத்து ஆஸ்பத்திரிகளிலும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளுக்கான சிகிச்சை கொள்ளளவு அறிவிக்கப்பட்டுள்ளது. தேவைப்படின் மேலும் வசதிகளை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்திற்கு சொந்தமான கட்டடங்களை சிகிச்சை நிலையங்களுக்காக வழங்க தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ள அவர், மேலும் வசதிகள் தேவைப்பட்டால் உல்லாசப்பிரயாண ஹோட்டல்களையும் அதற்காக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஊடக நிறுவனங்களின் செய்திப்பிரிவு பொறுப்பாளர்களுடன் நடைபெற்ற உரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தற்போது உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள் சில சிகிச்சைக்கான தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கு நாட்டின் அனைத்து பிரஜைகளினதும் பூரண ஒத்துழைப்பு மிகமிக அவசியம் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் தொற்று எண்ணிக்கை அதிகரித்து வருவதால் சில தினங்களுக்கு நாட்டை முழுமையாக முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாடெங்கிலுமுள்ள கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களை அடையாளம் காண்பதற்கு வசதியாக அவ்வாறு சில தினங்களுக்கு நாட்டை முடக்குமாறு அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.(ஸ)

## பள்ளிவாசல் தொழுகைக்கு...

வழங்குமாறும் பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டல்கள் திணைக்களம் அவசர அறிவிப்பை விடுத்துள்ளது.

முஸ்லிம் பள்ளி வாசல்கள் மற்றும் அறக்கட்டளைகள் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டல்கள் திணைக்கள பணிப்பாளர் ஏ.பி.எம். அஷ்ரபினால் பள்ளிவாசல்கள் நிர்வாக சபையினருக்கு கொரோனோ தொற்றை அடிப்படையாக கொண்டு இந்த அவசர அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில், சகல பள்ளிவாசல்களிலும் தராவீஹ், ஜூம்ஆத் தொழுகை மற்றும் பயான்கள், கியாமுல்லைல், இஃதிகாப், தவ்பா போன்ற அனைத்து கூட்டுச் செயற்பாடுகளையும் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்தல், எந்தவொரு பள்ளியிலும் ஒரு நேரத்தில் அதி கூடியது 25 பேர் என்ற உச்ச வரம்புக்குட்பட்டு ஐவேளை ஜமாஅத் தொழுகைக்கு அனுமதி வழங்கல், முகமறைப்பு ( Mask ) அணிதல், ஒரு மீட்டர் இடைவெளியைப் பேணல், தொழுகை விரிப்பை கொண்டு வருதல், வீட்டிலிருந்து வுழு செய்து கொண்டு வருதல் ஆகியன கட்டாயமாகும்.

வுழூ செய்யும் பகுதியை மூடி வைத்தல், தனிமைப்படுத்தப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட சகல பகுதிகளிலும் அனைத்து பள்ளிவாசல்களும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருத்தல் வேண்டும். சுகாதார மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளால் வெளியிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து வழிகாட்டல்களும் வக்பு சபையின் முன்னைய பணிப்புரைகளும் மிகக் கண்டிப்பாகப் பின்பற்றப்படல் வேண்டும்.

மேலுள்ள வழிகாட்டல்களை பின்பற்றுவது நடைமுறைச் சாத்தியமற்றது அல்லது சிரமம் எனில் பள்ளிவாசல்களை மூடுவதற்கு நம்பிக்கையாளர்களுக்கு பொறுப்பாளார்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது என்று அறிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பாக ஜம் இய்யதுல் உலமா சபையும் 26 அமைப்புகளுடன் இணைந்து கூட்டறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

## விழிப்புலனற்ற 13 வயது ஜீவந்தவுக்கு...

பிரதமரின் பாரியார் திருமதி. ஷிரந்தி ராஜபக்ஷ, கண் பார்வை கோரிய சிறுவனின் காணொளியை பார்த்து மிகவும் மனம் வருந்தினார்.

இச்சிறுவனுக்கு உலகைக் காண்பதற்கான அதிஷ்டம் கிட்டுமா? என சிந்தித்த திருமதி.ஷிரந்தி ராஜபக்ஷ, ஜீவந்த ரத்நாயக்க சிறுவனை கொழும்புக்கு அழைத்து வந்தார். அது நாட்டின் மிகச் சிறந்த மற்றும் புகழ்பெற்ற கண் மருத்துவர்களில் ஒருவரைக் கொண்டு சிறுவனுக்கு கண் பரிசோதனைகளை நடத்தினார்.

கொழும்பு கண் மருத்துவமனையில் இச்சிறுவன் ஒரு நிபுணரின் பரிந்துரையின் பேரில் பல சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார். சோதனை அறிக்கையின்படி, கண் மாற்று அறுவை சிகிச்சை இல்லாமல் சிறுவனின் ஒரு கண்ணுக்கு பார்வை கொடுக்க முடியும் என்று சிறப்பு மருத்துவர் முடிவு செய்தார். அதற்கு நீண்ட கால சிகிச்சை அவசியமென நிபுணர் பரிந்துரைத்தார்.

அதற்கான சகல சுமைகளையும் ஏற்றுக்கொள்வதற்கு திருமதி. ஷிரந்தி ராஜபக்ஷ தீர்மானித்தார். அன்று விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள பிரதமரின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் சந்தித்த விழிப்புலனற்ற ஜீவந்த ரத்நாயக்க சிறுவனை சகல பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளுக்கு உட்படுத்தி, பல சந்தர்ப்பங்களில் அவரை கொழும்பிற்கு அழைத்துவந்து சிகிச்சையளிப்பதற்கு பிரதமரின் பாரியார் நடவடிக்கை மேற்கொண்டார்.

சில மாதங்களின் பின்னர் ஜீவந்த ரத்நாயக்க அலரி மாளிகையில் பிரதமரின் பாரியார் திருமதி.ஷிரந்தி ராஜபக்ஷவை மீண்டும் சந்திப்பது ஒரு கண்ணில் நூறுக்கு 30 வீதத்திற்கும் அதிகமான பார்வையுடனாகும்.

இச்சிறுவன் புத்தகங்களை வாசிப்பதற்கு முயற்சிப்பதுடன், தொலைக்காட்சி பார்த்தல், கையடக்க தொலைபேசியை பயன்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு உலகை காண்கிறார்.

ஜீவந்தவிற்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சை இன்னும் நிறைவுபெறவில்லை. இன்றும் அவர் வைத்திய சிகிச்சைக்காகவே கொழும்புக்கு வருகை தந்துள்ளார். அதன்போது தனக்கு உலகை காண வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து தனது வாழ்வில் ஒளியேற்றிய திருமதி.ஷிரந்தி ராஜபக்ஷவை சந்தித்து வணங்கி நன்றி கூறுவதற்காகவே சிறுவன் அலரி மாளிகைக்கு வருகை தந்திருந்தார்.

## 2,500 படுக்கை வசதிகளை...

மேற்கொண்ட ஆலோசனைகளுக்கமையவே முன்னேற்பாடாக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய இராணுவம் 1,500 படுக்கைகளையும், கடற்படை 500 படுக்கைகளையும் விமானப் படை 500 படுக்கைகளையும் தயார் செய்யவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நாடு முழுவதையும் முற்றாக முடக்கும் எந்தவொரு தேவையும் தற்போதைக்கு இல்லையென்றும் தொற்றாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்படும் பிரதேசங்கள் மாத்திரமே முழுமையாக முடக்க தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றார்.

பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற விஷேட செய்தியாளர் மாநாட்டின் போது, கொரோனா தொற்று தொடர்பில் எதிர்காலத்தில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் மேலும் விளக்கமளிக்கையில்: முழு நாட்டையும் முடக்குவது என்பது இலகுவான ஒன்றல்ல. அது நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். எனவே தான் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் பிரதேசங்களை மாத்திரம் முடக்க அரசாங்கமும் சுகாதார தரப்பினரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொவிட் 19 பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் என்ற வகையில் இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தலைமையிலான குழுவினர் படைத் தரப்பு சுகாதார தரப்பு மற்றும் புலனாய்வுத் தரப்பு ஆகியவற்றுடன் இணைந்து பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

உலகின் பலம் பொருந்திய நாடுகள் பல கொரோனாவுக்கு முன்னால் மண்டியிட்டுள்ள நிலையில் எமது நாடு இதுவரை குறைந்த பாதிப்பை பேணும் வகையில் சிறந்த செயல் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதற்காக அனைத்து தரப்பினரும் வழங்கிவரும் பங்களிப்பு வரவேற்கத்தக்கது என்று தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர், சுகாதார தரப்பினர் வழங்கியுள்ள வழிகாட்டல்களை உரிய முறையில் கடைப்பிடிக்குமாறு நாட்டு மக்களிடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் தெரிவித்தார்.

அவ்வாறு வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்றும் பட்சத்தில் கொரோனா தொற்றினால் ஏற்படும் பாரிய பாதிப்புக்களிலிருந்து நாட்டை பாதுகாக்க முடியும் என்றும் பாதுகாப்புச் செயலாளர் சுட்டிகாட்டினார்.

## முன்னேற்பாடு தொடர்பில்...

நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் நாகதீப விகாராதிபதி வண.நவதகல பதும கீர்த்தி தேரரும் வெசாக் பண்டிகை நடத்துவது தொடர்பான முன்னேற்பாடுகள், ஒழுங்கமைப்புகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், ஆளுநரின் இணைப்புச் செயலாளர், மக்கள் தொடர்பு அதிகாரி மற்றும் வேலனை பிரதேச செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த சில வாரங்களாக தேசிய மற்றும் மாகாண ரீதியில் நடைபெற்ற தேசிய வெசாக் பண்டிகைக்கான கலந்துரையாடல்களில் எட்டப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் முன்னேற்பாட்டு வேலைகள் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட வேலைகளின் கள நிலவரத்தை ஆய்வு செய்த ஆளுநர், தலைமை விகாராதிபதியை சந்தித்து மேலதிக ஏற்பாடுகள் தொடர்பிலும் கலந்தாலோசித்தார்.

## சிவராமின் நினைவு...

சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து , மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

ஊடகவியலாளரான தராக்கி சிவராம் என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைத்து இனம்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட பின்னர் பாராளுமன்றத்துக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

அதேபோல், ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளராகக் கடமையாற்றி வந்த வேளை கடந்த 2007ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் திகதி காலை 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இந் நினைவு நிகழ்வில் கொரோனோ தொற்றினால் உயிரிழந்த ஊடகவியலாளர்கள் மற்றும் மக்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் கொரோனோ தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் நலம் பெற வேண்டி பிரார்த்தனையும் நடைபெற்றது.

## திருகோணமலை... (03 ஆம் பக்கத் தொடர்)

விடுத்துள்ளனர். அரசாங்கம் இந்த விடயத்தில் சிறந்த தீர்மானமொன்றை எடுக்க வேண்டும். அத்துடன் ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்கள் தொடர்பிலும் பல சந்தர்ப்பங்களில் எச்சரித்திருந்தோம். அதனை கேட்காமையால் தற்பொது ஆலய உற்சவங்களை அடிப்படையாகக் கொண்ட கொத்தணிகள் உருவாகியுள்ளன. அனைத்து மதத் தலைவர்களும் இதுகுறித்து உரிய தீர்மானமொன்றை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தடுப்பூசிகள் தேவைப்படும்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஹெலிகப்டர்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. நாட்டின் தேசிய பாதுகாப்பு பாதுகாக்கப்பட வேண்டும் தான்.

ஆனால் இந்த முக்கியமான நேரத்தில் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் ஹெலிக்கப்டர்கள் மற்றும் இராணுவ வாகனங்களை அவசரமாக கொள்வனவு செய்யும் அரசாங்கத்தின் நோக்கம் என்ன? கொவிட் தடுப்பூசிகளே எமக்கு முதலில் தேவைப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

## இலங்கை பொலிஸ்... (03 ஆம் பக்கத் தொடர்)

கண்டி வித்தியார்த்த வித்தியாலயம், அனுராதபுரம் நிவத்தக தேசிய வித்தியாலயம், காலி புனித அலோசியஸ் மஹா வித்தியாலயம், அம்பாறை டீ.எஸ் சேனாநாயக்க மஹா வித்தியாலயம் என்பன தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தற்போது விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அனுமதி அட்டை பரீட்சை தினத்திற்கு முன்பு கிடைக்காவிடின் பரீட்சைக்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் 0115811921 அல்லது 0115811925 தொலைபேசி இலக்கங்களுக்கு அலுவலக நேரங்களில் தொடர்பு கொண்டு விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

## ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் 210 தொற்றாளர்களுக்கு சிகிச்சை

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள பழைய வைத்தியசாலை கொவிட் 19 கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றியமைக்கப்பட்டது. தற்பொழுது இங்கு கொவிட் 19 கொரோனா தொற்றுக்கு உள்ளான 210 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக கொவிட் 19 கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு பொறுப்பான வைத்திய அதிகாரி டொக்டர் சுரங்க ஒபேசேகர தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள பழைய வைத்தியசாலையின் கொவிட் 19 கொரோனா சிகிச்சை நிலையத்தில் கொவிட் 19 கொரோனா தொற்றுக்கு உள்ளான 270 நோயாளர்களுக்கு சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் காணப்படுகின்றன.

சிகிச்சை பெறுவர்களில் ஹம்பாந்தோட்டை மாவட்டம் மற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த நோயாளர்களும் சிகிச்சை பெற்று வருவதோடு ஆண்கள் மாத்திரமே சிகிச்சை பெற்று வருவதாகவும் டொக்டர் சுரங்க ஒபேசேகர தெரிவித்தார்.

# வெளி மாவட்டங்களுக்கான சுற்றுலா பயணங்களை தவிர்க்கவும்

## மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டம் தற்போதைய சூழ் நிலையில் பாதுகாப்பாக உள்ள போதிலும், நாங்கள் கவனம் இன்றி நடந்து கொண்டால் எதிர் வரும் நாட்களில் நாங்கள் பாரதூரமான நிலையை எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என சுகாதார துறையினர் எச்சரித்துள்ளனர். எனவே மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்று அபாயத்தில் இருந்து மக்களை பாதுகாப்பது தொடர்பான விசேட ஆலோசனைக் கூட்டம் நேற்று முந்தினம் புதன்கிழமை(28) மாலை 4 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,,,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து சட்ட விரோதமான முறையில் கடல் மார்க்கமாக தலைமன்னார் பகுதிக்கு வந்த 4 நபர்களை கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

அவர்களுக்கு பீ.சி.ஆர்.பரிசோதனை மேற்கொண்ட போது அவர்களில் ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் போது இந்திய மீனவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி வருவதாக தகவல்கள் வருவதாக குறித்த கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.மீனவர்களுக்கு உரிய ஆலோசனைகளையும், விழிர்ப் புணர்வையும் வழங்க ஆலோசித்துள்ளோம். மன்னார் மாவட்டம் தற்போதைய சூழ் நிலையில் பாதுகப்பாக உள்ள போதிலும், நாங்கள் கவனமின்றி நடந்து கொண்டால் எதிர்வரும் நாட்களில் நாங்கள் பாரதூரமான நிலையை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என சுகாதார துறையினர் எச்சரித்துள்ளனர். எனவே கூடுதலாக ஒன்று கூடுவது,முகக்கவசம் அணியாது பயணம் மேற்கொள்வது போன்ற விடையங்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் எமது சமூகத்தை பாதுகாக்க தனிப்பட்ட ஒவ்வொரு நபரும் இந்த விடயங்களில் கவனம் எடுத்து செயல்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் மூடப்பட்டதால், விவசாயிகளுக்கு பீ.சீ.ஆர்



**(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் 14 நாட்களுக்கு மூடப்பட்டுள்ளதால், தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்திற்கு வருகை தரும் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளின் வரவு அதிகரித்துள்ளது. இதனால் தற்செயலாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற குழுவினர் பீ.சீ.ஆர் மற்றும் என்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இதனை மேலும் அதிகரிப்பதற்கு தம்புத்தேகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர் டபிள்யு.பீ.எஸ். என்.வாசல தெரிவித்தார். இச்சந்தைக்கு வருவோரில், 50 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு பி.சி.ஆர் மற்றும் என்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.இச் சோதனை நடவடிக்கைகள் தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலைய வளாகத்திலும் வெல்லன்கடவல பிரதேசத்திலும் மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் தெரிவித்தார்.எனினும் முகக் கவசம் அணியாதவர்களை கைது செய்து நீதி மன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொது சுகாதார பரிசோதகர்களான டபிள்யு. பீ.எஸ்.என்.வாசல, எஸ். என் திசாநாயக்க மற்றும் புத்திக மல்லவாராச்சி உள்ளிட்ட குழுவினர் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் இரண்டாம் கட்டப் பணிகள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டது.இதற்மைய, அஸ்ட்ரா சினிகா தடுப்பூசி வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு ஏற்றப்பட்டது.இந்நிகழ்வில், வைத்தியசாலையின் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.முதல் கட்டமாக தடுப்பூசியை பெற்றுக் கொண்ட வைத்தியர்கள், தாதிமார்கள் , சுகாதார சேவையாளர்களுக்கே இந்த இரண்டாவது கொரோனா தொற்று தடுப்பூசி ஏற்றப்பட்டது. (மாவத்தகம நிருபர்)

## தம்புத்தேகம பொருளாதார நிலையத்துக்கு அதிகளவு மரக்கறி, பழவகைகள் வருகை

### தம்புள்ளை மூடப்பட்டதால் வியாபாரிகள் படையெடுப்பு

**(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக இரண்டு வாரங்களுக்கு தம்புள்ள பொருளாதார மத்திய நிலையம் மூடப்பட்டதால், தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்திற்கு கூடுதலான மரக் கறிகளும், பழ வகைகளும் வந்து சேர்வதாக தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் சுனில் செனவிரத்ன தெரிவித்தார். நாட்டின் பல பிரதேங்களிலிருந்தும் விவசாயிகள், வியாபாரிகள் எனப் பெரும்பாலானோர் தம்புத்தேகமவுக்கு வருகை தருவதால், மத்திய நிலையத்திலிருந்து நகர் வரைக்கும் நீண்ட தூரம் வாகனங்கள் வரிசையில் நிற்கின்றன.இதனால், பாரிய வாகன போக்குவரத்து

நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ளன.தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்திற்கு மரக்கறி மற்றும் பழவகைகள் என நாளாந்தம்

5 இலட்சம் கிலோ கிடைக்கின்றன.இந்நிலையில் தற்போது தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் மூடப்பட்டதால், சுமார் 12 முதல் 13 இலட்சம் கிலோ வரையான மரக்ககறிகள் கிடைத்து வருவதாகவும் சுனில் செனவிரத்ன தெரிவித்தார்.கூடுதலாக மலையக மரக்கறி வகைகள் கிடைப்பதாகவும் சகல வகையிலுமான பொருட்களையும் விலைக்கு பெற்றுக்கொள்வதற்கு மத்திய நிலையம் தயாராகவிருப்பதாகவும் தெரிவித்த அவர், மரக்கறி மற்றும் பழவகைகளின் விலையில் சில வேளை வீழ்ச்சி ஏற்படக் கூடுமெனவும் தெரிவித்தார்.

தேவைப்படுமாயின் நள்ளிரவு வரைக்கும் தம்புத்தேகம பொருளாதார நிலையத்தை திறந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராகவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க நில கையகப்படுத்தல் (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்ட நில கையகப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ் அறிவிப்பு**

இங்கு கீழ் விபரிக்கப்பட்டுள்ள நிலத்தை அரசு கையகப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2021ம் ஆண்டு 03ம் மாதம் 26ம் திகதி 2220/77 வெளியிடப்பட்டுள்ள இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| பிரதேச செயலக பிரிவு | : அகலவத்தை |
| கிராமம் | : கெகுளந்தழ |
| காணியின் பெயர் | : பிம்புர தோட்டம் |
| அடிப்படை திட்டங்கள் இல. | : மூ.பி.க. 4721 |
| துண்டு இல. | : 1,2,3 மற்றும் 4 |

2021 ஆண்டு 04ம் மாதம் 23ம் திகதி **அகலவத்தை பிரதேச செயலக காரியாலயத்தில்**

**பிரதேச செயலாளர்,**
**அகலவத்தை.**

## சுகாதார விதிமுறைகளை கடுமையாக அமுல்படுத்த பொலிஸார் ரோந்து

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர் )**

கொவிட் 19 கொரோனா வைரஸ் நாட்டில் தீவிரமாக பரவி வருவதால், அநுராதபுரம் மாவட்டத்தில் சுகாதார பாதுகாப்பு சட்ட விதிமுறைகள் கடுமையான முறையில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.இதைக் கண்காணிப்பதில் பொலிஸார் கூடுதல் கவனம் எடுத்து வருகின்றனர்.

இதற்கமைய அநுராதபுரம் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் சஞ்சீவ மகாநாமவின் ஆலோசனையின் பேரில், அநுராதபுரம் மோட்டார் போக்குவரத்து பொலிஸார் நேற்று முன்தினம் (27 ) மாலையில் வீதி சோதனையில் ஈடுபட்டனர். வாகனங்களை பரிசோதித்த பொலிஸார், முகக்கவசம் அணியாது வாகனத்தை செலுத்தியோர் மற்றும் வாகனத்தில் பயணித்தவர்களை கடுமையாக எச்சரித்தனர்.

இவ்வாறு முகக் கவசம் அணியாமல் வந்தோரில் அதிகமானோர் அரச, தனியார் துறைகளில் உயர்பதவி வகித்தவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதில் சுகாதார துறையில் உயர் பதவி வகித்தவர்களும் அடங்குவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## கொவிட் 19 விழிப்பூட்டல் நிகழ்ச்சி

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் மாவட்ட பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பள்ளி வாசல் நிர்வாகிகளுடனான விஷேட கலந்துரையாடல் அண்மையில் (27) புத்தளம் பெரிய பள்ளி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் புத்தளம் மாவட்ட உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.இப்ஹாமின் வழிகாட்டலில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்த அமர்வுக்கு மாவட்ட பொது சுகாதார பரிசோதகர் சுரேஷ் கலந்து சிறப்பித்தார்.

இதில் கலந்துரையாடப்பட்டு எடுக்கப் பட்ட தீர்மானங்கள்.

மாவட்டத்தின் பிரதான கிராமங்களில் கொவிட் 19 தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பள்ளிவாசல் நிர்வாகம் ஏற்பாடு செய்தல். சுகாதார பரிசோதகர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்குதல். பொதுமக்களை முறைப்படி முகக்கவசம் அணிய வலியுறுத்தல், தொழுகை விரிப்பு கொண்டு வரல் மற்றும் வீட்டில் இருந்து உழு செய்து வர வலியுறுத்துவதோடு சமூக இடைவெளியை பேணல். அதோடு ஏனைய இடங்களிலும் முழுமையாக முகக்கவசம் அணிய பொது மக்களை தூண்டுதல்.

அடிக்கடி கொவிட் 19 விழிப்புணர்வு தொடர்பான அறிவித்தல்களை ஒலிபெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறிவித்தல் ஆகும்.

வியாபாரிகளுக்கு விழிப்புணர்வு மேற்கொள்ளும் வகையில் துண்டுப்பிரசுரங்களை வெளியிடல்.

வாரத்திற்கு குறைந்தது இரு முறைகள் நகரை சுற்றி ஒலி பெருக்கி சாதனங்கள் மூலம் பொது மக்களை விழிப்பூட்டச்செய்தல் ஆகியனவாகும்.

## போலி தங்க நகைகள் தயாரிக்கும் நிலையம் முற்றுகை

**மள்வானை விசேட நிருபர்**

மள்வானை அடம்பகஹ வீதியில் விடுதியொன்றில் நீண்ட காலமாக இயங்கிவந்த போலி தங்க நகைகள் தயாரிக்கும் நிலையமொன்றை பியகம பொலிஸார் நேற்று(27) பிற்பகல் வெற்றிகரமாக சுற்றி வளைத்துள்ளனர்.

அதேவேளை அங்கிருந்து 23 போலி தங்க மோதிரங்கள், 14 போலி தங்க சங்கிலிகள், 4 போலி தங்க வளையல்கள் மற்றும் ஒரு ஜோடி காதுப்பு (காதணி), ஒரு பஞ்சாயுதம் ஆகியன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அத்தோடு இப்போலி தங்க நகைகளை தயாரிக்க உபயோகிக்கப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பாக இரு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண உளவுப் பிரிவைச் சேர்ந்த ஸார்ஜன்ட் சந்தனவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பியகம பொலிஸார் ஸ்தலத்துக்கு சென்றபோது சந்தேக நபர்கள் போலி நகைகளை தயாரித்துக் கொண்டிருந்துள்ளனர்.

இவ்வாறு தயாரிக்கப்படும் போலி தங்க நகைகளை தரகர்கள் மூலமாக போலி பெயர்களையும் முகவரிகைகளையும் பயன்படுத்தி விநியோகிப்பதிலும் ஈடுவைப்பதிலும் ஈடுபட்டு வந்துள்ளதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29D இன் கீழான விற்பனை.**

**மக்கள் வங்கி**
**(கூட்டிணைந்த வங்கிப்பிரிவு)**

**பெறுமதி மிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்தஹேவாஹெட்ட, கங்கபட கோரளயில் அமைந்துள்ள, கங்கபட கோரளே மற்றும் கடவத்சத்தர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட கங்கபட பிரதேச சபை எல்லையில், அம்பிட்டிய கிராம சேவை அதிகாரிப்பிரிவு, அம்பிட்டிய - பள்ளேகமயில் அமைந்துள்ள, **டிக்கிரிமாலிகே வத்த** என அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற, நில அளவையாளர் **டீ.எம்.ஜயரத்ன** அவர்களால் **2018 ஜனவரி 07**ஆம் திகதி வரையப்பட்ட, **1054** ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு **"01"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு

**காணியின் விஸ்தீரணம்: ஏ–௦௦ : றூ.01 : ப.16.30**

**அதிலுள்ள V.V.இல.226 கொண்ட வீடு, தாங்கி, கிணறு, "அம்பிட்டிய ஒட்டோ கெயர்" என அழைக்கப்படும் வர்த்தக நிறுவனம் ஆகிய அனைத்தும் உள்ளடங்கிய, கண்டி காணிப்பதிவகத்தில் A654/130 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.**

**மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி**

**2021 ஜுன் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை**

**மக்கள் வங்கியின் செங்கடகல கிளை வளாகத்தில்**

**மு.ப. 11.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்**

**சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID-19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏல விற்பனை நடைபெறும்.**

**வரையறுக்கப்பட்ட ஜே.என்.இன்டீரியஸ் (தனியார்) நிறுவனத்தினால் மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட சொத்து)**

**தீர்மான அறிவித்தலுக்கு**

தீர்மான அறிவித்தலுக்கு தயவு செய்து 2021 பெப்ரவரி 19ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2021 பெப்ரவரி 17ஆம் திகதிய டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**காணியை சென்றடைவதற்கான வழி:**

கண்டி நகர மத்தியிலிருந்து அம்பிட்டிய வீதி வழியாக சுமார் 04 கிலோமீற்றர் வரை சென்றதும் குறிப்பிட்ட சொத்து பாதையின் இடதுபக்கமாக (3வது கிலோமீற்றர் கல்லைத் தாண்டி சுமார் 400 கிலோ மீற்றர் சென்றதும்) அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை:**

ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 ½ % (இரண்டரை சதவீதம்)
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை கட்டணம்

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிரதான முகாமையாளர், - அறவீடுகள், மக்கள் வங்கி, தலைமை அலுவலகம், 10வது மாடி, இல.75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02 என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி : 011-2481443, 011-2481546

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மேற்குறிப்பிட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும் உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம**

*ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்*

**129 வருடகால மகோன்னத சேவை**

**தலைமை அலுவலகம்**
**24, டொரிங்டன் வீதி, கண்டி.**
**தொலைபேசி : 081-2227593**
**தொலை/பக்ஸ் : 081-2224371**
**மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk**

**நகர அலுவலகம்**
**6A, பெயார் பீல்ட் கார்ட்ன்,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி : 011-2671467, 011-2671468**
**தொலை/பக்ஸ் : 011-2671469**
**மின்னஞ்சல்: schokman@samera1892.com**

**இணையதளம்: www.sandslanka.com**


திகதி 28.04.2021 புதன் கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4465
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,669,990.00
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 8 3 7 3 3 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,112,229.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2760
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,011,060.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 51 57 60 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,704,501.20

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 823
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,863,180.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 131,337,858.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து A சுப்பர் இலக்கம் 16 வெற்றி இலக்கங்கள் 47 49 55 65

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 502
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,330,300.00
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 11 21 40 60
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,208,666.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1115
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,999,040.00
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 0 5 8 4 9 3
விஷேட இலக்கம் 13872
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,941,156.10

28.04.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 655,994
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 27,873,570.00
ரூ.2,000,000.00 பரிசு 02 ரூ. 100,000.00 பரிசுகள் 24

• ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
• பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
• வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்

விற்பனைக்கு

WP AAW-7498 Bajaj, 2015, WP AAB-8483 B ajaj, 2012, threew heel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 031749

# சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேலப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர் அதிபதி**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு -05**

2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் திகதி

| | |
|---|---|
| கொக்கோ ஏலக்காய் மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில் | வேலையாள் ஒரு நாளுக்கு ரூபா 912.19 |

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில் தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

## பகிரங்க ஏல விற்பனை
## கொழும்பு வர்த்தக மேல்நீதிமன்றில்

| வழக்காளி | | எதிராளிகள் |
|---|---|---|
| கொழும்பு 10 ரி பி ஜாயா மாவத்தை இல. 479 (முன்பு இல 48)ல் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் மற்றும் ஹொரணயில் கிளை அலுவலகத்தை நடத்தும் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் மற்றும் ஹொரண இடத்தில் ஹட்டன் நெஷனல் பேங்க் பீஎல்சி (முன்பு வரையறுக்கப்பட்ட ஹட்டன் நெஷனல் வங்கி அழைக்கப்படும்) | -எதிர்- | 1. மஹஅம்பலன்கொட பனியன்துவகே சுனில் 2. போதாகொடகே தோன சிறியானி இல 49/டி பிட்டவல வீதி, சவ்சிறி உயன கும்புர, கோனபல **புதிய விலாசம்** இல. 34 சுதேரிஸ் சில்வா மாவத்த, ஹொரண இல. 34/ஏ சுதேரிஸ் சில்வா மாவத்த, ஹொரண |

**வழக்கு இல: CHC 0044/2012/MR**

2014ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ம் திகதி மேற்குறிப்பிட்ட இலக்க வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு அமைய மேற்பெயர் குறிப்பிட்ட எதிராளிகளால் வழக்காளிக்கு கீழே முதலாவது இடாப்பில் விபரிக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடம் அவைகளுடன் சம்பந்தப்பட்ட உரிமை, சிறப்புரிமை, வழியுரிமை மற்றும் இணைந்தவையும் அவ் ஆதனத்திற்கு அல்லது அவற்றினால் அல்லது அவற்றின் சகல பாகங்களுக்கும் எதிராளிகளின் சகல நிதி, உரிமை, உரித்து, சொந்தம் மற்றும் வேண்டுகோள் ஆதியனவற்றிற்கு மேற்குறிப்பிட்ட ரூபா 4,561,041.93 நிதி மற்றும் அதன் நிமித்தம் 2011 செப்டெம்பர் 23ம் திகதியிலிருந்து முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை வருடமொன்றுக்கு 24% வீதம் வட்டியும் மேற்குறிப்பிட்ட சி, சி1, சி2 என அடையாளமிடப்பட்ட ஈட்டுமுறிகளை கூட்டி செலுத்த வேண்டிய வரி (VAT வரி)யும் அதனுடன் சேர்த்து செலுத்த கடமைப்பட்டுள்ளதாக கட்டளை மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தீர்ப்பு திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் ரூபா 4,561,041.93 மற்றும் அதன் மீது 2011 செப்டெம்பர் 23ம் திகதியிலிருந்து வருடமொன்றுக்கு 24% வட்டி மற்றும் கட்டணம் வழக்காளிக்கு செலுத்தும்படி எதிராளிகளுக்கு கௌரவ நீதிமன்றால் கட்டளையிடப்பட்டுள்ளதோடு மற்றும் அவ்வாறு செலுத்த தவறினால் முதலாது இடாப்பில் விபரிக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடம் இரண்டாம் இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள வழியுரிமையின் கீழ் கௌரவ நீதிமன்று குறிப்பிட்டு நியமிக்கப்படும் அங்கீகாரம் பெற்ற பிசுக்கால்/ஏல விற்பனையாளருக்கு கீழே விதிக்கப்படும் விற்பனை நிபந்தனையின் கீழ் விற்பனை செய்வதற்கு கட்டளையிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. அப் பிசுக்கால்/ஏல விற்பனையாளருக்கு கீழே காணப்படும் அதிகாரம் வழங்கப்படுகிறது. அதாவது :

அக் காணியின் மதிப்பீட்டு பெறுமதிக்கு விற்பதற்கு முதலில் முன்னிலைப்படுத்தவும் , அவ் மதிப்பீட்டு பெறுமதிக்கு வாங்குவதற்கு விலை கேட்டல் இல்லாவிடின் கொமிசன் வழங்கப்பட்ட வேளையில் தீர்ப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டிய பணத்திற்கு விற்பதற்காக முன்னிலைப்படுத்தவும் அவ் விற்பனையின்போதும் விலை கேட்க யாரும் இல்லாவிட்டால் அதன் பின் ஆக உயர்ந்த விலை கேட்டவருக்கு அல்லது கேட்டவர்களுக்கு விற்கும்படியும் கட்டளையிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது. அக் காணியின் மதிப்பீட்டு பெறுமதிக்கு விற்பனை செய்வதற்கு முதலில் முன்னிலைப்படுத்துவதற்கு ஈட்டுச் சட்டத்தின் 52(1)ம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட வேளையில் முதலாவது விற்பனையின்போது முன்வைக்கப்பட்ட உச்ச விலைகேட்டல் ஈட்டுச் சட்டத்தின் 51(3)ம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதியை விட குறைவாக இருப்பின் அக் காணியை முதலாவது விற்பனையின் கீழ் விற்க கூடாது எனவும் மற்றும் அத்தகைய தருணத்தில் அக்காணியை இரண்டாவது தடவையாக விற்பனை செய்யப்படல் வேண்டும் எனவும் மேலும் இரண்டாவது விற்பனையின் போதும் அவ் மதிப்பீட்டு பெறுமதிக்கு வாங்குவதற்கு யாரும் இல்லாவிடின் கொமிசன் வழங்கப்பட்ட வேளையில் செலுத்தப்பட வேண்டிய பணத்திற்கு விற்பனை செய்வதற்கு முன்னிலைப்படுத்தும்படியும் அவ் விற்பனையின்போதும் விலை கேட்க யாரும் இல்லாவிட்டால் ஈட்டுச் சட்டத்தின் 50(4)ம் பிரிவிற்கு அமைவாக அடுத்த உயர்ந்த விலை கேட்டவருக்கு அல்லது கேட்டவர்களுக்கு விற்பனை செய்யும்படி கட்டளையிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. அக் காணி மற்றும் கட்டிடத்தை வாங்குவதற்கு விலை கோர வழக்காளிக்கு அல்லது வழக்காளி சார்பாக வேறு யாருக்கும் வழிவிடும்படியும் மற்றும் வழக்காளி கொள்வனவாளரானால் வழக்காளியின் உரிமை மற்றும் கட்டணத்தின் அளவு வரை வழக்காளிக்கு கடன் அனுகூலம் வழங்க கட்டளையிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. அவ் விற்பனையின்போது கொள்வனவாளர் அல்லது கொள்வனவாளர்கள் விற்பனை நிபந்தனைகளுக்கு அமைய செயற்பட்டதன் பின் கொள்வனவாளர் வழக்காளியாயின் வழக்காளிக்கு வழங்கப்பட்ட கடன் அனுகூலத்தை அங்கீகரிக்கும் நீதிமன்ற கட்டளையை சமர்ப்பித்ததன் பின் கொள்வனவாளர் அல்லது கொள்வனவாளர்கள் மூன்றாம் தரப்பு அல்லது தரப்புகளானால் அவர்கள் வாங்கும் விலை முறையாக நீதிமன்றில் வைப்பு செய்யப்பட்டதாக நீதிமன்ற கட்டளையொன்று அல்லது நீதிமன்ற கட்டளையை சமர்ப்பித்தன் பின் கொள்வனவாளர் அல்லது கொள்வனவாளர்களானால் அவர்களால் விற்பனை விலை சட்டப்படி முறையாக நீதிமன்றில் வைப்பு செய்யப்பட்டுள்ளது என நீதிமன்ற கட்டளையொன்று அல்லது கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டபின் கொள்வனவாளர் அல்லது கொள்வனவாளர்களின் பெயருக்கு சட்டப்படி முறையாக பெறுனர் அல்லது பெறுனர்களாக எழுதி கையொப்பமிட்டு வழங்குவதற்கும் பிசுக்காலுக்கு/ஏலவிற்பனையாளருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது என கட்டளையிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்டவாறு விற்பனை செய்யப்படும் ஈட்டு ஆதனத்தின் வெற்றுடமையை கொள்வனவு செய்த கொள்வனவாளர் அல்லது கொள்வனவாளர்களுக்கு கையளிக்கும்படி பிசுக்காலுக்கு அறிவுறுத்தல் வழங்கி கட்டளையிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்படுகிறது. விற்பனையால் கிடைக்கும் பணம் வழக்காளியின் உரிமைக்கோரிக்கை வட்டி மற்றும் கட்டணங்களைச் செலுத்த பயன்படுத்தப்படும் என கட்டளையிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்படுகிறது.

நீதிமன்றால் பெயரிடப்பட்டு கிடைக்கப் பெற்ற கட்டளையின்போது இவ் அதிகாரத்தை செயற்பாட்டிற்கு உட்படுத்துவதை நிறுத்தாதிருக்கும் படி இத்தால் மேலும் கட்டளையிடப்படுவதால் இந் நீதிமன்றால் எனக்கு வழங்கப்பட்ட விற்பனை அதிகாரப் பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் கீழே இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள அசையா ஆதனமான

பேர்சஸ் 13.93 விஸ்தீரணத்தைக் கொண்ட 'கஹட்டகஹவத்த அல்லது கஹட்டகஹகனத்த' என்றழைக்கப்படும் காணித்துண்டு மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் சகலதும் **2021ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி காலை 10.00 மணிக்கு** பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**ஆதனத்தை அடையும் வழி:** ஹொரண பொகுனுவிட்டயிலிருந்து கொழும்பு வீதியில் கும்புக்க சந்திக்கு வந்து இடப்பக்கமுள்ள கெலனிகம வீதியில் ஏறத்தாள 300 மீட்டர் செல்லும்போது வலப்பக்கமுள்ள பிட்டிவல வீதியில் ஏறத்தாள 200 மீற்றர் சென்ற பின் வலப்பக்கம் இவ் ஆதனத்தைக் காணலாம்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:** ஏலம் முடிவடைந்தவுடன் கீழே காணப்படும் பணத்தொகை ஏலவிற்பனைதாரருக்கு செலுத்தப்படல் வேண்டும். (காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(1) முழு விற்பனைவிலையின் 25%
(2) ஏலதாரரின் கட்டணம் (விற்பனை விலையில்) 2.5%
(3) முழு விளம்பரச் செலவு
(4) முத்திரைச் செலவு
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம்
(6) பிரதேச சபை கட்டணம் 1%
(7) நொத்தாரிசு கட்டணம்
(8) உள்ளூராட்சி மன்றால் விதிக்கப்படும் ஏனைய வரி
(9) விற்பனை விலையின் முதலாவது 7,500 ரூபாவுக்கு 150 ரூபாவும் மேலதிகமான ஒவ்வொரு 1,000 ரூபாவுக்கு தலா 5 ரூபாவும் நீதிமன்றுக்கு செலுத்த வேண்டியுள்ளதுடன் மிகுதி 75% தொகையை ஏலத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றில் CHC 0044/2012/MR ம் இலக்க வழக்கில் வைப்பு செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செயற்படத் தவறின் முதலில் வைப்பு செய்யப்பட்ட பணம் திருப்பி வழங்கப்படமாட்டாது எனவும் அவ் ஆதனம் மீண்டும் ஏல விற்பனைக்கு உட்படுத்தப்படும்.

விசாரணை மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பார்வையிட தொடர்பு கொள்ளவேண்டியது

அஜித் தசாநாயக
நீதிமன்ற ஆணையாளர்/சமாதான நீதவான் (முழுத்தீவும்)
அதிகாரம் பெற்ற ஏலதாரர் மற்றும் மதிப்பீட்டாளர்
B.B.A (United Kingdom) A.I.C.M (Sri Lanka)
E mail: ajith.dasanayake@yahoo.com
Tel: mob. 072-1802348

## பொல்பித்திகம பிரதேச சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

இந்தச் சபைக்குத் தேவையான வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்குத் தேவையான துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்களை 2021.05.25ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை தலைவர், பிரதேச சபை, பொல்பித்திகம எனும் முகவரிக்குக் கோரப்படுகின்றன. தேவையான துணைப்பாகங்கள் தொடர்பான விபரங்களை 037-2273135 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு அல்லது polpithigamas@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனுக்களை பதிவுத் தபாலில் / நேரில் அல்லது மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அனுப்பலாம்.

**எல். ஆர். ரஞ்ஜித் விஜேநாயக்க,**
**தலைவர்,**
**பிரதேச சபை,**
**பொல்பித்திகம.**

2021-04-29ஆம் திகதி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில்.

# 2022 ஆண்டிற்காக வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

## வென்னப்புவ பிரதேச சபை

1987 இல.15 பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய, வடமேல் மாகாண ஆளுநரான ராஜா கொல்லுரே அவர்களினால் 2021.10.29 ஆம் திகதி மற்றும் இல.2199/15 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் (அதிவிசேட) பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள பிரதேச சபை வரவு-செலவுத்திட்ட பெறுகை மற்றும் செயற்படுத்தப்படும் விதிகள் இல.6 இன் பிரகாரம் வென்னப்புவ பிரதேச சபையின் தலைவரான என்னால் 2020ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்திற்காக அபிவிருத்தி ஆலோசனைகளை பொது மக்களிடமிருந்து கோரப்படுவதாக தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களது 2022 ஆண்டிற்கான அபிவிருத்தி ஆலோசனை அல்லது ஆலோசனைகளை 2021 ஜுன் 30ஆம் திகதிக்கு முன் எனக்கு கிடைக்க செய்யுமாறு தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

**2021.04.28ம் திகதி**
**வென்னப்புவ பிரதேச சபையில்**

**தலைவர்**
**வென்னப்புவ பிரதேச சபை**

## மாவட்டச் செயலகம் - களுத்துறை

# கேள்விகளுக்கான அழைப்பு

## அம்பே – பயாகலயில் மழை நீர் வடிகாலமைப்பு முறையை நிர்மாணித்தல் (இறுதிக் கட்டம்) – 2021

1.1. அம்பே – பயாகலயில் மழை நீர் வடிகாலமைப்பு முறையை நிர்மாணிப்பதற்கு (இறுதிக் கட்டம்) – 2021 கேள்விகள் கோரப்படுகின்றன. ஒப்பந்தக் கிரயம் 15.3 மில்லியன் ரூபாவாகும் (வெட் வரியின்றி) – ஒப்பந்தக் காலம் 05 மாதங்கள்.

1.2 கேள்வி ஆவணங்கள் தேசிய பதிவுகள் திட்டத்தின் கீழ் பிரதான ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) C04, C05 மற்றும் C06 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் (மழை நீர் வடிகாலமைப்பு) தரப்படுத்தப்பட்டுள்ள நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படும்.

1.3 மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ஐயாயிரம் ரூபா (ரூபா 5,000.00) மற்றும் ஒரு இலட்சத்து ஐம்பத்தையாயிரம் (155,000.00) (77 நாட்கள் செல்லுபடியாகும் வகையில்) ரூபா வங்கிப் பிணை முறியை செலுத்துவதன் பேரில் களுத்துறை மாவட்டச் செயலக, பிரதான கணக்காளரிடமிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1.4. 2021-04-30ஆம் திகதி முதல் 2021-05-20ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான கடமை நேரங்களில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும். (தொடர்பிலக்கம் 034-2222604, தொலைநகல்: 034-2226467)

1.5. களுத்துறை, மாவட்டச் செயலகம், பிரதான கணக்காளர், கணக்கியல் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

1.6. இரு பிரதிகளில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை களுத்துறை மாவட்டச் செயலகத்தின் கேள்விச் சபைத் தலைவருக்கு 2021-05-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பதிவுத் தபால் மூலம் அல்லது இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு கிடைக்கச் செய்தல் வேண்டும். அன்றைய தினம் மு.ப. 10.05 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம். மு.ப. 10.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

1.7 களுத்துறை மாவட்டச் செயலகத்தில் 2021-05-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**களுத்துறை.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பான கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

கொழும்பு - 05, எல்விட்டிகல மாவத்த, இல.561/3 இல் அமைந்துள்ள இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பான கைத்தொழில் இராஜாங்க அமைச்சில் பாதுகாப்புச் சேவையை பெற்றுக்கொள்வதற்காக தலைவர், பெறுகைக்குழுவினால் இத்தால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | பெறுகை | பெறுகைக்காலம் | கேள்விக் கட்டணம் (ரூ) | கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் | கேள்விப் பிணைமுறி பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|---|
| 02 | பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளல் | 2021.07.01 - 2022.06.30ம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு | 1500.00 | 2021.05.21 பி.ப.2.00 அல்லது அதற்கு முன் | 30,000.00 |

(01) மேற்படி ஒவ்வொரு பெறுகைக்குமான கேள்வி ஆவணங்களை 2021.05.01 முதல் 2021.05.21 ஆகிய தினங்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் கொழும்பு - 05, எல்விட்டிகல மாவத்தை, இல-561/3 இல் அமைந்துள்ள இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பாக கைத்தொழில் இராஜாங்க அமைச்சு பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக மீளளிக்கப்படாத 1500/- கேள்விக் கட்டணத்தை அமைச்சின் கணக்காளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டை இவ் அமைச்சின் பெறுகைப் பிரிவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(02) பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2021.05.21 பி.ப.2.00 அல்லது அதற்கு முன் தலைவர், பெறுகைக்குழு, இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பான கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் இல-561/3, எல்விட்டிகல மாவத்த, கொழும்பு -05 என்ற முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது இல்லையெனில் இவ் அமைச்சின் பெறுகைப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

(03) குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

(04) கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

(05) கேள்விகளை சமர்ப்பிக்கும் போது ஒவ்வொரு பெறுகையினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ரூ.30,000/- பெறுமதிக்கு சமமான இலங்கை மத்திய வங்கியில், வர்த்தக வங்கியாக பதிவு செய்துள்ள எந்த வங்கியின் மூலமாவது 90 நாட்கள் (2021.08.21) இற்கான செல்லுபடியாகுமாறு செயலாளர், இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பான கைத்தொழில் இராஜாங்க அமைச்சு பெயரில் பெற்றுக்கொண்ட கேள்விப்பிணையை மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.

(06) ஒவ்வொரு பெறுகையையும் நடத்திச் செல்லும் போது ஆவணங்களில் உள்ளடக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக அச் சேவையை நடத்திச் செல்ல வேண்டியதுடன், ஒப்பந்தக்காரர் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பான கைத்தொழில் இராஜாங்க அமைச்சு செயலாளருடன் ஒப்பந்தம் ஒன்றிற்கு உட்படல் வேண்டும்.

(07) இது பற்றிய மேலதிக தகவல்கள் தேவைப்படின் தொலைபேசி இல - 0112589426 அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பான கைத்தொழில் இராஜாங்க அமைச்சு**
**இல-561/3, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு - 05.**

**2021.04.29**

Daily News Classifieds, the Housewives' companion

SLS Bank
இலங்கை சேமிப்பு வங்கி
Sri Lanka Savings Bank

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சேமிப்பு வங்கிக்கு Firewall இன் வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பு

## IFB No.: SLSB/2021/007

1. பின்வருவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சேமிப்பு வங்கியின் சார்பாக கொள்முதல் குழுத் (உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

| | Item Names | Quantity | Bid Security |
|---|---|---|---|
| 1. | Firewall | 02 Nos. | Rs.45,000.00 |
| 2. | Licenses for Firewall | 02 Nos. | |

மேலே திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இலங்கை சேமிப்பு வங்கி, கொள்முதல் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்று 2021 ஏப்ரல் 30 ஆம் திகதியிலிருந்து 2021 மே 16 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

4. தகைமைகளின் தேவைப்பாடுகள் பின்வருமாறு:
   i. நிகரான வர்த்தக உரிமைப் பெயருடைய Firewalls இன் வழங்கலில் ஆகக் குறைந்தது 5 வருட முன்னைய அனுபவமுடைய அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரரினால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படலாம்.
   ii. உரித்தான துறையில் அரசாங்க ஆணை பெற்றவர்களினால் வழங்கப்பட்ட வியாபார பதிவுச் சான்றிதழை அவர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.
   iii. விலைமனுதாரர்கள் விதிக்கப்பட்ட படிவத்தில் உற்பத்தியாளர்களின் அதிகார ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
   iv. விலைமனுவில் முன்வைக்கபட்டுள்ள Firewall யை வழங்கல் மற்றும் விற்பனைக்குப் பிந்திய சேவைகள் மற்றும் பராமரிப்பிற்காக இலங்கையில் உள்ளூர் முகவர்கள் இருத்தல் வேண்டும்.

5. இலங்கை சேமிப்பு வங்கியின் பொறளை கிளையின் கருமபீடத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். கீழேயுள்ள 6 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ளவாறு சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதிக்கு முன்னைய நாள் வரையும் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

6. விலைமனுக்கள் இரு பிரதிகளில் தலைவர், கொள்முதல் குழு, இலங்கை சேமிப்பு வங்கி, 265, வோட் பிளேஸ், கொழும்பு-07 என முகவரியிடப்பட்டு 2021 மே 17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-07, வோட் பிளேஸ், 265 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சேமிப்பு வங்கியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Bids for Supply, Delivery, Installation & Maintenance of Firewall for Sri Lanka Savings Bank"** என்ற வாசகங்கள் எழுதப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

7. பெற்றுக்கொண்ட எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை இலங்கை சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

**தலைவர்**
**கொள்முதல் குழு (உயர் மட்டம்)**
**வரையயறுக்கப்பட்டஇலங்கை சேமிப்பு வங்கி**
**265, வோட் பிளேஸ், கொழும்பு-07.**
**30.04.2021.**

**தொலைபேசி : 0112-674700-3**
**உடன் தொடர்பிலக்கம் : 0714-693693**
**தொலைநகல் : 0112-674706/7**








தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் தேவஸ்த்தானத்தின் மூன்றாம் வருட 108 சங்காபிஷேகம் சுகாதார பொறி முறைகளுக்கமைய மிக சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் கொரோனா தொற்றிலிருந்து விடுபட விசேட பிரார்த்தனைகளும் இடம்பெற்றன. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். படங்கள்: தலவாக்கலை குறூப் நிருபர்

## காவத்தை சமுர்த்தி அதிகாரிகளுக்கு பி.சி.ஆர் சோதனை

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

கஹவத்தை பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் வங்கி அதிகாரிகள் நேற்று (28) பி.சி. ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக காவத்தை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்தது.

இதனடிப்படையில் கஹவத்தை பிரிவில் 27 கிராம சேவகர் பிரிவிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் கஹவத்தை, என்தான சமுர்த்தி வங்கிகளில் அதிகாரிகள் 35 பேரும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக சுகாதார காரியாலயம் அறிவித்துள்ளது.

தமது பாதுகாப்பினை பற்றி நினைக்காமல் கடந்த சிங்கள தமிழ் புத்தாண்டு தினத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கு 5000 ரூபா பகிர்ந்தளிக்கும் நிகழ்வில் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இப்பகுதியில் ஐந்து கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக காவத்தை நிர்வாக பொது சுகாதார பரிசோதகர் நிமல் விஜயசிறி தெரிவித்தார்.

பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவு கிடைக்கப்பெற்றதன் பின்னர் இது தொடர்பில் தீர்மானம் எடுப்பதாக பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். பி.சி.ஆர் சோதனை கஹவத்தை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் இடம்பெற்றது.

# நுவரெலியாவில் பஸ் விபத்து

## 20 பேருக்கு பலத்த காயம்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**




நுவரெலியா ஹைய்பொரஸ்ட் பகுதியிலிருந்து இராகலை நகரை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று இராகலை கோணப்பிட்டிய பிரதான வீதியில் மாகுடுகல தோட்டப் பகுதியில் மரக்கறி தோட்டம் ஒன்றில் குடை சாய்ந்துள்ளது.

ஹைய்பொரஸ்ட் பகுதியிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு இராகலைக்கு சென்ற பஸ் நேற்று பிற்பகல் 12 மணியளவில் பாதையை விட்டு வி லகி சுமார் 20 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ் விபத்தில் பஸ்சில் பயணித்த 20 பேர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பஸ் சாரதிக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக கட்டுப்பாட்டை இழந்தமையால் இவ்விபத்து நேர்ந்ததாக நேரடி விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்த 20 பேரும், ஹைய்பொரஸ்ட் வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு காயமடைந்தவர்களில் சிறுவர்களும் அடங்குகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இவ்விபத்து தொடர்பில் இராகலை போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பதுளை மாவட்டத்தில் இதுவரை 17 கொரோனா மரணங்கள்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பதுளை மாவட்டத்தில் கொவிட் 19 தொற்றினால், இதுவரையில் 17 உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளதாக சுகாதார பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹாலிஎலையைச் சேர்ந்த 72 வயதுடைய ஆணொருவரின் உயிரிழந்ததை தொடர்ந்து இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கொவிட் 19 தொற்று அறிகுறிகளுடன் பதுளை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தெல்தெனிய அரசினர் மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக மாற்றப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்ததாக பதுளை பொது சுகாதாரப் பரிசோதகர் ரணில் பிரியங்கர தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் கொவிட் 19 தொற்றாளர்கள் அதிகளவில் இனம்காணப்படுவதால் மக்கள் சுகாதார வழிமுறைகளை முறையாகவும், கிரமமாகவும் மேற்கொள்ளுமாறு பொது சுகாதாரப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

பதுளை எல்ல பகுதியிலுள்ள விருந்தகங்கள் இரண்டில் நடைபெற்ற நிகழ்வுகளில் மூன்று பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர், விருந்தகங்கள் இரண்டில் சேவையாற்றும் 32 பேரும் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி திருமண நிகழ்வு ஒரு விருந்தகத்திலும், கடந்த 27ந் திகதி 'ஹோம்கமிங்' நிகழ்வு பிறிதொரு விருந்தகத்திலும் நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில் கலந்து கொண்ட 125 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

பதுளை அரசினர் மருத்துவமனையில் கடமையாற்றும் தாதியொருவருக்கே திருமணம் நடைபெற்றது. இவருக்கும் கொவிட் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளதாக எல்ல பொது சுகாதாரப் பரிசோதகர் டி.எம். சாகர நந்திக்க தெரிவித்தார்.

அத்துடன் திருமண நிகழ்வுகளுக்கு வந்தவர்களில் மேலும் எட்டுப்பேருக்கு தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் பிந்துனுவெள மற்றும் ககாகொல்லை சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக பொது சுகாதாரப் பரிசோதகர் மேலும் கூறினார்.

## கொரோனா அச்சம்; மாத்தளை மாவட்டத்தில் 24 மணிநேரத்துள் இறுதிக் கிரியைகள்

### மாவட்ட மேலதிக செயலாளர் இஸான் விஜய திலக் அறிவிப்பு

**உக்குவளை நிருபர்**



மாத்தளை மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சகல மரணங்களினதும் இறுதிக் கிரியைகள் 24 மணித்தியாலங்களுக்குள் நடத்துமாறு சகல பிரதேசசெயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட மேலதிக செயலாளர் இஸான் விஜய திலக் தெரிவித்தார். கொரோனா வைரஸ் மற்றும் தொற்றுநோய்கள் பரவுவதை தடுக்கும் முகமாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மாத்தளை மாவட்ட கொரோனா தடுப்பு விசேட கமிட்டி முடிவுகளை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். மாத்தளை மாவட்ட கொரோனா தடுப்பு விசேட கமிட்டியின் விசேட கூட்டம் மாவட்ட இணைப்பதிகாரி மேஜர் ஜெனரால் நிஸாந்த மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார தென்னகோன் ஆகியோரின் தலைமையில் தம்புள்ள பிரதேசசெயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே மரண கிரியைகளை 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டதாக மேலதிக செயலாளர் இஸான் விஜய திலக் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் மாத்தளை மாவட்ட சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் பணிபுரிகின்ற அரச உத்தியோகத்தர்களை இணைத்து நலன்புரி சங்கங்களை ஏற்படுத்தி கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## கம்பளையில் கொரோனா விழிப்புணர்வு வேலைத்திட்டம்



கம்பளை பகுதி யில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையால் வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குமாறு சுகாதார தரப்பினரும், பொலிஸாரும் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளை முழுமையாக கடைபிடிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனிமைப்படுத்தல் சட்டத்திட்டங்களை, சுகாதார நடைமுறைகளை மக்கள் உரிய வகையில் பின்பற்றுகின்றனரா என்பது தொடர்பில் கம்பளை பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஏற்படுத்திவருகின்றனர்.

நேற்றைய தினமும் கண்காணிப்பு நடவடிக்கையில் பொலிஸார் இறங்கினர். தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுபவர்களை கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## பதுளை மாவட்டத்தில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை




**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பதுளை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் தலைதூக்கியுள்ளதால் அதனைக் கட்டுப்படுத்தி மாவட்ட மக்களைப் பாதுகாக்கும் வகையிலான கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

அத்துடன், சுகாதார வழிமுறைகளை பின்பற்றாதவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள, பாதுகாப்பு தரப்பினருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

விசேடமாக பதுளை மாவட்டத்தினுள் போக்குவரத்து வசதிகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், சம்மந்தப்பட்டவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

தொற்றாளர்களை இனம் காணச் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். மற்றும் என்டிஜன் பரிசோதனைகள் மேலும் பதுளை மாவட்டத்தில் அதிகரிப்பதற்கு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் சிகிச்சைகள் வழங்குவதற்கு தேவையான அனைத்து வசதிகளும், பதுளை மாவட்டத்தில் போதுமான அளவு காணப்படுவதாக பதுளை மாவட்ட சுகாதாரப் பிரிவினர் இதன்போது தெரிவித்தனர்.

## தனியார் பஸ் மீது தாக்குதல்; சந்தேக நபர்கள் தப்பியோட்டம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

எம்பிலிப்பிட்டிய கொழும்பு வீதியில் பயணித்துக்கண்டிருந்த தனியார் பஸ் வண்டியை குருவிட்ட பகுதியில் இடைமறித்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இவ்வீதியில் புஸ்ஸெல்ல மில்லவிட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் இரவு 10.50 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் வண்டியை வழிமறித்து தாக்குதல் நடத்திய குழுவினர் பஸ் சாரதி நடத்துனர் ஆகியோரை தாக்கியதுடன் பஸ் வண்டிக்கும் சேதம் ஏற்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய முச்சக்கர வண்டி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். தாக்குதல் குழுவினர் முச்சக்கர வண்டியை வாடகைக்கு பெற்றுக்கொண்டதாக அவர் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். குருவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## பலாங்கொடை நகரசபை உறுப்பினர் வெற்றிடத்திற்கு புதிய நியமனம்

**இரத்தினபுரி சுழற்சி , பலாங்கொடை தினகரன் நிருபர்கள்**



பலாங்கொடை நகரசபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினராக கடமையாற்றி வந்த அகில சாலிய எல்லாவள பொதுத்தேர்தலில் வெற்றியீட்டி பாராளுமன்றத்திற்கு தெரிவானதையடுத்து பலாங்கொடை நகரசபையின் உறுப்பினர் பதவி நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்தது.

அதற்கமைய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் பலாங்கொடைநகரசபையின்புதியஉறுப்பினராக மங்கலிகா இலங்ககோன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பிரதான அமைப்பாளரும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அகில சாலிய எல்லாவள முன்னிலையில் புதிய நகர சபை உறுப்பினர் மங்கலிகா இலங்ககோன் சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

நிகழ்வில் பலாங்கொடை நகரசபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர். இந்த நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# 'பத்ர் களம்' ஒரு வரலாற்று பார்வை


பத்ர் பள்ளத்தாக்கு

சத்தியத்திற்கும் அசத்தியத்திற்குமிடையில் நடைபெற்ற முதல் போராட்டமான பத்ர் யுத்தம் இஸ்லாமிய வரலாற்றில் மகத்தான மாற்றத்தையும், புரட்சிகரமான திருப்பத்தையும் ஏற்படுத்தியது. நன்மைக்கும் தீமைக்கும் இடையில் ஏற்பட்ட பலப்பரீட்சையில், சத்தியத்திற்காகப் போராடியோர் சிறு குழுவினராக இருந்து கொண்டே அசத்தியத்திற்காகப் போராடியோரைத் தமது இறை நம்பிக்கையின் வலிமையால் தோற்கடித்தனர். சத்திய ஒளிக்கும் அசத்திய இருளுக்கும் இடையே நடந்த இப்போரில் இருளை ஒளி வெற்றிகொண்டது.

பத்ர் நிகழ்ந்த ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு, ரமழான் திங்கள், பதினேழாம் நாள் இஸ்லாத்தின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக நோக்கப்படுகிறது. மிகத் திறமை வாய்ந்த 1000 போர் வீரர்களைக் கொண்டிருந்த குறைஷிகளின் அசத்திய அணியை எதிர்கொள்ள, ஸஹாபாத்தோழர்கள் மிகக் குறைந்த ஆயுத பலத்துடன், அன்றைய தினம் நோன்பு நோற்றவர்களாக இருந்தனர்.

முஸ்லிம்களை விட காபிர்கள் மூன்று மடங்கு அதிகமாகவே இருந்தனர். எனினும், முஸ்லிம்கள் ஈமானிய பலத்தால் அனைத்தையும் மிகைத்து, வெற்றிவாகை சூடினர்.

உண்மையில் பத்ர் களத்தில் நின்றவர்கள் நோன்பாளிகள், உடலில் பலம் குறைந்தவர்கள், ஆயுத, படைப்பலம் குன்றிய நிலையில் காணப்பட்டனர். ஏதிரிகளான மக்கா காபிர்கள் பலமான போர் வீரர்களுடனும், போர்க் குதிரை, தளபாடங்களுடனும் களம் புகுந்தனர். காபிர்களின் படையுடன் ஒப்பிடும் போது, முஃமின்கள் மூன்றில் ஒன்றாக குறைந்தே இருந்தனர். ஒரு சிறுவனிடம் எடைபோடச் சொன்னால் கூட, முஃமின்கள் படை நிச்சயம் தோற்றுவிடும் என்று எவ்விதத் தயக்கமுமின்றியே கூறிவிடுவான்.

ஆனால், அல்லாஹ்வின் அருளில் உறுதியான நம்பிக்கை வைத்த உள்ளங்கள் இறை நாட்டத்தினூடாக இறுதியில் வெற்றிவாகை சூடினர்.

## நபி (ஸல்) அவர்களின் பிரார்த்தனை:

யுத்தம் நடப்பதற்கு முதல் இரவு நபியவர்கள் உறங்காது காலை வரையிலும் பிரார்த்தனையில் இருந்தார்கள். நெஞ்சுருக அல்லாஹ்விடம் பின்வருமாறு வேண்டினார்கள்;

இறைவா! நீ எனக்கு வாக்களித்ததை நிறைவேற்று. நீ எனக்கு வாக்களித்ததை வழங்கு! இறைவா! இஸ்லாமிய இக்கூட்டம் அழிக்கப்பட்டால் இப்பூமியில் உன்னை வணங்குபவர்கள் (இதன் பின்னர்) எவரும் இருக்க மாட்டார்கள். (முஸ்லிம்)

என நபியவர்கள் பிரார்த்தித்த பின்னர் அல்லாஹ் பின்வரும் வசனத்தை இறக்கி அருளினான்.

" நீங்கள் உங்கள் இரட்சகனிடம் (உங்களை) இரட்சிக்கத் தேடிய போது (அணி அணியாக) உங்களோடு இணைந்து (அடுத்து) வரக்கூடியவர்களாக மலக்குகளில் ஆயிரம் (பேர்களைக்) கொண்டு நிச்சயமாக நான் உங்களுக்கு உதவி செய்வேன் என்று அவன் உங்களுக்கு பதிலளித்தான்." **(அல்குர்ஆன் 08:09)**

## யுத்தம் ஆரம்பம்:

நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களை அணிவகுக்கச் செய்து யுத்த தர்மங்களைப் போதித்து, அறிவுறுத்தினார்கள். ஹிஜ்ரி 2ம் ஆண்டு, ரமழான் மாதம் பதினேழாம் நாள் காலை பத்ருப் போர் நடைபெற்றது. இஸ்லாமியர்கள் நோன்புடன், காபிர்கள் ஆபாச களியாட்ட லீலைகளுடனும் களம் புகுந்தனர்.

அன்றைய போர் முறைப்படி எல்லோரும் ஒரே நேரத்தில் புகுவதில்லை. ஆரம்பத்தில் சிலர் மோதிக்கொண்டு, யுத்த வெறியை ஏற்படுத்திக் கொள்வர். இதனடிப்படையில் காபிர்கள் சார்பாக மூவர் வந்தனர். முஸ்லிம்கள் சார்பாக அன்சாரிகள் மூவரை நபிகளார் அனுப்பியபோது, எங்களுக்கு நிகரான குறைஷிகளை அனுப்புங்கள் என்றனர். அப்போது நபியவர்கள் உபைதா (ரலி), ஹம்ஸா (ரலி), அலி (ரலி) ஆகிய மூவரையும் அனுப்பினார்கள். இவர்கள் மூவரும் காபிர்களில் வந்த பின்வரும் மூவருடன் போரிட்டு அவர்கள் தலைகளை நிலத்தில் உருட்டினர்.

- ஹம்ஸா (ரலி) X உத்பா,
- உபைதா (ரலி) X வலீத்,
- அலி (ரலி) X ஷைபா

அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் கூறியதாவது; பத்ருப் போரின் போது நான் (படை) அணியில் நின்றுகொண்டிருந்த நேரத்தில் என் வலப்பக்கமும் இடப் பக்கமும் நான் பார்த்தேன். என்னருகே (இரு பக்கங்களிலும்) இள வயதுடைய இரு அன்சாரிச் சிறுவர்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்களை விடப் பெரிய வயதுடையவர்களிடையே நான் இருந்திருக்கக் கூடாதா என்று நான் ஆசைப்பட்டேன்.

அவர்களில் ஒருவர் என்னை நோக்கிக் கண் சாடை செய்து என் பெரிய தந்தையே நீங்கள் அபூ ஜஹ்லை அறிவீர்களா? என்று கேட்டார். நான் ஆம் (அறிவேன்) உனக்கு அவனிடம் என்ன வேலை? என் சகோதரன் மகனே என்று கேட்டேன். அதற்கு அச்சிறுவர் அவன் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) திட்டுகிறான் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது.. என் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது ஆணையாக நான் அவனைப் பார்த்தால் எங்களில் எவர் விரைவில் மரணிக்க வேண்டியுள்ளதோ அவர் (அதாவது எங்கள் இருவரில் ஒருவர்) மரணிக்கும் வரை அவனது உடலை எனது உடல் பிரியாது. (அவனுடன் போரிட்டுக் கொண்டேயிருப்பேன்.) என்று கூறினார். இதைக் கேட்டு நான் வியந்து போனேன். அப்போது மற்றொரு சிறுவரும் கண் சாடை காட்டி முதல் சிறுவர் கூறியது போன்றே கூறினார்.

சிறிது நேரம் தான் கழிந்திருக்கும். அதற்குள் அபூ ஜஹ்ல் மக்களிடையே சுற்றி வருவதைக் கண்டு இதோ நீங்கள் விசாரித்த உங்கள் ஆசாமி என்று கூறினேன். உடனே இருவரும் தங்கள் வாட்களை எடுத்துக் கொண்டு போட்டி போட்ட படி (அவனை நோக்கி) சென்று அவனை வெட்டிக் கொன்று விட்டார்கள்.

பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் சென்று அபூ ஜஹ்லை கொன்று விட்ட செய்தியை தெரிவித்தார்கள். நபி (ஸல்) அவர்கள் உங்களில் யார் அவனைக் கொன்றது என்று கேட்டார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் நான் தான் (அவனைக் கொன்றேன்) என்று பதிலளித்தார்கள். நபி (ஸல்) அவர்கள் உங்கள் வாட்களை நீங்கள் (இரத்தக் கறை போகத்) துடைத்து விட்டீர்களா? என்று கேட்டார்கள். இருவரும் இல்லை என்று பதிலளித்தார்கள். நபி (ஸல்) அவர்கள் வாட்கள் இரண்டையும் நன்கு பார்த்து விட்டு நீங்கள் இருவருமே அவனைக் கொன்றிருக்கிறீர்கள் (முஆத் பின் அம்ருடைய வாளில் ஆழமான இரத்தக் கறை தென்படுவதால்) அபூ ஜஹ்லுடைய உடல் இருந்து எடுத்த பொருட்கள் முஆத் பின் அம்ர் பின் ஜமூஹுக்கு உரியவை என்று கூறினார்கள். அந்தச் சிறுவர்கள் இருவரும் முஆத் பின் அஃப்ரா (ரலி) அவர்களும் முஆத் பின் அம்ரு பின் ஜமூஹ் (ரலி) அவர்களும் ஆவர். **(புகாரி 3141)**

அஷ்ஷெய்க் எம்.ஏ. ஹபீழ்

## அல்லாஹ்வின் உதவி:

பத்ரில் கலந்து கொண்ட முஸ்லிம் தரப்பினர் குறைவாக இருந்தும், அல்லாஹ் அவர்களுக்கு காபிர்களைக் குறைவாகக் காண்பித்து, முஃமின்களின் தொகையைக் காபிர்களுக்கு அதிகமாகக் காண்பித்தான்.

(நபியே! உம்முடைய கனவில் அல்லாஹ் (எண்ணிக்கையில்) அவர்களைக் குறைத்துக் காண்பித்ததையும், (நினைவு கூர்வீராக) அவர்களை (எண்ணிக்கையில்) அதிகபடுத்தி உமக்குக் காண்பித்திருந்தால், நீங்கள் தைரியமிழந்து யுத்தம் செய்வதைப் பற்றி உங்களுக்குள் ஒருவருக்கொருவர் பிணங்கிக் கொண்டு இருந்திருப்பீர்கள். எனினும், அல்லாஹ் (உங்களைப்) பாதுகாத்துவிட்டான். நிச்சயமாக அவன் நெஞ்சங்களிலுள்ளவற்றை நன்கறிந்தவன். **(அல்குர் ஆன்)**

## வானவர்களின் வருகை:

அல்லாஹுத்தஆலா, தனது உதவியை நேரடியாக வழங்கினான், வானவர்களை அனுப்பியும் உதவி புரிந்தான், ஆயிரம் வானவர்களை அனுப்பி உதவி புரிந்தான்.

## சத்தியத்திற்கு வெற்றி:

போரில் கலந்து கொண்ட குறைஷிகளின் முக்கிய தலைவர்களில் 24 பேர் கொல்லப்பட்டனர். (பார்க்க: புகாரி 3976, முஸ்லிம்) மொத்தமாக 70 பேர் கொல்லப்பட்டு, 70 நபர்கள் கைது செய்யப்பட்டார்கள். மக்காவில் நபியவர்கள் கஃபாவில் தொழும் போது ஒட்டகக் குடலை கழுத்தில் போட்டு வேதனைப்படுத்தியவர்கள் பத்ரு களத்தில் வேறறுத்த மரங்களாக சரிந்தனர் என இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

முஸ்லிம்களில் 14 போர் ஷஹீதாகினர். அவர்களில் அறுவர் குறைஷியர் (முஹாஜிர்கள்), எண்மர் (அன்ஸாரிகள்) ஆவர்.

எனவே, முஸ்லிம்களின் ஈமானிய பலத்தினால் பத்ர் களத்தில் மகத்தான வெற்றி கிடைத்தது.

உலகில் அராஜக சக்திகள், அநியாய அட்டூழியங்கள் ஒடுக்கப்பட்டு சத்தியமும், நீதியும், சமாதானமும் நிலவச் செய்து அல்லாஹ்வின் சட்டம் அகிலத்தை அரவணைக்கும் வரை பத்ருகள் ஓய்வதில்லை. நிச்சயம் அந்த பத்ரின் போது, முஃமின்களுக்கு அல்லாஹ்வின் உதவி கிட்டியது போல், இன்னும் கிட்டிக்கொண்டே இருக்கும் (இன்ஷாஅல்லாஹ்)

பத்ரில் (நடந்த யுத்தத்தில்) நீங்கள் (எண்ணிக்கையிலும், ஆயுத பலத்திலும் மிகக்) குறைந்தவர்களாயிருந்த சமயத்தில் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்தான். ஆகவே, நீங்கள் நன்றி செலுத்துவதற்காக அல்லாஹ்வுக்கு பயந்து நடந்து கொள்ளுங்கள். **(அல் குர்ஆன் 03:123)**

ஆலமுல் இஸ்லாம் – அஜ்வாத் பாஸி
aalamulislam.tkn@lakehouse.lk

# நோன்பின் சிறப்பு...

"ஒவ்வொரு நன்மையான காரியத்திற்கும் பத்து முதல் எழுநூறு மடங்கு வரை கூலி வழங்கப்படுகிறது. ஆனால் நோன்பு எனக்கே உரியது. எனவே அதற்கு நானே கூலி வழங்குவேன்" என்று அல்லாஹ் கூறுவதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். ***(ஆதாரம்; முஸ்லீம் _ 2119)***

✷ நபி(ஸல்) அவர்கள் ஷாபான் மாத கடைசியில் பின்வருமாறு கூறினார்கள்; ஒரு சிறந்த கண்ணிய மிக்க மாதம் உங்களை முன்னோக்கியுள்ளனது. அதில் ஆயிரம் மாதங்களை விட மகிமை மிக்க ஒரு இரவும் உள்ளது. அம்மாதத்தில் நோன்பு வைப்பதை அல்லாஹ் கடமையாக்கினான்.

அதன் இரவுகளில் நின்று வணங்குவதை சிறப்பாக்கினான். இம்மாதத்தில் ஏதாவது ஒரு நற்செயல் செய்தால் மற்ற மாதங்களின் ஃபர்ளான கடமையானதை செய்த செயலுக்குரிய கூலி வழங்கப்படும். ஒரு ஃபர்ளான நற்செயல் செய்தால் மற்ற மாதங்களில் எழுபது ஃபர்ழான நற்செயலுக்குரிய கூலி வழங்கப்படும் என்று கூறினார்கள். (அறி; ஸல்மான் பின் பார்ஸி(ரழி), நூல் : பைஹகி)

✷ எவரொருவர் நோன்பாளிக்கு உண்ண உணவும் குடிக்க நீரும் கொடுத்து உதவுகிறாரோ அவருக்கு அல்லாஹ் தனது பெரிய நீர் தடாகத்திலிருந்து நீர் புகட்டி அவர் சுவனம் செல்லும் வரை தாகிக்காமல் காப்பாற்றுகிறான். ***(அறிவிப்பவர் : ஸல்மான் பின் பார்ஸி (ரழி); நூல் : பைஹகி)***

✷ ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த இரவு...

நிச்சயமாக நாம் குர்ஆனை கண்ணியமிக்க லைலத்துல் கத்ர் என்ற இரவில் இறக்கினோம். மேலும் கண்ணியமிக்க இரவு என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது. கண்ணியமிக்க (அந்த) இரவு ஆயிரம் மாதங்களை விட மிக்க மேலானதாகும். (அல்குர்ஆன் )

ரமழான் மாதம் ஏன் சிறப்புக்குரிய மாதமாக திகழ்கிறது என்றால், ரமழான் மாதத்தில் தான் அல்குர்ஆன் அருளப்பட்டதால் இந்த மாதம் சிறப்பு பெறுகிறது. ஆயிரம் மாதங்களை விட சிறந்த இரவான லைலத்துல் கத்ர் எனும் இரவு இம்மாதத்தில் இருப்பதால் மேலும் இம்மாதம் சிறப்பும், கண்ணியமும் மிக்க மாதமாகிறது.

✷ லைலத்துல் கத்ர் எனும் இரவில் செய்யப்படும் வணக்கம் ஆயிரம் மாதங்கள் செய்யும் வணக்கத்தை விடச் சிறந்ததாகும். உதாரணத்திற்கு ஒருவர் ஆயிரம் மாதம் இரண்டு ரக்அத்கள் தொழுது வந்தால் கிடைக்கும் நன்மையை விட, இந்த ஒரு இரவில் இரண்டு ரக்அத்கள் தொழுவதற்குக் கூடுதலான நன்மைகள் கிடைக்கும்.



அபூ அம்னா, அநுராதபுரம்

# தவறுகளை சுட்டிக்காட்டும் அணுகுமுறைகள்

நோன்பை பழுதுபடாமல் பாதுகாப்பது எமது முக்கிய கவனமாக இருக்கவேண்டும். எமது நாவை பேணுவது நோன்பை பாதுகாக்கும் ஒரு கேடயமாகும். சகோதரத்துவம் என்பது இரத்தஉறவுகளை விட பலமானது. ஈமானின் அடிப்படையில் எழும் சகோதரத்துவம் நாளை மறுமையில் நபிமார்கள் ஆச்சரியப்படும் அளவிற்கு மகத்தானது. இறை தூதர் (ஸல்) அவர்கள் சகோதரத்துவத்திற்கு அதியுயர்ந்த ஒருபெறுமானத்தை கொடுத்து சமூகத்தை கட்டியெழுப்பினார்கள்.

கட்டிக்காத்த சகோதரத்துவம் ஒருவசனத்தால் பட்டுப் போகாமல் பாதுகாப்பது நமது பொறுப்பாகும். எனவே, சகோதரனின் தவறுகளை சுட்டும்போது மிகவும் கவனமாக உறவில் பழுதுபடாமல் காத்துக் கொள்வது உயர்ந்த பண்பாடாகும்.

ஒருசகோதரனின் தவறை தூய்மையான எண்ணத்துடன் சுட்டிக்காட்டுவது மிகஉயர்ந்த இஸ்லாமிய நற்பண்புகளில் உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அதில் மிகுந்த நிதானம் வேண்டும்.

நெருங்கிப் பழகும் தோழனின் குறைபாடுகளை இங்கிதமான முறையில் கண்டிப்பது அன்பை வளர்க்கும். அடிக்கடி அப்படி செய்வது ஒருபோதும் நன்மைதராது. அதுநண்பனை தூரமாக்கி எதிரியின் நண்பனாக்கிவிடும். எனவே குறைகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் நட்பு நிலைக்க வேண்டுமானால் சில ஒழுங்குவிதிகள் கண்டிப்பான தேவையாகும்.

சிலபோது குறைகளை தெளிவாக பேசவேண்டிய முறையில் பேசும் போதுதான் வீண் சந்தேகம், வெறுப்பு, குரோதம் போன்ற நோய்களில் இருந்து பாதுகாப்பு பெறலாம். எனவேதான், அல்குர்ஆனும் சுன்னாவும் சகோதரனின் குறைகளை சுட்டுவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய இங்கிதமான வழிமுறையை கற்றுத்தந்திருக்கிறது.

உண்மையில் அழகானமுறையில் தவறைச் சுட்டிக்காட்டும் பண்பு சகோதரத்துவத்தைப் பலப்படுத்தும், குடும்பஉறவை உறுதிப்படுத்தும், சமூக உறவை நிலைக்கச் செய்யும். ஆனால் இது மிகுந்த எச்சரிக்கையோடும் கவனத்தோடும் அணுகவேண்டிய ஒருவிடயமாகும்.

சகோதரனின் தவறுகளை கண்டிப்பது அல்லது சுட்டிக்காட்டுவது ஒரு கலை. அதுஉணர்வுகளையும் உணர்ச்சிகளையும் தன்மானத்தையும் உரசிப் பார்க்கும் நுணுக்கமான கலை. மிகுந்த கவனத்தோடு கையாளத்தவறினால் உறவுகள் பகையாகலாம். நண்பன் எதிரியாகலாம். அன்பு துயரமாகலாம்.

எனவே, சகோதரனின் மனப்பாங்கை மிகச் சரியாக புரிந்து கவனமாகவும் நடுநிலையாகவும் இந்தக் கலையை கையாள வேண்டும். ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமுக்கு கண்ணாடிதான். அதுஉடையாமல் பாதுகாப்பது ஒவ்வொருவருடையதும் தார்மீகப் பொறுப்பாகும்.

முஹம்மத் பஹீஹுத்தீன்...

# பாவமன்னிப்பின் மாதம்....



மனிதன் தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவங்களை மன்னிப்பதற்கு அல்லாஹ் நோன்பின் மூலம் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றான். ரமழான் என்பதன் பொருள் 'சுட்டெரித்தல்' என்பதாகும். நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது: ஈமானுடனும், நன்மையை எதிர்பார்த்தும் யார் ரமழான் மாத நோன்பை நோற்கிறாரோ அவருடைய முந்திய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடும். (புகாரி, முஸ்லிம்)

மேற்படி ஹதீஸில் நோன்பு நோற்கும் ஒருவர் ஈமானுடனும், நன்மையை எதிர்பார்த்தும் நோற்கும்போதுதான் அவர் முன் செய்த பாவங்களை அல்லாஹ் மன்னிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தாயைவிட பன்மடங்கு இரக்கமுள்ள அல்லாஹ் அவனின் அடியார்களை சுத்தப்படுத்தவே ஆசைப்படுகின்றான்.

இதேபோல் அவன் விதித்த சகல கடமைகளையும் பேணி நடப்பவர்களின் பாவங்களையும் மன்னிக்கின்றான்.

நோன்பு நோற்க சக்தி இருந்தும் அதனை நோற்காமல் விட்டு விடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அடியார்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு மறுமையில் சுவனம் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் அல்லாஹ் இம்மாதத்தில் சுவர்க்க வாசல்களைத் திறந்து நரக வாசல்களை மூடிவிடுகின்றான்.

அனேகமானவர்கள் சிறுசிறு நோய்களைக் காரணம் காட்டி நோன்பு நோற்காமல் இருக்கின்றனர். பாவங்களை சுட்டெரிக்க அல்லாஹ் தந்த சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் மீண்டுமொரு ரமழானை அடைந்து கொள்ளும் பாக்கியம் இல்லாமல் போய்விடலாம். சென்ற வருடம் நமக்கு ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக நிம்மதியாக நோன்பு நோற்கவும், அமல் செய்யவும் முடியாமல் போனது.


இவ்வருடம் அந்நிலைமை ஓரளவு நீங்கியுள்ளதால் நாம் முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்பட நோன்பு நோற்பதுடன் கொடிய நோயான கொரோனா இவ்வுலகை விட்டும் நீங்கிச் செல்லவும் பிரார்த்திக்க வேண்டியுள்ளது.

அஷ்ஷெய்க் ஏ.கே.அப்துல் ரவூப் (ஹாமி) பீ.ஏ. இறக்காமம்.












மு.சுதர்சனி
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


# இயந்திரத்திற்குள் இயைந்துபோகின்ற அருவிவெட்டு..!

ஊர்கூடித் தேரிழுத்த காலம் காணாமற் போனது போல ஊர் கூடி அருவி வெட்டின காலமும் காணுவதற்கு அரிதாக உள்ளது. இயந்திர உலகில் எல்லாமும் மறைந்து மறந்து செல்லும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

அருவிவெட்டு தொடர்பில் கந்தசாமி அவரின் ஆரம்ப கால உணர்வுகளை பகிர்ந்து கொண்ட போது,..

'என்ர அப்பப்பான்ர காலத்திலேயே நாங்கள் சின்னப் பெடியனா இருக்கேக்க இந்த வயல்ல இறங்கி வேலை செய்யத் தொடங்கினம். ஆரம்பத்தில மனிதக் கூலியக் கொண்டு திடலில் கதிரை அடிப்பம், அதுக்குப் பிறகு மாட்டைக் கொண்டு நெல்லைப் பிரிச்சம், பிறகு ட்ராக்டர் வந்தது, இப்ப இந்த அருவி வெட்டு மிஷின் வந்திட்டது.

நவரட்ணம் கூறுகையில்,....

வயலை உழுவது தொட்டு, நெல் விதைத்து, அதை எப்படிப் பராமரிப்பது என்ற விவசாயப் பாடத்தையே பத்து நிமிடங்களுக்குள் புகட்டி விட்டார் அவர். உண்மையில் இவர் 'நெல்லு டொக்டரா' என்று கூட எண்ணி என்னுள்ளேயே சிரித்துக் கொண்டேன். ஆனால், அவர் சொன்ன மறுபுறம் என்னை சிந்திக்கச் செய்தது

'முந்திக் காலங்கள்ள எல்லாம் நிறையப் பேர் வயல்ல வேலை செய்வினம். அருவி வெட்டு எண்டாலே வேலை செய்யவும் அதப் பாக்கவும் திருவிழாக்குப் போற சனக் கூட்டம் மாதிரி ஆட்கள் வருவாங்கள். காலைல அருவி வெட்டத் தொடங்கினால் மாலையாகி விடும் வேலை முடிய. வேலைக் களைப்பைப் போக்க, ஊர்ப் புதினம் கதைச்சுக் கொண்டு, வரிகள் தெரியாத பாட்டை அவையள் தங்களுக்குத் தெரிஞ்ச வசனத்தைப் போட்டு நிரப்பிப் பாட்டுப்பாடி வேலையைச் செய்வினம். இப்ப பாருங்கோ இதில மொத்தமே ஐந்துபேர் தான் நிக்கிறம்.' அவரின் அந்த ஆத்மார்த்த வார்த்தைகள், தொலைந்த சந்தோஷங்களின் வலிகளாகவே எனக்குத் தெரிந்தது.

அறுவடையின் பின்னர் வைக்கோலினை விலைக்கு வாங்கவென்றே பலர் வருவார்களாம், ஆனால் இப்போது இயந்திரத்தினுள் சிக்குண்டு வைக்கோல்கள் தூளாகிப் போவதனால் பின் அவற்றை எரித்து விடுகிறார்களாம். ஆக, வைக்கோலும் போயிற்று. இப்போதெல்லாம் அருவி வெட்டுவதற்கு ஆட்கள் தேவையின்மையால் இதனை நம்பியிருந்து வயல் வேலை செய்யும் பலரிற்கும் அருவிவெட்டு இயந்திரம் வேலை இல்லாமற்செய்து அவர்களை ஓரங்கட்டி விட்டது என்பதுதான் நிதர்சனம்.

மாற்றம் அவசியந்தானே என எண்ணும் எனக்குள்ளும் கூட, இதில் மாற்றம் தேவையா என்ற எண்ண ஓட்டம் இப்போது.

எங்கள் தாத்தாவும் பாட்டியும் உழைத்த எமது வயல் நிலங்களை மறந்து விட்டு நாகரிகம் என்னும் போக்கில் மிதந்து கொண்டிருப்பது எமை எங்கு போய்ச் சேர்க்கும் என்று, வயலிற்கு வெளியே கழட்டி விட்டிருந்த பாதணிகளை அணிந்து கொண்டு வயலையே பார்த்தபடி வீடு நோக்கி நகர்ந்தேன் நினைவுச் சுழல்களுடன்...





பல்கலை மாணவரின் மந்த மாருதம்





# அர்ச்சுனன் தபசு

## மலையகத்தின் அடையாளம்

இருநூறு வருடங்களுக்கு முன்னர் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு குடிபெயர்ந்த மலையகத் தோட்டத்தொழிலாளர்கள் தங்களது உழைப்பை மட்டும் இங்கு கொண்டுவரவில்லை. அவர்களின் உயிரோடும் இரத்தத்தோடும் கலந்த கலைகளையும் பண்பாட்டினையும் இங்கு காவிக்கொண்டே வந்தனர்.

பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட அம்மக்கள் காடுகளையும் மலைகளையும் தங்களது உழைப்பால் விளைநிலங்களாக மாற்றியமைத்தனர். உடலை இயந்திரமாக்கி, குருதியை வியர்வையாக்கி உழைத்த அம்மக்களில் அடிமைத்தளை வாழ்வில் சிறு மகிழ்வை ஏற்படுத்தியது அவர்களோடு கூடவே பயணித்த கலைவடிவங்களே. அவ்வாறு மலையக மக்களால் ஆடப்பட்ட பல கூத்து வடிவங்களில் ஒன்றே அர்சுனன் தபசு ஆகும்.

மலையகக் கூத்துக்கள் என்றால் பெரும்பாலானோரின் மனதில் தோன்றுவது காமன்கூத்துதான். ஆனால், மலையக மக்களிடையே காணப்படும் அர்ச்சுனன் தபசு எனும் கூத்துத் தொடர்பாக அறிந்திருப்பவர்கள் சிலரே. அர்ச்சுனன் தபசு மலையக தோட்டப்புறங்களில் விடிய விடிய ஆடப்படும் கூத்துக்களில் ஒன்றாக காணப்படுகின்ற இக்கூத்து இன்று அருகிவருகின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

மகாபாரதத்தினுடைய ஒரு இணைக்கதையை அடிப்படையாகக் கொண்டு இந்த கூத்தானது நிகழ்த்தப்படுகின்றது. பஞ்சபாண்டவர்கள் தங்களுடைய நாடு, நகரம், வீடு, வாசல் என்பவற்றினை வைத்துக் கௌரவர்களிடம் பகடையாடும் சந்தர்ப்பத்தில், சகுனியின் சூழ்ச்சியினால் பாண்டவர்கள் தோல்வியுற்று கௌரவர்களிடம் அனைத்தையும் இழக்கின்றனர். இழந்ததை மீண்டும் பெறவேண்டுமானால் பாண்டவர்களில் ஒருவர் காட்டுக்கு சென்று கழுமரத்தில் ஏறித் தவம் செய்ய வேண்டும் என்னும்போது இதற்காக முதுகுப்பகுதியில் மச்சரேகைக் கொண்ட அர்ச்சுனன் தேர்ந்தெடுக்கப்படுகிறான். இவன் தவத்திற்குத் தகுதியானவனா எனப் பார்ப்பதற்காகச் செல்லும் வழியெல்லாம் கிருஷ்ணன் மாறுவேடங்களில் சென்று அர்ச்சுனனைச் சோதிக்க இவை அனைத்திலும் வெற்றிக்கண்டு அர்ச்சுனன், பத்ரகாளியின் உதவியுடன் கழுமரத்தில் கடுமையாகத் தவம் புரிந்து வெற்றி கண்டு, ஏழகன்னியை மணக்கின்றான். இக்கதையே அர்ச்சுனன் தபசுக் கூத்தாக மலையக மக்களிடையே ஆடப்படுகின்றது.

இக்கூத்தில் அர்ச்சுனன், கௌரவர்கள், கிருஷ்ணன், சகுனி, பேரண்டன், பேரண்டக்கன்னி, பத்ரகாளி, நாகக்கன்னி, மோகக்கன்னி, ஏழக்கன்னி, மாரியம்மன் போன்ற பாத்திரங்கள் பிரதானமானவையாகக் காணப்படும்.

மலையகத் தோட்டப்புறங்களில் நிகழ்த்தப்படும் இக்கூத்தினுடைய மேடை அமைப்பானது ஒரு பக்கம் திரைச்சீலையால் மறைக்கப்பட்ட மூன்று பக்கமும் பார்வையாளர்களைக் கொண்ட அரைவட்ட வடிவமாகக் காணப்படும். மேலும், திரைச்சீலைக்கு முன்பு உயர்த்தி அமைக்கப்பட்ட பகுதியில் இக்கூத்தினுடைய அண்ணாவியார் (மாஸ்டர் என ஊர்மக்களால் அழைக்கப்படுபவர்), இசைக்கலைஞர்கள் மற்றும் கோரஸ் பாடுவோர் போன்றோர் அமர்ந்திருப்பர்.

திரைச்சீலைக்குப் பின்பகுதியில் கதாபாத்திரங்களுக்கான வேட உடை, ஒப்பனை போன்றன மேற்கொள்ளப்படும். இக்கூத்தில் இசைக்காக டோலக் மற்றும் ஜால்ரா பயன்படுத்தப்படுவதோடு சில கதாபாத்திரங்களின் வருகையை மெருகூட்டுவதற்காகத் தப்பும் பயன்படுத்தப்படும்.

தேரு கோப்புரவி கட்டி
ஜெய கம்ப கொடி பறக்க
அழகான தேரில் ஏறி அர்ச்சுனன் வாறேன்
ஹரஹரா.....
தேச தேச ராஜரெல்லாம் சபையில் கூடவே
அழகான தேரில் ஏறி அர்ச்சுனன் வாறேன்
ஹரஹரா.....
காலிலேயும் வெள்ளிமணி
கழுத்திலேயும் தங்ககார
அழகான தேரில் ஏறி அர்ச்சுனன் வாறேன்
ஹரஹரா.....
ராஜனும் வாறேன் அர்சுனராஜனும் வாறேன்
ராஜனும் வாறேன் அர்சுனராஜனும் வந்தேன்
கைதனிலே கத்தி தகதகவென
கானகம் வெற்றி....
மாரியுனை நம்பி மண்ணுக்கு நானும் வந்தேன்
காளியுன்னை நம்பி களத்துக்கு
நானும் வாறேன்........:
நானும் வாறேன்........:

இந்த பாடல் வரிகள் மூலமாக அர்ச்சுனனாக வேடமிட்டிருப்பவர் தன்னை மேடையில் பார்வையாளர்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்திக்கொள்வார். இவ்வாறு ஒவ்வொரு கதாபாத்திரமும் கூத்தில் தன்னைத்தானே பாடல்கள் மூலம் அறிமுகப்படுத்திக்கொள்வர். இங்கு கதையானது பாடல்கள் கூடாக பாத்திரங்களினாலேயே நகர்த்திச் செல்லப்படும். மேடைக்குச் சற்று அருகாமையில் அர்ச்சுனன் தவம் செய்வதற்காக 60 அடி உயரமான மரமொன்று அலங்கரிக்கப்பட்டு, நாட்டப்பட்டிருக்கும். மரத்தோடு 18 படிகள் பொருத்தப்பட்டிருக்கும். அம்மரத்தின் உச்சியில் வட்ட வடிவிலான தட்டு ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். கூத்தின் இறுதிகட்டத்தில் அர்ச்சுனன் வேடமிடப்பட்டிருப்பவர் ஒவ்வொரு படிகட்டுக்களில் கால்வைக்கும் போதும்,

ஒன்றாம் படிதளமாம் நம்ம
அர்ஜுன ராஜன்
ஓலைப்பூ மண்டபமாம்
இரண்டாம் படிதளமாம் நம்ம
அர்ஜுன ராஜன்
இரட்ணகிளி மண்டபமாம்
மூன்றாம் படிதளமாம் நம்ம
அர்ஜுன ராஜன்
முத்தழகு மேடைகளாம்
நான்காம் படிதளமாம் நம்ம
நவரட்ண மேடைகளாம்

மேற்படி பாடல்கள் 18 படிகளில் ஏறும் வரையிலும் பாடப்படும். இவ்வாறு 18 படிகளிலும் ஏறிச்சென்று வேலமரத்தின் உச்சியில் பொருத்தப்பட்டிருக்கும் வட்ட வடிவிலானத் தட்டில் நின்று வேடம் தரித்தவர் தவம் புரிவார். யாதாயினும் ஒரு பட்சி வானில் பறப்பதைக் கண்டவுடன், தவத்தை நிறைவு செய்து கொண்டு அர்சுனன் வேடமிட்டவர் மரத்திலிருந்து கீழே இறங்கி கூத்தினைக் காண வந்த மக்களுக்கு ஆசி வழங்குவார். மலையக மக்களின் ஒற்றுமையை வெளிக்காட்டும் வண்ணம் அர்ச்சுனனும் ஏழகன்னியும் வேடம் தரித்தோர் வீடு வீடாக சென்று அரிசி, காசு போன்றவற்றை தானமாகப் பெற்று வந்து அன்னதானமாக வழங்குவர். அர்ச்சுனன் தபசு நாடகமா அல்லது கூத்தா என்ற விவாதமானது இன்றைய சமூகத்தினரிடையே காணப்படுகின்றது. இதனை நாடகம் என்று சொல்லுபவர்கள் இதற்கான காரணங்களாகப் பலவற்றை முன்வைக்கின்றனர். எழுத்தில் காணப்படுதல், போலச் செய்யும் பண்பு காணப்படல், வேட உடை, ஒப்பனைகள், காட்சியமைப்புக்கள், மேடையமைப்பு, இசை மற்றும் ஒளியமைப்புக்கள், மேடைப்பொருட்கள் மற்றும் நாடகத்தின் பிரதான மூலங்களான நடிகன், பார்வையாளர்கள், மேடை போன்ற நாடகப்பண்புகளைக் கொண்டு காணப்படுவதால் அர்ச்சுனன் தபசு நாடகம் ஆகும் என்பதே பலரின் கருத்தாகும். இவையே அர்ச்சுனன் தபசு நாடக வகைகளில் ஒன்றாகும் என்ற கருத்துக்கு வலுச்சேர்ப்பதாகக் காணப்படுகின்றது.

தொடர்ந்தும் காலங்காலமாகச் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், குழந்தை வரம் இல்லாதவர்களுக்கு குழந்தைப்பேறு கிட்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்த்தப்படுவதாலும் அர்ஜுனன் தபசானது கூத்தே என்ற கருத்தும் வலுவாக முன்வைக்கப்படுகின்றது.

மலையக மக்களின் பொக்கிஷமாகத் திகழும் அர்ச்சுனன் தபசுக் கூத்தானது இன்று பல்வேறு சவால்கள் காரணமாக தோட்டப்புறங்களில் நடாத்தப்படுகின்றமை அருகிவிட்டது. குறிப்பாக, சினிமா மற்றும் சின்னத்திரை மீது மக்கள் கொண்டுள்ள நாட்டமானது இவ்வாறான கூத்துக்களில் இருந்து அவர்களைப் பிரித்து, தன்வசமாக்கிக் கொள்கின்றது. மேலும், இத்தகைய கூத்துகள் பாமர மக்களின் ஆர்வத்தினால் மாத்திரமே நடாத்தப்படுவதும் அதனுடைய வளர்ச்சிக்குத் தடையாகவே உள்ளது.

காமன் கூத்தானது 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற செம்மொழி மாநாடு, 2015ஆம் ஆண்டு மட்டகளப்பில் இடம்பெற்ற மட்டக்களப்பு கூத்தியல் மாநாடு, 2018ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழமுதம் போன்றவற்றில் உலகத் தமிழர்கள் அனைவரும் காணும் வகையில் மக்கள் கலை பண்பாட்டு அரங்கு எனும் குழுவினரால் மேடை வடிவமாகவும், மலையகங்களில் கல்வி கற்ற சில கலைஞர்களினால் நூல் வடிவாகவும் மக்களுக்கு கொடுக்கப்பட்டிருகின்றது. இதேபோன்று அர்ச்சுனன் தபசுக் கூத்தும் பாமர மக்களின் கைகளில் இருந்து கலையார்வம் கொண்ட மலையகக்கல்வி கற்ற சமூகத்தினரிடம் வந்து சேருமாக இருந்தால் மீண்டும் இக்கலையானது புத்துயிர்பெறும் என்று ஆணித்தரமாகக் கூறலாம்.

மேலும், கூத்துக்கள் என்றாலே இன்றைய இளைஞர்கள் ஒரு தாழ்வான எண்ணப்பாட்டை தோற்றுவிக்கக் கூடியது என நினைக்கின்றனர். கூத்துக்களில் ஈடுபட்டால் தாங்கள் சமூகத்தில் கேலிக்கு இலக்கானவர்களாக மாறி விடுவோம் என்ற எண்ணப்பாடு இவ்வாறான கூத்துக்களை வளர்ப்பதற்குத் தடையாக உள்ளது. இக்கூத்தானது மூன்று மாத காலமாக பயிற்சி பெற்று பின்னர் அரங்கேற்றப்படும் ஒன்றாகும். எனவே, இதனைப் பயில்வது மற்றும் பயிற்றுவிப்பதற்கான கால எல்லை அதிகமாகக் காணப்படுவதால் கூத்தினைக் கற்றுக்கொள்ள விரும்பும் மக்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. இங்கு ஆடப்படும் ஆட்ட முறைமை, பாடல்கள், வளங்கள் சற்றுக் கடினமானதாகக் காணப்படுவதாலும், 60 அடி மரத்தின் உச்சிக்கு ஏற வேண்டும் என்ற அச்சமும் கலைஞர்களுக்கு இக்கூத்தின் மீதான நாட்டம் இல்லாமைக்கான காரணங்களாகும்.




ஜே. பிரதீபன்
இரண்டாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 ஏப்ரல் 30
வெள்ளிக்கிழமை

# இரண்டாம் கட்ட கொரோனா தடுப்பூசி வழங்கல்



மன்னார் மாவட்டம். படம்: மன்னார் குறூப் நிருபர்



கிளிநொச்சி வைத்தியசாலையில்..... படம்: பரந்தன் குறூப் நிருபர்



வவுனியா வைத்தியசாலையில் மருத்துவ சேவையாளர்களிற்கு..... படம்: ஓமந்தை விஷேட நிருபர்

# அவசரகால நிலைமையை எதிர்கொள்ள யாழ். மாவட்டம் தயார் நிலையில்

## யாழ். மாவட்ட செயலர் க. மகேசன்

பருத்தித்துறை விசேட,யாழ்.விசேட நிருபர்

அவசரகால நிலை ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கான தயார் படுத்தல்களை மேற்கொண்டுள்ளோம் என யாழ். மாவட்ட செயலர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்ற கொரோனா நிலைமை தொடர்பாக ஆராயும் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று வரை 1544 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். நேற்று 12 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



இது வரை 19 உயிரிழப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த வாரம் யாழ்ப்பாண மாவட்ட நிலைமையை ஆராய்ந்து ஒரு சில நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம்.

இதற்கு மேலதிகமாக நேற்று ஆளுநர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றதனடிப்படையில், தேசிய ரீதியில் மற்றும் கொவிட் தடுப்பு செயலணியின் விதிமுறைகளுக்கு அமைய, தற்போதுள்ள நிலைமையை கருத்தில் கொண்டு வடக்கு மாகாணத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

அதில் சுகாதார வழிமுறைகளை அமுல்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள், பிரச்சினைகள், விழிப்புணர்வு நடவடிக்கைகளை முறையாக அமுல்படுத்தல், அதனை பின்பற்றாத நிலைமை காணப்படுதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டது.

சட்டவிரோத கடல் பயணங்கள். அதேபோல சட்டவிரோத தொடர்பாடல்களை தடுக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மீன்பிடி மக்களுக்கும் அத்தோடு கரையோரப் பகுதி மக்களுக்கும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

தனிமைப்படுத்தல் நிலையங்களை தேவைக்கேற்ப அதிகரிப்பதற்குரிய விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

வைத்தியசாலைகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறிப்பாக ஒக்சிஜன் நிலைமை தொடர்பில் ஆராயப்பட்டது.

பெரும்பாலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதாவது வடக்கு மாகாணத்தில் திருப்திகரமாக இருந்தாலும், அதற்குரிய முன்னேற்பாடு நடவடிக்கை எடுப்பதாகவும் கலந்துரையாடப்பட்டது.

சகல வழிபாட்டு தலங்களிலும் சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்றவாறு ஆலயத்தில் மதகுரு மற்றும் உபயகாரருடன் மக்களின் பங்குபற்றுதல் இன்றி ஆலய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

திருமண மண்டபங்களை பொறுத்தவரை சில விடயங்கள் கலந்துரையாடப்பட்டு பின்பு ஏற்கனவே தேசிய மட்ட சுகாதார வழி காட்டல்களுக்கமைய திருமண மண்டபங்களை இயங்கலாம் என்றும் ஆனால் அதற்கு முன்பாக அவர்கள் திருமணத்தில் கலந்து கொள்வோரின் அவருடைய பெயர் பட்டியல் உட்பட பல விவரங்களை பொது சுகாதார பரிசோதகரிடம் சமர்ப்பித்து உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

எனவே எந்தவொரு நடவடிக்கைக்கும் கடந்தகால அனுபவங்கள் இருக்கின்றன அவற்றை பின்பற்றி செயற்படல் நல்லது. ஆகவே பொது மக்கள் பீதியடைய தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

# வவுனியா மேற்கு, வெலி ஓயா கல்வி வலய பாடசாலைகள்; அவசர வேலைகளுக்கு முன்னுரிமையளிக்க ஆளுநர் பணிப்பு

வவுனியா மேற்கு மற்றும் வெலிஓயா கல்வி வலய பாடசாலைகளுக்கு மிக அவசரமாக தேவைப்படும் பாடசாலை கட்டட வசதிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும் முன்னுரிமையளித்து செயற்படுத்த ஆலோசனை வழங்கிய வடக்கு ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ் இங்கு மிக விரைவில் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வு வழங்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

வவுனியா மேற்கு மற்றும் வெலிஓயா வலய கல்வித் துறைசார் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலின் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வவுனியா மேற்கு மற்றும் வெலிஓயா வலய பாடசாலைகளின் கல்வித்துறைசார் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் (28) வடமாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ். எம் சார்ள்ஸ் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.



வவுனியா மேற்கு மற்றும் வெலிஓயா வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் கல்வித்துறைசார் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு தமது கல்வித்துறைசார் பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநரிடம் எடுத்துக் கூறினர். அத்துடன், கலந்துரையாடலில் கலந்துகொண்ட அனைத்து தரப்பினருடனும் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரிய பற்றாக்குறை, கட்டடப் பற்றாக்குறை, தளபாட பற்றாக்குறை, மாணவர்களுக்கான குடிநீர், மலசல கூடங்கள் இல்லாமை, விஞ்ஞான கற்றல் உபகரண மற்றும் கணனி உபகரணப் பற்றாக்குறை, மின்சார வசதியின்மை போன்ற முக்கியமான விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இங்கு கருத்து தெரிவித்த ஆளுநர்,

தற்காலிக இணைப்பு அடிப்படையில் எந்த ஆசிரிய நியமனமும் மேற்கொள்ள வேண்டாமெனவும் மிக விரைவில் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வு வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

# வட மாகாண 'வாரி சௌபாக்கியா' திட்டத்தின் இணைப்பாளராக திருமதி பவதாரணி ராஜசிங்கம்

நீர்ப்பாசன அமைச்சு மற்றும் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்சவினால் வட மாகாணத்திற்கான "வாரி சௌபாக்கியா" திட்டத்தின் இணைப்பாளராக திருமதி பவதாரணி ராஜசிங்கம் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.



கொள்கைப் பிரசார காலத்தில் "வரப்புயர" என்ற சிந்தனையை வேராக கொண்டு களமிறங்கிய இவர் நீர்ப்பாசன அமைச்சின் திட்டமிடல் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் பங்காற்றுவதன் மூலம் தனது கொள்கைகளை வடக்கு மக்களுக்காய் முன்னகர்த்திக் கொண்டிருக்கின்றார். மேலும் இவர் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் வட மாகாண இணைப்பாளராக பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் பவதாரணி ராஜசிங்கம் கருத்து தெரிவிக்கையில்,

நான் இன்னும் எனது கொள்கையின் வழியிலேயே சென்று கொண்டிருக்கிறேன். இந்த நீர்ப்பாசன அமைச்சின் வடமாகாணத்திற்கான இணைப்பாளராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளேன்.' வரப்புயர' என்பது வெறும் வார்த்தைகளாய் மட்டுமல்ல எனது வாழ்க்கையின் அங்கமாகவே அமைந்திருக்கின்றதென்பது நிறைவாய் உள்ளது. மக்களுக்காய் தொடர்ந்து பயணிப்பது நாட்காலிகளில் அமருவதைக்காட்டிலும் எனக்கு மகிழ்வானது என அவர் தெரிவித்துள்ளார்.

# முல்லை கடலில் அமைச்சர் டக்ளஸின் ஒழுங்குப்படுத்தலில் கூட்டு நடவடிக்கை

## பலர் கைது, படகுகளும் கைப்பற்றல்

முல்லைத்தீவு கடற்பரப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒழுங்குபடுத்தலில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கூட்டு நடவடிக்கையின் போது தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளை பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 24 பேர் கைது செய்யப்பட்டதுடன் 18 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன் காரணமாக முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல் போன்ற சட்ட விரோத தொழில் முறைகள் கணிசமானளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் குறித்த மாவட்டத்திற்கான உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத தொழில் முறைகள் பயன்படுத்தப்படுவது தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் மாவட்டத்தின் மீன்வளம் குறைவடைந்து வருவதாக பிரதேச கடற்றொழிலாளர்களினால் தொடர்ச்சியாக கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து கடற்படையின் கிழக்கு மாவட்ட தளபதி றியர் அட்மிறல் வை.எம். ஜெயரத்ன, கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கலிஸ்ரன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத் தலைவர் ஜோன்ஸன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் சமேளனத்தின் தலைவர் நிக்ஸன் ஆகியோருடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கூட்டுப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டது. இதுவரை கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில், நீதிமன்றினால் அவர்கள் இரண்டு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். சில்லாலை கடற்பரப்பில் 240 கிலோகிராம் கஞ்சா பறிமுதல் செய்து அழிப்பு

யாழ்.சில்லாலை கடற்பரப்பில் கடற்படையினர் நடத்திய சிறப்பு சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 240 கிலோகிராம் கஞ்சாவை பறிமுதல் செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் 28ஆம் திகதி, வடக்கு கடற்படை கட்டளை தலைமையகத்தின் பணிப்பின் கீழ் யாழ். சில்லாலை கடற்கரையில் சிறப்பு தேடுதல் நடவடிக்கையொன்றை கடற்படை மேற்கொண்டது.

இந்த நடவடிக்கையில் 240.95 கிலோ கஞ்சா 07 பைகளில் மற்றும்



105 போத்தல்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

இதன் பெறுமதி 72 மில்லியன்களாகும்.

இப்பகுதியில் கடற்படை தொடர்ந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால் கடத்தல்காரர்களால் கேரள கஞ்சாவை கரைக்கு கொண்டு வர முடியாது போயுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவை கடற்படையினர் தீ வைத்து எரித்துள்ளனர்.



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான



ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com



## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

மாணவர்களே! இம்மாதிரி வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுங்கள். (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன)

★ சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோடு மாத்திரம் இடுக.

★ செய்கை வேலைக்காக தாள் ஒன்றைப் பயன்படுத்துங்கள்.

1. பின்வரும் பந்தியை வாசிக்க

ஔவையார் தமிழ்நாட்டில் வாழ்ந்த பெண் புலவர் அவர் வள்ளல் அதியமான் அளித்த நெல்லிக்கனியை உண்டு நீண்ட காலம் உயிர் வாழ்ந்தார். அவர் இயற்றிய நூல்களில் "நல்வழி" நீதி நூலாகும்.
பந்தியை வாசித்து i - vi வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

i. ஔவையார் எங்கு வாழ்ந்தார்?

ii. அவர் இயற்றிய நீதி நூல் எது?

iii. ஔவையார் நீண்ட காலம் வாழ்வதற்கு உண்ட கனி எது?

iv. உயிர்வாழ்ந்தார் என்பதை எதிர்காலமாக மாற்றி எழுதுக?

v. கேட்பவருக்கு இல்லையென்னாது வாரி வழங்குபவனை கூறும் சொல் எது?

vi. நூல்களில் என்பதன் ஒருமைச் சொல்லை தருக

6*1 = 6 புள்ளிகள்

2. பின்வரும் பழமொழிகளின் கருத்தை தருக

i. உப்பிட்டவரை உள்ளளவும் நினை

ii. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

2*1 = 2 புள்ளிகள்

3. அடைப்பினுள் உள்ள எழுத்துக்களிலிருந்து பொருத்தமான எழுத்தை தெரிவு செய்து சொற்களை பூரணப்படுத்துக
(ழ.ள.ல்.ண.ன )

i. விமா____ம்
ii. புல்லாங்கு____ல்
iii. மா____வன்
iv. கத்தரிக்கோ____

4*1 = 4 புள்ளிகள்

4. அ. பொருத்தமான நிறுத்தக்குறியை இடுக

எவ்வளவு பெரிய மலை

ஆ. பின்வரும் வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

நட்சத்திரம் வானில் மின்னியது

2*1 = 2 புள்ளிகள்

5. அ. பின்வரும் சொற்களை பொருத்தமான கருத்துள்ள வாக்கியமாக எழுதுக
வானம் / பூமி / குறைந்த /நீர்வளம் / பார்த்த / நிலத்தை / என்று /கூறுவார் / விவசாயிகள்

ஆ. பின்வரும் கருத்திற்கு பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.

ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் ....................

2*1=2 புள்ளிகள்

6. சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

i. கயுநலவுர்தி | கயுனலவுர்தி | கயுனளவுர்தி
ii. வேட்பாலர் | வேட்பாளர் | வேட்பாழர்

2*2=4 புள்ளிகள்

7. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக

i. நான் எனது தங்கையுடன் பாடசாலைக்கு சென்றோம் ( )

ii. மான் கூட்டம் சிதறி ஓடியது ( )

iii. தாலாட்டு பாடல்கள் இனிமையானவை ( )

iv. ஒவ்வொரு பூவும் வாசமானவை ( )

4*1=4 புள்ளிகள்

8. கருத்தை தமிழில் எழுதுக
I. Be careful :
II. What is this :
III. குடை" என்பதன் ஆங்கில சொல்லை ஆங்கிலத்தில் தருக

3 புள்ளிகள்

9. பின்வரும் ஆங்கில சொல்லில் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது அவ்வெழுத்தை எழுதுக
I. Ele__hant
II. Cha__k
III. Da__ghter

3 புள்ளிகள்

10. சிங்கள வாக்கியத்தினது கருத்தை தமிழில் தருக
. மேய மகே புட்டுவ .
. கிரி சுது ......

2 புள்ளிகள்

11. "எமது பாடசாலை அழகானது" பற்றி 3 வாக்கியங்கள் எழுதுக
("ஐந்து வாக்கியங்களுக்கு குறையாது உறுப்பமைய எழுதுக)

6 புள்ளிகள்

12 தொடக்கம் 41 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையை தெரிவு செய்து கோடிடுக

12. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளில் மூன்றாவது படிமுறையாக உள்ளது
1. பிரார்த்தனை 2. உதிப்பு 3. திடசித்தம்

13. தேசியக்கொடியை சுற்றியுள்ள மஞ்சள் நிறப்பட்டி வெளிப்படுத்துவது
1. தமிழர்கள் 2. சிங்களவர்கள் 3. தேசிய ஒற்றுமை

14. "மிஹுறிந்து ஊர்வலம்" பின்வரும் எச்சமயத்தவருடன் தொடர்புடையதாகும்
1. கிறிஸ்தவர்கள் 2. முஸ்லிம்கள் 3. பௌத்தர்கள்

15. அரச நிறுவனங்களுள் ஒன்றாக கருதப்படுவது
1. சிறப்பு அங்காடி 2. தனியார் வங்கி 3. பிரதேச செயலகம்

16. இலங்கைத் தேசியக்கொடியில் முஸ்லீம் மக்களை குறித்து நிற்கும் நிறம்
1. பச்சை 2. மஞ்சள் 3. செம்மஞ்சள்

17. தாவரங்களில் உணவு தயாரிக்கும் பகுதி
1. வேர் 2. இலை 3. பூ

18. பிராணிகள் மூலம் பரம்பலடையாத வித்து
1. எருக்கலை 2. புலிநகம் 3. ஆடையொட்டி

19. வித்துக்கள் மற்றும் கிளைகள் மூலம் புதிய தாவரம் ஒன்றை பெறக்கூடியது
1. பசளி 2. பாகல் 3. மிளகாய்

20. இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் குறியீடு
1. அரசமிலை 2. சூரியன் 3. அன்னம்

21. இலங்கைக்கு அண்மையில் இருக்கும் நாடு
1. கொழும்பு 2. இந்தியா 3. கனடா

22. சூழலிற்கு நேயமான பூச்சி நாசினியை தயாரிப்பதற்கு மிகவும் பொருத்தமான வித்து
1. பப்பாசிவித்து 2. வேப்பம்வித்து 3. பட்டு

23. காந்தத்தை கிட்டக்கொண்டு வரும்போது பின்வரும் எப்பொருள் கவரப்படும்
1. பித்தளை 2. இரும்பு 3. அலுமினியம்

24. மின்னல் ஏற்படும் போது பாதுகாக்க வேண்டிய மிகவும் உகந்த முறை
1. மரத்தின் கீழே நிற்றல்
2. நீரினுள் இருத்தல்
3. வீட்டில் கட்டிலின் மீது இருத்தல்

25. இலங்கையின் தேசிய விளையாட்டில் பங்கு பற்றும் ஆட்டக்காரர்களின் எண்ணிக்கை
1. 6 2. 7 3. 11

26. உப்புத்தூள் விரைவாக கரைவது
1. தண்ணீரில் 2. வெந்நீரில் 3. குளிர்நீரில்

27. பின்வருவனவற்றுள் தொற்றுநோய் அல்லாதது
1. கண்நோய் 2. கொரோனா 3. நீரிழிவு

28. சூழல் நேய போக்குவரத்து சாதனம்
1. விமானம் 2. துவிச்சக்கரவண்டி 3. கப்பல்

29. உடலுக்கு சக்தியை கொடுக்கும் உணவு
1. சோறு 2. இறைச்சி 3. பருப்பு

30. உணவை பேணும் பாரம்பரிய முறைகளில் ஒன்று
1. தேனில் இட்டுவைத்தல், குளிரூட்டியில் வைத்தல்
2. தேனில் இட்டுவைத்தல், மண்ணில் புதைத்தல்
3. மண்ணினுள் புதைத்தல், பைக்கற்றுகளில் அடைத்தல்

31. நீராவியின் மூலம் தயாரிக்கப்படாத உணவு
1. இடியப்பம் 2. தோசை 3. பிட்டு

32. இலைக்கஞ்சி தயாரிக்க பயன்படுத்தப்படுபவை அடங்குவது
1. வில்வம்பூ, சாத்தாவாரி, பொன்னாங்காணி
2. வல்லாரை, சாத்தாவாரி, பொன்னாங்காணி
3. அம்பரல்லா, வெரலுக்காய், நெல்லி

33. உணவு விரயமாகும் சந்தர்ப்பம் அல்லாதது
1. நீண்டகாலம் பேணுவதற்கு விசேட முறைகளை கையாளுதல்
2. விளைச்சல் அதிகம் உள்ள போது பேணப்படல்
3. உணவுகளை சுவையற்றதாகவும் அதிகமாகவும் தயாரித்தல்

34. இயற்கை அனர்த்தங்களுள் ஒன்று
1. சுனாமி 2. மின்தாக்கம் 3. வாகனவிபத்து

(14ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com

13 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

35.நான்கு இதழ்கள் உள்ள பூ
1.வெட்சி 2.அலரி 3.ரோஜா

36.மேசன் வேலை செய்வோர் பயன்படுத்தும் உபகரணம்
1.சீவுளி 2.நீர்மட்டம் 3.துறப்பணம்

37.வித்துக்களை தூர இடங்களுக்கு கொண்டு செல்வது
1.கழுகு 2.வெளவால் 3.பூனை

38.இரவில் நடமாடும் பறக்கும் முலையூட்டி
1.வெளவால் 2.ஆந்தை 3.ஆட்காட்டிக்குருவி

39.ஹஜ்ஜு பெருநாள் கொண்டாடுபவர்கள்
1.முஸ்லிம்கள் 2.சிங்களவர்கள் 3.கிறிஸ்தவர்கள்

40.மாமிசங்கள் உண்பன
1.நாய்,பூனை 2.யானை,குதிரை 3.கிளி

41.பொதி செய்யப்பட்ட உணவை வாங்கும் போது முதலில் கவனிக்க வேண்டியது
1.காலாவதி திகதி 2.உற்பத்தி திகதி 3.பாலின் அளவு

42. 3,5,7,9 எனும் எண்களை சரியாக பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக (ஒரே எண்ணை பல தடவைகள் பயன்படுத்தலாம்)
1. 5 + __ + __ = 21
2. __ + __ + __ = 19
3. __ + __ - 3 = 13

43.950 உடன் 310 ஐ கூட்டினால் கூட்டுத்தொகை யாது ?

44. 704 இலிருந்து 123ஐ கழிக்குக

45.மேற்குறித்த எண்களை பயன்படுத்தி விடை எழுதுக

52 21 41
35 21 45
36 54 28 18

9ன் மடங்கு
27
____
____
____
____

46.பின்வருவனவற்றை உரோம எண்ணில் தருக.
ஐந்து ____ ஒன்பது ____

47.காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகள் 4யும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப்பெரிய எண் ?

| | |
|---|---|
| 6 | 0 |
| 5 | 9 |


48. உறை ஒன்றிலே 20 வீதம் 600 சவர்க்கார கட்டிகளை கடதாசியுறையினுள் போடுதல் வேண்டும் இதற்கு தேவையான உறைகள் எத்தனை?

49.7 பென்சில்கள் வீதம் நான்கு பெட்டிகளும் 6 பென்சில்கள் வீதம் மூன்று பெட்டிகளும் உள்ளன அந்த ஏழு பெட்டிகளிலும் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை?

50 பெருக்கல் * குறியீட்டாலும் பிரித்தல் # குறியீட்டாலும் குறிக்கப்படுமாயின் பின்வருவனவற்றின் பெறுமானத்தை குறிப்பிடுக
72 # 9 * 8

51 1kg வாழைப்பழத்தின் விலை ரூபா 40.00 ஆகும் 1kg 250g நிறையுள்ள வாழை சீப்புக்காக எவ்வளவு செலுத்த வேண்டும்?

52.





காட்டப்பட்டுள்ள உருவின் சுற்றளவு யாது ?

53.ஒரு போத்தலில் உள்ள நீரின் கனவளவு 750ml இத்தகைய 09 போத்தல்களில் உள்ள நீரின் கனவளவு ?

54.தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துக்களில் எழுதுக
45,310

55.வெற்றிடங்களை நிரப்புக
1kg 750g
+ 2kg 500g
________

56.உருவில் தரப்பட்டுள்ள சதுரத்தின் மூன்று சமச்சீர் அச்சுக்களை வரைக



57.420 மாம்பழங்கள் நான்கு பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன ஒரு பெட்டியில் அடுக்கப்பட்ட மாம்பழங்கள் எண்ணிக்கை யாது?

58.உருளையில் இருக்கும்
1 தட்டையான மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது?
2 வளைந்த மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது ?

59.மீனா மு.ப 7.45 இற்கு வீட்டில் இருந்து புறப்பட்டு 30 நிமிடங்களின் பின்னர் பாடசாலையை அடைந்தாள் அவள் பாடசாலையை அடைந்த நேரம் யாது ?

60.மூன்று பென்சில்கள் விலை ரூபா 18.00 ஆகும் எனவே ஒன்பது பென்சில்கள் விலை யாது ?

(உறுப்பாக எழுதுவதற்கு 2 புள்ளிகள்)

## கூட்டத்தைக் குறிக்கும் பெயர்கள்

- சனம் - திரள்
- அறிஞர் - அவை
- நடிகர் - குழு
- ஆசிரியர் - குழாம்
- கள்வர் - கூட்டம்
- மலை - தொடர்
- ஆடு - மந்தை
- மான் - கூட்டம்
- வைக்கோல் - கற்றை
- திறப்பு - கோர்வை
- கல் - குவியல்
- கடை - தொகுதி
- பல் - வரிசை
- பூ - கொத்து
- புகையிலை - சிப்பம்
- உடு - திரள்
- மா - தோப்பு
- நூல் - பந்து
- ஆ - நிரை
- புல் - கற்றை
- நெல் - குவியல்
- மணி - மாலை

## (23.04.2021) வெளியான வினாத்தாள் - I இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2 | 11 | 3 | 21 | 2 | 31 | 3 |
| 02 | 2 | 12 | 2 | 22 | 2 | 32 | 3 |
| 03 | 2 | 13 | 2 | 23 | 3 | 33 | 3 குறிப்பு: குடியரசாக மாறிய ஆண்டு 1972 |
| 04 | 2 | 14 | 3 | 24 | 2 | 34 | 2 |
| 05 | 3 | 15 | 2 குறிப்பு: லீப் வருடம் | 25 | 2 | 35 | 2 |
| 06 | 2 | 16 | 2 | 26 | 2 | 36 | 3 |
| 07 | 3 | 17 | 3 | 27 | 2 | 37 | 3 |
| 08 | 1 அல்லது 3 | 18 | 2 (500+20+20) | 28 | 2 | 38 | 2 |
| 09 | 2 | 19 | 2 | 29 | 3 | 39 | 1 |
| 10 | 3 | 20 | 3 | 30 | 2 | 40 | 2 |

## பயிர்களுக்கு நன்மை செய்யும் பிராணிகள்



ஓணான்



தேனீ



கும்பிடுபூச்சி



சிலந்தி



செண்பகம்



மண்புழு



தவளை



வண்ணத்துப்பூச்சி



உடும்பு

AMAZON COLLEGE
Where Success Begins

## உலகின் தேவைக்கேற்ப மாணவர்களை உருவாக்கும்

# அமேசன் உயர்கல்வி நிறுவனம்

உலகை மாற்றுவதற்கான முதல் சக்தி கல்வி அறிவு, எவருக்கு நல்ல கல்வி அறிவு ஞானம் இருக்கிறதோ அவர்கள் எந்த துறையில் பயணித்தாலும் வெற்றி பெறுவது நிச்சயம். அந்த அடிப்படையில் பம்பலப்பிட்டி அமேசன் உயர்கல்வி நிறுவனம் சுமார் 10 வருடங்களாக ஏனைய கல்வி நிறுவனங்களை விடவும் மாறுபட்ட முறையில் தனது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அமேசன் உயர் கல்வி நிறுவனமானது கல்வியோடு மட்டுமன்றி பல சமூக சேவைகளையும், பல இலவச புலமைப்பரிசில் திட்டங்களையும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வெறும் புத்தக கல்வியை மட்டும் மையமாக கொள்ளாமல், மாணவர்களுக்கிடையே சுய வேலைத்திட்டங்கள், *(Individual Project)* பயிற்சி பட்டறைகள் *(practical workshops)*, வெளிநாட்டு மாணவர்களின் தொடர்பாடல்,*(Foreign Students exchange)* பல உள்நாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை கை சாத்தி, மாணவர்களுக்கு *Individual Training* போன்றவற்றை வழங்கி தொழில் சந்தைக்கு ஏற்றவாறு மாணவர்களை தயாரித்து அனுப்புகின்றது விசேட அம்சமாகும்.

அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவம் 2021.04.08 ம் திகதி மிகவும் வெற்றிகரமாக கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த,விசேட அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், மாலைதீவுக்கான தூதுவர் ஒமர் ரஸ்ஸாக், பிரதித் தூதுவர் அஸ்லம் சாகிர், சிறைச்சாலை ஆணையாளர் திரு மலின் லியனகே, முன்னாள் கொழும்பு மாகாண சபை அங்கத்தவர் மனித உரிமைகள் அமைப்பின் ஆளுநருமான எ.ஜே. மொஹமட் பாய்ஸ்,கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதி எஸ். சந்திரசேகரன் உட்பட பல உள்நாட்டு வெளிநாட்டு கல்விமான்களும் கலந்து சிறப்பித்தனர்.

இலங்கையில் பல பல்கலைக்கழகங்கள் இருந்தாலும் சுமார் 30 % மாணவர்களே பல்கலைக்கழகங்களில் இணையக்கூடியதாக உள்ளனர். ஏனையவர் தனியார் பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும்

இணைந்து தங்களின் உயர் கல்வி கனவை நிறைவேற்றுகின்றனர். எமது நாட்டிலுள்ள பல வளங்களை இன்னும் சரியாக நிர்வகிக்க முடியாத நிலை காணப்பட்டுகிறது, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டுக்கு புதிய துறைகளை கற்ற துறை சார்ந்தவர்கள் அதிகளவில் தேவைப்படுகிறார்கள்.இதனை அரசாங்கத்தினால் மற்றும் செய்துவிட முடியாது. இன்று இலங்கையின் பொருளாதார கல்வி வளர்ச்சியில் கணிசமான பங்கினை தனியார் துறையினரே வழங்கி வருகின்றனர். இலங்கையில் பல உயர்கல்வி நிறுவனங்கள் மிகவும் சிறந்த முறையிலே தரமான பாடநெறிகளை வழங்கி வருகின்றன. இதன் விளைவாக பல மாணவர்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உயர் தொழில்களை பெறக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்துள்ளது என்று சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஆண்டுகளில் உலகிலேயே அதிகமாக தேவைப்படுகின்ற தொழிற்துறையான *Robotic Engineering, Green Technology, Solor Technology, Hybrid technology, Cloud Computing, Automated System, Mobile Technology, Wireless Technology,* போன்ற துறைகளுடன் தொடர்புடைய பாடநெறிகளையும் வெகுவிரைவில் ஆரம்பிக்க உள்ளது என அதன் நிறைவேற்று பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டார்...





இப் பட்டமளிப்பு விழாவில் சுமார் 140 மாணவர்கள் தங்களுடைய சான்றிதழ்களை பெற்றுக் கொண்டனர்.இதில் உளவியலும் உளவளத் துணையும், ஆசிரியர் பயிற்சி நெறி, தகவல் தொழில்நுட்பம், கணக்கியல் இதுபோன்ற பல துறைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதில் பங்கேற்ற அனைத்து அதிதிகளுக்கும், சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கும் மற்றும் சிறந்த விரிவுரையாளர்களுக்கும், இணை நிறுவனங்களுக்கும் விசேட நினைவுச்சின்னம் அமேசன் உயர் கல்வி நிறுவத்தின் நிறைவேற்று பணிப்பாளர் இல்ஹாம் மரைக்காரினால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அந்த வரிசையில் பம்பலபிட்டியில் அமைந்துள்ள நிறுவனமான அமேசன் உயர்கல்வி நிறுவனம் சிறப்பிடம் பெற்றுள்ளது. இவ் நிறுவனத்தின் பாடநெறிகள் அனைத்தும் ISO தரசான்றிதழ் பெற்றதாகவும் மூன்றாம் நிலை கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக காணப்படுகிறது.

அதுமட்டுமல்லாது பின்வரும் அங்கீகாரங்களுடனும் செயற்பட்டு வருகின்றது.

- திறன் மேம்பாடு மற்றும் தொழில் பயிற்சி அமைச்சினால் மற்றும் தொழிற்கல்வித் துறை ஆணைக்குழுவினால் பதியப்பட்டது.
- ஐக்கிய இராச்சியத்தின் IPA UK அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டது.
- E PLUS எனப்படுகின்ற அரசாங்கத்தின் SDFL நிறுவனத்தினால் கணனி பாடநெறிகளுக்கும் அரச அங்கீகார சான்றிதழ்களை வழங்குகின்றமை.
- BRITISH COUNCIL, IDP ஆகிய சர்வதேச நிறுவனங்களோடு இணைந்து ஆங்கில பாடநெறிகளையும் வழங்குகின்றது.
- மலேசியாவின் LINCOLN UNIVERSITY, CITY UNIVERSITY, அமெரிக்காவின் WICHITA UNIVERSITY, ஐக்கிய இராச்சியத்தின் WINCHESTER UNIVERSITY போன்ற பல்கலைக்கழங்களோடு இணைந்து இலகுவான முறையில் குறுகிய காலத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்வதற்கான வாய்ப்புகளையும் வழங்கி வருகின்றது.

இந்த பட்டப்படிப்புகள் அனைத்தும் UCG இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாகும். BSC PSYCHOLOGY, BACHELOR OF EDUCATION (B ED ), BSC IT, BBA, BCOM,BA IN ENGLISH போன்ற பாடநெறிகளும் மிக திறமை வாய்ந்த விரிவுரையாளர்களைக் கொண்டு அனைத்து பாடநெறிகளும் நடத்தப்படுகின்றன.







**எதிர்வரும் ஆண்டுகளில் உலகிலேயே அதிகமாக தேவைப்படுகின்ற தொழிற்–துறையான Robotic Engineering, Green Technology, Solor Technology, Hybrid technology, Cloud Computing, Automated System, Mobile Technology, Wireless Technology, போன்ற துறைகளுடன் தொடர்புடைய பாடநெறிகளையும் வெகுவிரைவில் ஆரம்பிக்க உள்ளது.**

### அமேசண் நிறுவனத்தின் சிறப்பம்சங்கள்

- விசேடமாக வடிவமைக்கப்பட்ட புதிய பாடவிதானங்கள்.
- நேரடியாகவோ, *online* மூலம் படிக்கக்கூடிய வசதிகள்.
- பாடநெறி இடையே பகுதி நேர செயற்பாட்டு வகுப்பு. *(training)*
- பாடநெறி நிறைவு செய்த பின்னர் அதன் துறையோடு சம்பந்தப்பட்ட தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றமை.
- அரச மற்றும் தனியார் வேலைவாய்ப்பிற்கு விண்ணப்பிக்க கூடிய சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- மிக பிரம்மாண்ட முறையில் சான்றிதழ்கள் வழங்கப்படும் வைபவம் நடைபெறும்.
- வெளிநாட்டு தூதரகங்களில் *(Embassies)* உறுதி செய்யக்கூடிய சான்றிதழ் வழங்கப்படும்.
- மாணவர்களின் வசதிக்கேற்ப நேரசூசி
- பாடநெறிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கு வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்பு அமைத்து கொடுக்கப்படும்.
- நாட்டின் எழுச்சிக்காக வேண்டி பல்வேறுபட்ட சமூகநல திட்டங்களையும் அமேசன் நிறுவனத்தின் பழைய மாணவ சங்கத்தினால் ஏற்பாடு செய்து சிறப்பாக நடைபெற்று வருகிறது.

### எமது விசேட பாடநெறிகள்

தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக உளவியலும் உளவள துறையின் தேவை அதிகரித்து வருகிறது. இதனை கருத்தில் கொண்டு இந்த பாடநெறிகளை விசேட வடிவமைத்து DIPLOMA முதல் DEGREE வரை ஆரம்பித்து நடத்தி வருகின்றது.இந்த பாடநெறியின் நோக்கம் மாணவர்களை உளவியல் ஆலோசகராக உருவாக்குவதாகும்.

அடுத்த பாடநெறியானது ஆசிரியர் பயிற்சி நெறியாகும். இலங்கையில் பல ஆசிரியர்கள் இருந்தாலும் வித்தியாசமான கற்பித்தல் முறை , சிறுவர் உளவியல் , முதலுதவி பயிற்சி, போன்ற பாடங்களில் தேர்ச்சியற்றவர்களாகவே காணப்படுகிறார்கள். இதனை கருத்தில் கொண்டு மேற்கூறப்பட்ட பாடநெறியை உள்ளடக்கி விசேட ஆசிரியர் பாடநெறி ஒன்றினை வடிவமைத்து நடத்தி வருகின்றனர். இதில் முன்பள்ளி ஆசிரியர்கள், தொண்டராசிரியர்கள், பயிற்சியாசிரியர்கள், அரசாங்க ஆசிரியர்கள், பாடசாலையை நிறைவு செய்த மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.

திறன் மேம்பாட்டு அமைச்சின் நிதி உதவியுடன் O/L நிறைவு செய்த மாணவர்களுக்கான பின்வரும் NVQ பாடநெறிகளை இலவசகாக வழங்கி வருகின்றது .

*CHILD CARE CENTRE (NVQ LEVEL 4)*
*CARE GIVER ( NVQ LEVEL 4)*
*CARE GIVER ( NVQ LEVEL 3)*

இந்த பாடநெறிகளை இலவசமாக கற்க விரும்பும் மாணவர்கள் 0778877907 என்ற தொலைப்பேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.

**மேலதிக தகவலுக்கு:**
**Amazon College & Campus**
294, 2nd Floor, Galle Road, Colombo 04
www.amazoncollege.lk
0765204605 / 0765204604

இக்பால் அலி...

Our Recognitions

TVEC Tertiary & Vocational Education Commission Registered Training Institute Regd. No. P01/0854
Skill Development & Vocational Training (SSTP & ELTP Project)
City & Guilds Approved Centre
SDFL Creating Career Confidence ...
EPlus Exams
EDhat International
EPlus Exams YOUR SKILLS & KNOWLEDGE CERTIFIED
idp education IELTS
International Professional Academy, UK
UK SKILLS AWARDS
Member of : FITIS
BRITISH COUNCIL TRAINED AGENT
PTPA SRI LANKA
BCVT INDIA
BrainGYM for a faster and sharper mind
EBMA

# கிழக்கின் குரல்



# வடகிழக்கு இணைக்கப்பட்டு மாகாண சபை தேர்தல் நடைபெறுமானால் அதில் போட்டியிடுவேன்

## மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்

*வெல்லாவெளி தினகரன் நிருபர்*

வடகிழக்கு இணைந்ததாக மாகாண சபை தேர்தல் நடைபெறுமானால் அதில்தான் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவேன் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டு.ஊடக அமையத்தில் புதன்கிழமை (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மாகாண சபை தேர்தல் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், ”சமகால அரசியலிலே மிக முக்கியமான பிரச்சினையாக தமிழ் அரசியல் வாதிகளின் மத்தியிலும்,முஸ்லிம் அரசியவாதிகளின் மத்தியில் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரம் குறைக்கப்பட்ட விடயம் இப்போதும் பேசு பொருளாகவும்,மிகவும் சூடாகவும் பேசப்பட்டிருந்தமை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.



கடந்த வாரம் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகமாக தரம் குறைத்து பெயர் மாற்றி சமல் ராஜபக்ஷவின் அமைச்சின் ஊடாக கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டமையை நாங்கள் அறியக்கூடியதாக இருந்தது.

இந்தவிடயமாக கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவிடம், தமிழ்தேசிய கூட்டமைப்பு நேரடியாக தெரியப்படுத்தி அதனை கதைத்து கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு நிரந்தரமாக ஒரு கணக்காளரை நியமித்திருந்தோம். அம்பாறை மாவட்டத்திலுள்ள சில சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களும்,சில முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டும் என்பதை மனதளவில் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஆனால் துரதிஸ்டவசமாக கணக்காளர் கடமையை பொறுப்பேற்பதற்கு முன்னர் சிலரின் சதித்திட்டத்தினால் தடுக்கப்பட்டு கணக்காளர் கடமையை பொறுப்பேற்கவில்லை என்பது, கல்முனை மக்களுக்கு மட்டுமன்றி ஒன்றுபட்ட தமிழ்,முஸ்லிம் மக்களுக்கும் கவலையை தந்திருந்தது.அத்துடன் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியும் மாறிப்போய் புதிய அரசாங்கத்தின் ஆட்சியும் வந்துள்ளது.

தமிழ்தேசிய கூட்டமைப்பின் ஒத்திவைக்கும் பிரேரணையில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒரு தமிழ் அரசியல்வாதிதான் அதை நிறைவேற்றக்கூடாது என்றும்,செய்யக்கூடாது என்றும், காலப்போக்கில் நாங்கள் அதனை செய்வோம் எனக்கூறப்பட்டது. நாங்கள் நல்லாட்சி அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுத்துள்ளோம் என்றும்,கிழக்கிலே தமிழர்,முஸ்லிம்கள் ஒற்றுமைப்படக்கூடாது என்பதற்காகவும்,கிழக்கில் தமிழர்களின் இருப்பு பறிமுதல் செய்யப்படுவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்புத்தான் காரணம் என பேசியவர்கள், இன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் குறைக்கப்பட்டதற்கு பேசாமல் இருப்பது கவலையளிக்கின்றது.

மாகாண சபை தேர்தல் நடப்பதற்கான எந்த அறிவிப்பும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

அதேபோன்று தமிழ் தேசிய கூட்டமைப்பில் முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் படவில்லை. வடகிழக்கு இணைக்கப்பட்டு மாகாண சபை தேர்தல் நடைபெறுமானால் அதில் நான் போட்டியிடுவேன்” என்றார்.

# ஊடகவியலாளர் சிவராமின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

*மட்டக்களப்பு விசேட ,வெல்லாவெளி தினகரன் நிருபர்கள்*



சிரேஷ்ட ஊடகவியலாளர் தர்மரெட்ணம் சிவராமின் 16 ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்று (29) மட்டக்களப்பு ஊடகமையத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா. கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மற்றும் ஊடகவியலாளர் ஏ.கங்காதரன் ஆகியோர் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர்.

கொரோனா தொற்று அச்சுறுத்தல் காரணமாக கலந்து கொண்ட குறைந்தளவு ஊடகவியலாளர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மலரஞ்சலி மற்றும் நினைவுச் சுடரேற்றி இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

# நிதி ஒதுக்கீடு

*திருமலை மாவட்ட விசேட நிருபர்*

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பிரதேச தேசிய பாடசாலைகளின் திருத்த வேலைகளுக்காக இவ்வாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீகின் வேண்டுகோளுக்கிணங்க இந் நிதியை கல்வி அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

கிண்ணியா மத்திய கல்லூரி, கிண்ணியா மகளிர் கல்லூரி ஆகிய இரு பாடசாலைகளுக்கு இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# கொரோனா விழிப்புணர்வு

*பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்*

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் திடீரென அதிகரித்து வருகின்ற நிலையில், கொரோனா அச்சுறுத்தலில் இருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டு சுகாதார துறையினர் உள்ளூராட்சி மன்றங்கள், பாதுகாப்பு தரப்பினர், பள்ளிவாசல் நிருவாகத்தினர் என பல்வேறு தரப்பினர்களும் பொது மக்களை பாதுகாக்கும் பொருட்டு சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நடப்பது தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது புனித றமழான் நோன்பு காலம் என்பதால் நோன்பு பெருநாளை நெருங்கி வருகின்ற சூழ்நிலையில், சனநெரிசல் காணப்படும் சந்தைகள், வர்த்தக நிலையங்கள், மற்றும் ஜவுளிக்கடைகளில் பொருட்களை கொள்வனவு செய்வதில் பொதுமக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்ற நிலையில், மக்களின் நெரிசலை குறைக்கும் பொருட்டும் சுகாதார வழி முறைகளை பின்பற்றி நடக்குமாறு சுகாதார தரப்பினர், உள்ளூராட்சி மன்றங்கள், பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் வீதிகளில் ஒலி பெருக்கி மூலம் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

# ரிஷாத் பதியுதீனின் கைதுக்கு கல்முனை மாநகர சபையில் கண்டனம்



*பாறுக் ஷிஹான்*

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் சிலர், சபை அமர்வுக்கு கருப்புச்சால்வை மற்றும் கருப்புப்பட்டி அணிந்து சமூகமளித்திருந்ததுடன் கண்டன உரைகளும் நிகழ்த்தப்பட்டன.

கல்முனை மாநகர சபையின் 37ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு புதன்கிழமை (28) மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே மாநகர சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஐவரும் கருப்புச் சால்வை மற்றும் கருப்புப்பட்டி அணிந்து வருகை தந்திருந்ததுடன் மற்றும் ஏனைய கட்சிகளை சேர்ந்த சில உறுப்பினர்கள் கருப்புப்பட்டி அணிந்து சபைக்கு வருகை தந்திருந்தனர்.

அத்துடன் மாநகர முதல்வர் உட்பட மாநகர சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்களான சி.எம்.முபீத், அப்துல் மனாப், பி.எம்.ஷிபான் ஆகியோர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் கண்டனம் தெரிவித்து உரியாற்றினர்.

# வருமானம் குறைந்த மக்களின் தொழில் முயற்சிகளை மேம்படுத்த நடவடிக்கை

## திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள

*திருமலை மாவட்ட விசேட , கந்தளாய் தினகரன் நிருபர்கள்*



சௌபாக்கிய உற்பத்திக் கிராமத்தின் மூலம் வருமானம் குறைந்த மக்களின் தொழில் முயற்சிகளை மேம்படுத்தி நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுசேர்க்க முடியும் என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

திருகோணலை மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை (28) நடைபெற்ற சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கலந்துரையாடலின்போதே மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கமைய நடை முறைப் படுத்தப் படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் 10 கிராமங்கள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் அரச அனுசரணையில் தொழில் முயற்சிகளை ஆரம்பித்து சிறந்த தொழில் முயற்சியாளர்களாக மக்களை மாற்ற முடியும்.

இத்திட்டத்தை ஏனைய மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாக அமைய செயற்பட அனைவரும் உரிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்று இதன்போது அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

குறித்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள முறைமை உட்பட பல விடயங்கள் இதன்போது பணிப்பாளர் நாயகத்தினால் உரிய உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் சௌபாக்ய அபிவிருத்தி பணியகத்தின் பணிப்பாளர் பிரதீப் விக்ரம, மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. கே.பரமேஸ்வரன், பிரதேச செயலாளர்கள், துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# கல்முனை காணி பதிவக ஊழியருக்கு கொரோனா தொற்று

*நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்*

கல்முனை காணிப் பதிவகத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று இனங்காணப்பட்டதையடுத்து, அவ் அலுவலகம் ஒரு வாரகாலத்துக்கு மூடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவையான பிறப்பு இறப்பு மற்றும் காணி பதிவுகளைக்கூட நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் பெறக்கூடிய (oneline) வசதிகளை இக்காரியாலயம் வழங்கி வந்தது.

கல்முனை பல்நோக்கு பழைய கட்டடத்தில் இயங்கிய இந்த அலுவலகத்துக்கு நிரந்தரக்கட்டிடம் இல்லாத நிலையிலும் மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கியது.

கல்முனையில் தற்போது கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தலைமையில் இராணுவம், பொலிசார் சுகாதார வைத்திய அதிகாரிகள் களமிறங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்முனை பிரதேச கொரோனா தடுப்பு செயலணி கூட்டம்

*பெரியநீலாவணை தினகரன் நிருபர்*

நாட்டில் தற்போது அதிகரித்து வரும் கொரோனாவை கல்முனை பிரதேசத்தில் கட்டுப்பாடுக்குள் கொண்டு வருவதற்கான கல்முனை பிரதேச கொரோனா தடுப்பு செயற்பாடு குழுவின் உயர்மட்ட கூட்டம் நேற்று (29) கல்முனை பிரதே செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் நடைபெற்றது.



இந் நிகழ்வில் கல்முனை இராணுவ மேஜர் சாந்த விஜேயகோன், கல்முனை கடற்படை முகாம் பொறுப்பதிகாரி மஹசேன் மொரேவேக, கல்முனை பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சுஜித் பிரியந்த,கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏ.எல்.எப் றகுமான்,கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் என்.ரமேஸ் உட்பட கிராம சேவகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

தற்போதைய சூழ்நிலையில் பெருநாள் காலமாக இருப்பதனால் பொது மக்கள் சுகாதார வழிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதோடு, முகக்கவசம், சமூக இடைவெளி போன்றவகளை கண்டிப்பாக கடைப்பிடிப்பதோடு பள்ளிவாசல்கள் ஊடாக இத் தகவல்களை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தி கொரோனாவினை முழுமையாக கல்முனை பிரதேசத்திலிருந்து ஒழிப்பதற்கு இக் கூடத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது

# விபத்தில் ஒருவர் பலி

*மணல்சேனை நிருபர்*

பதியத்தளாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பலத்துறுவெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இரு பிள்ளைகளின் தந்தையான (37) வயதுடைய பீ.எம்.விஜயரெத்தின என்பவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 25ஆம் திகதி பிள்ளைகளுக்கு சாப்பாடு வாங்கிக்கொண்டு தனது வீடு திரும்பிக்கொண்டு இருக்கும் போது, பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சிகிச்சையழிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை (27) திகதி உயிரிழந்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

# கிழக்கில் இன்று முதல் இரண்டாம் கட்ட டோஸ்

*றொட்டவெவ குறூப் நிருபர்)*

கிழக்கு மாகாணத்தில் நேற்று முதல் கொவிட்19 இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருவதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் நேற்று திருகோணமலை மாவட்டத்தில் சில சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஆரம்பித்துள்ளதாகவும், இன்று முதல் கிழக்கு மாகாணத்தில் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் இத் தடுப்பூசியை ஏற்றப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# 231வது கட்டளை அதிகாரிக்கு காத்தான்குடி பள்ளிவாசல் சம்மேளனத்தால் கௌரவிப்பு

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*



மட்டக்களப்பு கல்லடி 231வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் கேர்ணல் எஸ்.பி.ஜி. கமகே இடமாற்றலாகிச் செல்வதையொட்டி, காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் அவரை புதன்கிழமை (28) கௌரவித்தது.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன மண்டபத்தில் இந்த வைபவம் நடைபெற்றது.

இதன் போது சம்மேளனத்தின் உப தலைவர் எஸ்.கே.கலீல், செயலாளர் மௌலவி எம்.எஸ்.எம். ஜவாஹீர், காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி ஏ.எஸ்.எம்.ஹாறுன், செயலாளர் அஷ்ஷெய்க் டி.எம். அன்சார் நழீமி உட்பட சம்மேளன பிரமுகர்கள் முக்கியஸ்தர்கள் அதன் நிருவாகிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது மட்டக்களப்பு கல்லடி 231வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியராக கடமையாற்றி இடமாற்றலாகிச் செல்லும் கேர்ணல் எஸ்.பி.ஜி. கமகேயை கௌரவித்து அவருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

# அக்கரைப்பற்று சந்தைப் பகுதியில் கொரோனா விழிப்புணர்வு

*வாச்சிக்குடா விஷேட, அக்கரைப்பற்று மத்திய நிருபர்கள்*

கொரோனாவின் தாக்கம் அதிகரித்துவரும் நிலையில் அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிசாரும் இராணுவத்தினரும் சுகாதார பிரிவினரின் ஒத்துழைப்போடு முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கமைவாக புதன்கிழமை (28) அக்ரைப்பற்று சந்தைப்பகுதியில் திடீர் சோதனை மற்றும் கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யு எம் எஸ் பி விஜயதுங்க தலைமையில் இடம்பெற்ற இச்சோதனை நடவடிக்கையில், அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம். இரத்தினாயக்க கலந்து கொண்டதுடன், அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் சகி மற்றும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி பி.ரி.நசீர் உள்ளிட்ட பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பொலிசார் ,இராணுவத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

இச்சோதனை மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கையில் வியாபார நிலையங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், வியாபாரிகளும் பொதுமக்களும் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டனர்.

மேலும் வீதியில் பயணித்த வாகனங்களும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் கொவிட் சட்டத்தை மீறுகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்தல் வழங்கப்பட்டது.

இதேநேரம் வீதியில் முகக்கவசம் இன்றி நடமாடுகின்றவர்களுக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# பாங்க் ஒப் சைனா லிமிட்டட்
# ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் கூற்று
### 2020 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டு

中国銀行 BANK OF CHINA

## ஒருங்கிணைக்கப்பட்ட வருமான அறிக்கை

| | 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கானது (கணக்காய்வு செய்யப்பட்டவை) RMB மில்லியன | 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கானது (கணக்காய்வு செய்யப்பட்டவை) RMB மில்லியன |
|---|---|---|
| வட்டி வருமானம் | 760,070 | 758,007 |
| வட்டிச் செலவுகள் | (344,152) | (367,957) |
| **நிகர வட்டி வருமானம்** | **415,918** | **390,050** |
| கட்டண மற்றும் தரகுப்பண வருமானம் | 88,640 | 88,099 |
| கட்டண மற்றும் தரகுப்பணச் செலவு | (13,118) | (14,287) |
| **நிகர கட்டண மற்றும் தரகுப்பண வருமானம்** | **75,522** | **73,812** |
| வர்த்தகத்திலிருந்து நிகர ஆதாயம் | 8,055 | 28,563 |
| நிதியியல் சொத்துக்கள் மீதான தேறிய ஆதாயம் | 9,547 | 3,477 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 58,605 | 54,108 |
| **செயற்பாட்டு வருமானம்** | **567,647** | **550,010** |
| செயற்பாட்டு செலவினம் | (202,411) | (198,269) |
| சொத்துக்கள் மீதான மதிப்பிறக்க இழப்புக்கள் | (119,016) | (102,153) |
| **செயற்பாட்டு இலாபம்** | **246,220** | **249,588** |
| துணை மற்றும் கூட்டு நிறுவனங்களின் இலாபப் பங்கு | 158 | 1057 |
| **வரிக்கு முன் இலாபம்** | **246,378** | **250,645** |
| வருமான வரிச் செலவினங்கள் | (41,282) | (48,754) |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | **205,096** | **201,891** |
| **பகிர்ந்தளிக்கப்படுவதற்கு:** | | |
| தலைமைக் கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 192,870 | 187,405 |
| நிறுவனத்தை கட்டுப்படுத்த முடியாதவர்களின் உரித்து | 12,226 | 14,486 |
| | **205,096** | **201,891** |
| **பங்கொன்றுக்கான வருமானம்** (RMB) | | |
| - சாதாரண பங்கிற்கான அடிப்படை | 0.61 | 0.61 |
| - ஐதாக்கப்பட்டது | 0.61 | 0.61 |

## ஒருங்கிணைக்கப்பட்ட அனைத்துனம் உள்ளடக்கிய வருமான அறிக்கை

| | 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கானது (கணக்காய்வு செய்யப்பட்டவை) RMB மில்லியன | 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கானது (கணக்காய்வு செய்யப்பட்டவை) RMB மில்லியன |
|---|---|---|
| காலப்பகுதிக்கான இலாபம் | 205,096 | 201,891 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| **வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படமாட்டாத உருப்படிகள்** | | |
| - வரையறுக்கப்பட்ட நலத்திட்டதின் மீது ஏற்படும் இழப்புகள் | 101 | 13 |
| - உரித்து முதலீடு தொடர்பான நியாய மதிப்பீட்டில் ஏற்பட்ட மாற்றம் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானமூலம் நியாய மதப்பீட்டில் நியமிக்கப்பட்ட பத்திரங்கள் | (651) | 2,146 |
| - ஏனையவை | 10 | (69 ) |
| **உப தொகை** | **(540 )** | **2,090** |
| **இலாபம் அல்லது நட்டத்திற்கு பின்னர் மறு சீரமைக்கப்பட்ட விடயங்கள்** | | |
| - ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானமூலம் நியாயமான மதிப்பீட்டில் அளவிடப்பட்ட கடன் பத்தரங்களில் முதலீடுகளில் நியாய மதிப்பீட்டில் மாற்றம் | (2,976 ) | 11,919 |
| - ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானமூலம் நியாயமான மதிப்பீட்டில் அளவிடப்பட்ட கடன் பத்தரங்களில் முதலீடு மீதான கடன் இழப்புகள் | 3,084 | 515 |
| - இணைக்கம்பனிகள் மற்றும் கூட்டுமுயற்ச்சிகளின் பங்குரிமையில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | (130 ) | (440) |
| - வெளிநாட்டு நாணய பரிமாற்ற நடவடிக்கைளினால் ஏற்பட்ட மாற்றங்கள் | (21,549 ) | 7,089 |
| - ஏனையவை | (751 ) | 602 |
| **உப தொகை** | **(22,322 )** | **19,685** |
| காலப்பகுதிக்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம், வரி நீங்கலாக | (22,862 ) | 21,775 |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | **182,234** | **223,666** |
| **பகிர்ந்தளிக்கக்கூடிய மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்:** | | |
| தலைமைக் கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 177,424 | 205,601 |
| நிறுவனத்தை கட்டுப்படுத்த முடியாதவர்களின் உரித்து | 4,810 | 18,065 |
| | **182,234** | **223,666** |

## தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டு குறிகாட்டிகள்

| **விடயம் - RMB மில்லியன், சதவீதம் நீங்கலாக** | 2019 டிசெ. 31இல் முடிவடைந்த 12 மாதங்கள் | 2019 டிசெ. 31இல் முடிவடைந்த 12 மாதங்கள் |
|---|---|---|
| **ஒழுங்குபடுத்தும் மூலதன போதுமை - (ரூபா. மில்லியன்)** | | |
| தேறிய பொது உரிமையாண்மை படி I மூலதனம் | 1,704,778 | 1,596,378 |
| தேறிய படி 1 மூலதனம | 1,992,621 | 1,806,435 |
| தேறிய மூலதனம் | 2,451,055 | 2,201,278 |
| **ஒழுங்குபடுத்தும் மூலதன நிறைவு விகிதங்கள் (%)** | | |
| பொது உரிமையாண்மை படி I மூலதனம் (%) | 11.28 | 11.30 |
| கரு(படி I) மூலதனம் (%) | 13.19 | 12.79 |
| மொத்த மூலதன தளம் (%) | 16.22 | 15.59 |
| **சீராக்கிய விகிங்கள்** (குறைந்தபட்ச தேவை - 3%) | 7.70 | 7.43 |
| உயர்தர திரவச் சொத்துக்களின் மொத்தப் பங்குகள் | 4,519,319 | 3,962,370 |
| திரவத்தன்மை காப்பு விகிதம (%) | | |
| அனைத்து நாணயங்களும் (%) | 139.79 | 136.36 |
| நிகர ஸ்திர நிதியிடல் விகிதம் (%) | 123.50 | 124.00 |
| **இலாப இலாபம** | | |
| தேறிய வட்டி மிகை (%) | 1.85 | 1.89 |
| சொத்துக்களின் மீதான வருவாய் ((வரிக்கு முன்) (%) | 0.87 | 0.92 |
| உரிமையாண்மை மீதான வருவாய் (%) | 10.61 | 11.45 |

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமை பற்றிய அறிக்கை

| **இத் திகதியில்** | 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கானது (கணக்காய்வு செய்யப்பட்டவை) RMB மில்லியன | 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கானது (கணக்காய்வு செய்யப்பட்டவை) RMB மில்லியன |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும், வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களிடமிருந்து வருமதி | 803,145 | 565,467 |
| மத்திய வங்கியிலுள்ள மீதி | 2,076,840 | 2,078,809 |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதிநிறுவனங்களுடனான வசூல் மற்றும் கடன்கள் | 939,320 | 898,959 |
| வங்கிக் கடன் பத்திரங்களுக்கு வழங்கப்பட்ட அரச சான்றிதழ் பத்திரங்கள் | 168,608 | 155,466 |
| விலைமதிப்பற்ற உலோகங்கள் | 223,313 | 206,210 |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 171,738 | 93,335 |
| வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும், தேறியது நிதியியல் முதலீடுகள் | 13,848,304 | 12,743,425 |
| - இலாபம் அல்லது நட்டடம் மூலம் நியாய பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 504,549 | 518,250 |
| - ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்றினூடாக நியாயப் பெறுமதியியல் மதிப்பிட்ட நிதியியல் சொத்துக்கள் | 2,107,790 | 2,218,129 |
| - நிலைமாற்றப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துகள் | 2,978,778 | 2,777,683 |
| துணைக் கம்பனி மற்றும் கூட்டுமுயற்சிகளில் முதலீடு | 33,508 | 23,210 |
| சொத்து மற்றும் உபகரணங்கள் | 248,589 | 244,540 |
| முதலீட்டு சொத்துக்கள் | 22,065 | 23,108 |
| பிற்போடப்பட்ட வருமான வரிச் சொத்துக்கள் | 58,916 | 44,029 |
| ஏனைய சொத்துக்கள் | 217,196 | 179,124 |
| **மொத்த சொத்துக்கள்** | **24,402,659** | **22,769,744** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதிநிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 1,917,003 | 1,668,046 |
| மத்திய வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 887,811 | 846,277 |
| புழக்கத்திலுள்ள வங்கி குறிப்புகள் | 168,751 | 155,609 |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதிநிறுவனங்களிலிருந்து பெறப்பட்டவை | 411,949 | 639,675 |
| வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டுள்ள நிதி பொறுப்புகள் | 17,912 | 19,475 |
| பெறுதி நிதியியல் பொறுப்புகள் | 212,052 | 90,060 |
| வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கவேண்டியவை | 16,879,171 | 15,817,548 |
| வழங்கப்பட்ட பத்திரங்கள் | 1,244,403 | 1,096,087 |
| ஏனைய கடன்கள் | 26,034 | 28,011 |
| நடைமுறை வரி பொறுப்புகள் | 55,665 | 59,102 |
| ஓய்வூதிய அனுகூல கடப்பாடுகள் | 2,199 | 2,533 |
| பிற்போடப்பட்ட வருமான வரி பொறுப்புகள் | 6,499 | 5,452 |
| ஏனைய பொறுப்புகள் | 410,373 | 365,173 |
| **மொத்த பொறுப்புகள்** | **22,239,822** | **20,793,048** |
| **பங்கு மூலதனம்** | | |
| **வங்கியின் பங்குதாரர்களுக்குச் சாட்டத்தக்க மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | |
| பங்கு மூலதனம் | 294,388 | 294,388 |
| ஏனைய பங்கு மூலதன பத்திரங்கள் | 277,490 | 199,893 |
| மூலதன ஒதுக்கம் | 135,973 | 136,012 |
| திறைசேரி பங்குகள் | (8) | (7) |
| ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம் | 4,309 | 19,613 |
| நியதிச்சட்ட ஒதுக்கம் | 193,438 | 174,762 |
| பொது மற்றும் கட்டுப்பாட்டு ஒதுக்கங்கள் | 267,981 | 250,100 |
| பகிர்ந்தளிக்கப்படாத இலாபங்கள் | 864,848 | 776,940 |
| | 2,038,419 | 1,851,701 |
| நிறுவனத்தை கட்டுப்படுத்தாத உரித்து | 124,418 | 124,995 |
| **மொத்த பங்கு மூலதனம்** | **2,162,837** | **1,976,696** |
| **மொத்த பங்கு மூலதனமும் பொறுப்புகளும்** | **24,402,659** | **22,769,744** |

## ஒருங்கிணைக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்கள்

| **இதில் முடிவடைந்த காலப்பகுதிக்கு** | 2020 டிசெ. 31இல் முடிவடைந்த 12 மாதங்கள் (கணக்காய்வு செய்யப்பட்டவை) | 2020 டிசெ. 31இல் முடிவடைந்த 12 மாதங்கள் (கணக்காய்வு செய்யப்பட்டவை) |
|---|---|---|
| வருமான வரிக்கு முன்னரான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள் | 246,378 | 250,645 |
| **சீராக்கங்கள்:** | | |
| சொத்துக்கள் மீதான இழப்பு | 119,016 | 102,153 |
| பாவனையிலுள்ள சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் மீதான பெறுமானத்தேய்வு | 22,441 | 21,136 |
| அருவச் சொத்துக்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் நிலைமாறும் பெறுமதி | 5,065 | 4,219 |
| துணை, இணை மற்றும் கூட்டுமுயற்களில் முதலீட்டினை அகற்றுவதன் மூலம் நிகர ஆதாயம் | (202) | (91) |
| சொத்து மற்றும் உபகரணங்கள், அருவச்சொத்துக்கள் மற்றும் ஏனைய நீண்ட கால சொத்துக்களை அகற்றுவதன் மூலம் நிகர ஆதாயங்கள் | (1,246) | (1,089) |
| இணை மற்றும் கூட்டுமுயற்களில் பங்கு | (158) | (1,057) |
| நிதியியல் முதலீடுகளிலிருந்து வரும் வட்டி வருமனாம் | (150,553) | (155,126) |
| முதலீட்டு பத்திரங்களிலிருந்து கிடைக்கும் பங்குலாபம் | (507) | (388) |
| நிதியியல் சொத்துக்ள் மீதான நிகர ஆதாயம் | (8,486) | (1,981) |
| வழங்கப்பட்ட பத்திரங்களின் வட்டிச் செலவுகள் | 35,719 | 30,942 |
| கடன் இழப்புக்களுக்கான வட்டி வீதம் | (1,236) | (1,497) |
| குத்தகை கடன்களுக்கான வட்டி செலவுகள் | 829 | 876 |
| **செயற்பாட்டு சொத்துக்ள் மற்றும் பொறுப்புக்களில் தேறிய மாற்றங்கள்:** | | |
| மத்திய வங்கிகளின் மீதிகளில் நிகர அதிகரிப்பு | 47,092 | 64,656 |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் வைப்புக்களின் மூலமான வருமதியில் நிகர (அதிகரிப்பு)/வீழ்ச்சி | (206,736) | (144,184) |
| விலைமதிப்பற்ற உலோகங்களின் தேறிய (அதிகரிப்பு)/குறைவு | (17,061) | (25,019) |
| வாடிக்கையாளர்கள் கடன்கள் மற்றும் முற்பணங்களின் தேறிய அதிகரிப்பு | (1,204,492) | (1,322,755) |
| ஏனைய சொத்துக்களின் தேறிய அதிகரிப்பு | (4,050) | (184,386) |
| வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களுக்கு கொடுக்கவேண்டியவற்றின் நிகர (குறைவு)/அதிகரிப்பு | 250,181 | (60,531) |
| மத்திய வங்கிகளுக்கு கொடுக்கவேண்டியவற்றில் நிகர வீழ்ச்சி | 43,963 | (59,590) |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதிநிறுவனங்களின் இருப்புக்களில் நிகர வீழ்ச்ச | (226,873) | 27,391 |
| வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கவேண்டியவற்றின் நிகர அதிகரிப்பு | 1,043,998 | 932,931 |
| ஏனைய கடன்களின் தேறிய வீழ்ச்சி | (1,977) | (4,750) |
| ஏனைய பொறுப்புகளின தேறிய வவீழ்ச்சி | 140,613 | 70,573 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கை மூலமான காசுப்பய்சலின் (குறைபு)/அதிகரிப்பு** | **131,718** | **(456,922)** |
| செலுத்தி வருமான வரி | (58,690) | (27,344) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கை மூலமான தேறிய காசுப்பய்சலின் (குறைபு)/அதிகரிப்பு** | **73,028** | **(484,266)** |
| **முதலீட்டு நடவடிக்கை மூலமான காசுப்பய்ச்சு** | | |
| சொத்து மற்றும் உபகரணங்கள், அருவச்சொத்துக்கள் மற்றும் ஏனைய நீண்ட கால சொத்துக்களை அகற்றுவதன் மூலம் நிகர ஆதாயங்கள் | 4087 | 10,554 |
| துணை, இணை மற்றும் கூட்டுமுயற்களில் முதலீட்டினை அகற்றுவதன் மூலம் நிகர ஆதாயம் | 1,085 | 1,459 |
| பெறப்பட்ட பங்கிலாபம் | 909 | 1,693 |
| நிதி முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானம் | 152,114 | 153,950 |
| நிதி முதலீடுகளின் அகற்றம்/முதிர்ச்சி மூலமான வருமானம் | 3,302,506 | 2,800,591 |
| துணை, இணை மற்றும் கூட்டுமுயற்களின் முதலீட்டில் அதிகரிப்பு | (12,655) | (1,249) |
| சொத்து, உபகரணம் மற்றும் அருவச் சொத்துகள், ஏனைய நீண்டகால சொத்துகளின் கொள்வனவு | (39,622) | (39,019) |
| நிதியியல் முதலீடுகளின் கொள்வனவு | (3,425,490) | (3,093,657) |
| **முதலீட்டு நடவடிக்கையிலான தேறிய காசுப்பாய்சு வீழ்ச்சி** | **(17,066)** | **(165,678)** |
| **நிதியியல் நடவடிக்கை மூலமான காசுப்பாய்ச்சு** | | |
| பத்தரங்கள் வழங்கலின் மூலமான வருமானம் | 1,135,331 | 985,472 |
| ஏனைய பங்குரிமைப் பத்திரங்களின் வழங்கல் மூலம் வருமானம் | 109,560 | 139,961 |
| கட்டுப்பட்டுரிமையற்ற பங்குதாரர்களின் முதலீடுகள் மூலம் வருமானம் | 1,358 | 1,380 |
| வழங்கப்பட்ட ஏனைய பங்குரிமைப் பத்திரங்களின் மீளளிப்புகள் | (32,000) | (45,987) |
| மீளச்செலத்தப்பட்ட கடன்கள் | (984,337) | (684,069) |
| வழங்கப்பட்ட பத்திரங்களின் வட்டிக்காக செலுத்தப்பட்ட பணம் | (23,756) | (28,770) |
| தலைமைக் கம்பனியின் உரிமையாளர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (65,948) | (60,993) |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் மற்றும் கூப்பன் | (6,982) | (6,794) |
| நிதியியல் நடவடிக்கை மூலமான ஏனைய தேறிய காசுப்பாய்ச்சு | (6,609) | (7,089) |
| **நிதியியல் நடவடிக்கை மூலமான தேறிய காசுப்பாய்ச்சு** | **126,617** | **293,111** |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் நாணய மாற்று விகிதத்தின் தாக்கம் | (33,603) | 14,125 |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் நிகர அதிகரிப்பு/(வீழ்ச்சி)** | **148,976** | **(342,708)** |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 1,345,892 | 1,688,600 |
| **காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | 1,494,868 | 1,345,892 |

# பாங்க் ஒப் சைனா லிமிட்டட் கொழும்பு கிளை
# 2020 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டு

BANK OF CHINA

## வருமான அறிக்கை

| காலப்பகுதிக்கானது | 31 டிசம்பர். 2020<br>இ.ரூ '000 | 31 டிசம்பர். 2019<br>இ.ரூ '000 |
|---|---|---|
| வட்டி வருமானம் | 1,540,386 | 1,787,520 |
| வட்டிச் செலவுகள் | 491,041 | 447,328 |
| **நிகர வட்டி வருமானம்** | **1,049,345** | **1,340,192** |
| கட்டண மற்றும் தரகுப்பண வருமானம் | 80,272 | 30,791 |
| கட்டண மற்றும் தரகுப்பணச் செலவு | (971) | (1,706) |
| **நிகர கட்டண மற்றும் தரகுப்பண வருமானம்** | **79,301** | **29,085** |
| வர்த்தகத்திலிருந்து நிகர ஆதாயம்/(இழப்பு) | - | - |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய பெறுமதியில் குறிக்கப்பட்ட நிதிப் பத்திரங்களிலிருந்து நிகர ஆதாயம்/(இழப்பு) | - | - |
| நிதிச் சொத்துகளின் உள்வாங்கல் தவிர்ப்பு மூலமான நிகர இலாபம்/(நட்டம்) | - | - |
| தேறிய ஏனைய செயற்பாட்டு நட்டம் | 26,964 | 50,341 |
| **மொத்தச் செயற்பாட்டு வருமானம்** | **1,155,610** | **1,419,618** |
| இழப்புகளுக்கான சேதம் | 128,404 | (16,929) |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | **1,027,206** | **1,436,547** |
| தனிச் சேதம் | 438,834 | 390,274 |
| தேய்மான மற்றும் நிலைமாற்றச் செலவுகள் | 351,766 | 187,355 |
| ஏனைய செலவினங்கள் | 306,947 | 209,525 |
| **நிதியியல் சேவைகள் மீதான வரிக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | **(70,341)** | **649,393** |
| நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) | 47,024 | 132,377 |
| நிதிச் சேவைகள் மீதான தேசத்தைக் கடியெழுப்புத் வரி (NBT) | - | 12,404 |
| கடன் மீளளிப்பு விதிப்பனவு | - | 73,704 |
| **நிதியியல் சேவைகள் மீதான வரிக்கு பிந்திய தொழிற்பாட்டு இலாபம்** | **(117,365)** | **430,907** |
| துணை மற்றும் கூட்டு நிறுவனங்களின் இலாபப் பங்கு | - | - |
| **வரிக்கு முன் இலாபம்** | **(117,365)** | **430,907** |
| வருமான வரிச் செலவினங்கள் | 96,858 | 189,375 |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | **(214,223)** | **241,532** |

## இலாபம் அல்லது நட்ட அறிக்கை மற்றும் ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்

| | செப்டெம்பர் 30, 2020 உடன் முடிவடைந்த 09 மாதங்களுக்கானது<br>இ.ரூ. '000 | செப்டெம்பர் 30, 2019 உடன் முடிவடைந்த காலண்டிற்கானது<br>இ.ரூ. '000 |
|---|---|---|
| **காலப்பகுதிக்கான இலாபம்** | (214,223) | 241,532 |
| **வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படக்கூடிய உருப்படிகள்** | | |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட பத்திரங்கள் | - | 573 |
| நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட பத்திரங்கள் | (849) | - |
| **வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படமாட்டாத உருப்படிகள** | | |
| **காலப்பகுதிக்கான ஏனைய யாவுமுள்ளடங்கிய வருமானம், வரிகள் நீங்கலாக** | (849 ) | 573 |
| **காலப்பகுதிக்கான மொத்த யாவுமுள்ளடங்கிய வருமானம்** | (215,072 ) | 242,105 |

## அளவீட்டு அடிப்படையில் நிதிப் பத்திரங்களின் பகுப்பாய்வு

**2020 டிசம்னர் 31 இல் இருந்தவாறு**

| | நிலைமாறும் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதி சொத்துகள்/ பொறுப்புகள்<br>இ.ரூ. '000 | இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய பெறுமதியில் அளவிடப்பட்ட நிதி சொத்துகள்/ பொறுப்புகள்<br>இ.ரூ. '000 | நியாய பெறுமதியில் மொத்த யாவுமுள்ளடங்கிய வருமானம் ஊடாக அளவிடப்பட்ட நிதி சொத்துகள்/பொறுப்புகள்<br>இ.ரூ. '000 | மொத்தம்<br>இ.ரூ. '000 |
|---|---|---|---|---|
| **சொத்துகள்** | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 24,419,360 | - | - | 24,419,360 |
| மத்திய வங்கியிலுள்ள மீதிகள் | 4,419,793 | - | - | 4,419,793 |
| வங்கிகளிலான வைப்புகள் | 5,561,118 | - | - | 5,561,118 |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துகள் | - | - | 13,130 | 13,130 |
| நிலைமாறிய பெறுமதியில் நிதிச் சொத்துகள் - வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள | 6,518,739 | - | - | 6,518,739 |
| நிலைமாறிய பெறுமதியில் நிதிச் சொத்துகள் - ஏனைய நிதிப் பத்திரங்கள் | 7,267,193 | - | - | 7,267,193 |
| **மொத்த நிதிச் சொத்துகள்** | **48,186,203** | **-** | **13,130** | **48,199,333** |
| **பொறுப்புகள்** | | | | |
| வங்கிகளுக்கு வருமதியானவை | 18,322,821 | - | - | 18,322,821 |
| நிதியியல் பொறுப்புக்கள் - வைப்பாளர்களுக்க | 17,421,090 | - | - | 17,421,090 |
| **மொத்த நிதிப் பொறுப்புகள்** | **35,743,911** | **-** | **-** | **35,743,911** |

## அளவீட்டு அடிப்படையில் நிதிப் பத்திரங்களின் பகுப்பாய்வு

**2019 டிசம்பர் 31 இல் இருந்தவாறு**

| | நிலைமாறும் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதி சொத்துகள்/ பொறுப்புகள்<br>இ.ரூ. '000 | இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய பெறுமதியில் அளவிடப்பட்ட நிதி சொத்துகள்/ பொறுப்புகள்<br>இ.ரூ. '000 | நியாய பெறுமதியில் மொத்த யாவுமுள்ளடங்கிய வருமானம் ஊடாக அளவிடப்பட்ட நிதி சொத்துகள்/பொறுப்புகள்<br>இ.ரூ. '000 | மொத்தம்<br>இ.ரூ. '000 |
|---|---|---|---|---|
| **சொத்துகள்** | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 7,432,322 | - | - | 7,432,322 |
| மத்திய வங்கியிலுள்ள மீதிகள் | 9,415,664 | - | - | 9,415,664 |
| வங்கிகளிலுள்ள வைப்புகள் | 15,539,168 | - | - | 15,539,168 |
| ஏனைய நிதிச் சொத்துகள் | - | - | 13,130 | 13,130 |
| **மொத்த நிதிச் சொத்துகள்** | **32,387,154** | **-** | **13,130** | **32,400,284** |
| **பொறுப்புகள்** | | | | |
| வங்கிகளுக்கு வருமதியானவை | 15,482,379 | - | - | 15,482,379 |
| நிதியியல் பொறுப்புக்கள் - வைப்பாளர்களுக்க கொடுக்கவேண்டியவை | 4,436,438 | - | - | 4,436,438 |
| **மொத்த நிதிப் பொறுப்புகள** | **19,918,817** | **-** | **-** | **19,918,817** |

## நிதி நிலைமை பற்றிய அறிக்கை

| இத் திகதியில் | 31-டிசம்பர்-2020<br>இ.ரூ. '000<br>(கணக்காய்வு செய்யப்பட்டது) | 31-டிசம்பர்-2019<br>இ.ரூ. '000<br>(கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| **சொத்துகள்** | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 24,419,360 | 7,432,322 |
| மத்திய வங்கியிலுள்ள மீதிகள் | 4,419,793 | 9,415,664 |
| வங்கிகளிலான வைப்புகள் | 5,561,118 | 15,539,168 |
| OCI ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துகள் | 13,130 | 13,130 |
| நிலைமாற்றிய பெறுமதியில் நிதிச் சொத்துகள் - கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 6,518,739 | - |
| நிலைமாற்றிய பெறுமதியில் நிதிச் சொத்துகள் - ஏனையவை | 7,267,193 | - |
| ஆதனம், இயந்திரம், உபகரணம் மற்றும் சொத்தைப் பயன்படுத்தும் உரிமை | 2,330,846 | 2,015,076 |
| கட்புலனாக சொத்துக்க்ள மற்றும் நன்மதிப்பு | 9,336 | 3,995 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 38,244 | 16,045 |
| வருமதியான வருமான வரி மீளளிப்பு | - | 23,720 |
| ஏனைய சொத்துகள | 82,021 | 244,831 |
| **மொத்தச் சொத்துகள்** | **50,659,780** | **34,703,951** |
| **பொறுப்புகள்** | | |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | 18,322,821 | 15,482,379 |
| நிலைமாறிய பெறுமதியில் நிதிப் பொறுப்புகள் - வைப்பாளர்களுக்கு | 17,421,090 | 4,436,438 |
| நடப்பு வரிப் பொறுப்புகள் | 32,946 | - |
| ஏனைய பொறுப்புகள் | 2,341,630 | 2,028,129 |
| **மொத்தப் பொறுப்புகள்** | **38,118,487** | **21,946,946** |
| **பங்குரிமை** | | |
| அறிக்கையிட்ட மூலதனம் | 12,368,000 | 12,368,000 |
| சட்டபூர்வ ஒதுக்க நிதியம் | 19,422 | 19,422 |
| நியாயப் பெறுமதி ஒதுக்கம் | 573 | 573 |
| தேக்கிய சம்பாத்தியங்கள் | 153,298 | 369,010 |
| **மொத்தப் பங்குரிமை** | **12,541,293** | **12,757,005** |
| **மொத்தப் பங்குரிமை மற்றும் பொறுப்புகள்** | **50,659,780** | **34,703,951** |
| **எதேச்சையான பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்** | **14,193,676** | **10,988,612** |
| **நிறுவனத் தகவல்கள்** | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 42 | 39 |

## காசுப் பாய்ச்சல்கள்

| காலப்பகுதிக்கு | 31.12.2020<br>இ.ரூ. '000 | 31.12.2019<br>இ.ரூ. '000 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | |
| பெறப்பட்ட வட்டி வருமானம் | 1,540,386 | 1,787,520 |
| பெறப்பட்ட கட்டண மற்றும் தரகுப்பண வருமானம் | 79,301 | 29,085 |
| வட்டிச் செலவின் கொடுப்பனவுகள் | (446,033) | (413,436) |
    i. சமர்ப்பிக்கப்படும் 6, 7, 8ஆம் தொடரிலக்க வேலைகளுக்கான கேள்விகள் 2021-07-19ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில், இலங்கை காப்புறுதிச் சபையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனமொன்றில், நிர்மாணப் பாதுகாப்பு நிதியம் அல்லது மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் செயலாளரின் பெயரில் வழங்கப்பட்ட பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியைக் கொண்ட கேள்விப் பிணை முறியொன்றை கேள்விகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அந்தப் பிணை முறி 2021-08-19ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். அதை ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் சிறாப்பருக்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை ரொக்கப் பணமாச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை கேள்விப் பிணையாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

09. இந்தக் கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கூட்டமொன்று 2021-05-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மத்திய மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சில் இடம்பெறும்.

10. சகல கேள்விகளும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

| செயற்றிட்ட இல. | செயற்திட்டம் / நிகழ்ச்சித் திட்டம் | பதிவு | விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு பிணை முறியின் பெறுமதி | | மொத்தக் கிரய மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| | | CIDA | ரூபா | வங்கிப் பிணை முறியாக (ரூபா) | ரொக்கப் பணமாக் (ரூபா) | ரூபா |
| **மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்** | | | | | | |
| 01 | தெல்தோட்ட பிரதேச வைத்தியசாலையில் புதிய வெளி நோயாளர் பிரிவை நிர்மாணித்தல் | C5, C6 | 7,500.00 | 357,000.00 | 178,500.00 | 21,600,000.00 |
| **மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களம்** | | | | | | |
| 02 | உடமாதுர ஆயுர்வேத மத்திய மருந்தகத்தின் அத்தியாவசிய அபிவிருத்தி வேலைகள் | C5, C6 | 7,500.00 | 337,600.00 | 168,800.00 | 20,400,000.00 |
| 03 | தென்ன ஆயுர்வேத வைத்தியசாலையில் மருந்து உற்பத்தியகம், சமையலறை மற்றும் வெளி நோயாளர் பிரிவுக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | C4, C5 | 7,500.00 | 523,380.00 | 261,690.00 | 29,800,000.00 |
| **மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்** | | | | | | |
| 04 | தம்புள்ள நன்னடத்தை அலுவலகத்தின் மேல் மாடியை நிர்மாணித்தல் | C5-C6 | 3,500.00 | 227,200.00 | 113,600.00 | 13,750,000.00 |
| 05 | நாஉல நன்னடத்தை அலுவலகத்தை நிர்மாணித்தல் | C5-C6 | 7,500.00 | 400,840.00 | 200,420.00 | 24,200,000.00 |
| 06 | மாத்தளை போவத்த பங்களா முதியோர் இல்லத்தில் விறாந்தை மற்றும் முற்றத்தை அமைத்தல் | C7-C8 | 3,000.00 | 70,500.00 | 35,250.00 | 4,150,000.00 |
| 07 | மாத்தளை போவத்த பங்களா முதியோர் இல்லத்தின் மலசலகூடம் மற்றும் தாழ்வாரத்தை நிர்மாணித்தல் மற்றும் சமையலறையின் வேலைகளை நிறைவு செய்தல் | C7-C8 | 3,000.00 | 63,500.00 | 31,750.00 | 3,740,000.00 |
| 08 | திகன புனருத்தாபன வைத்தியசாலையின் விற்பனை கூடத்திற்கான பிரவேச வீதியை அமைத்தல் | C8-C9 | 1,000.00 | 7,500.00 | 3,750.00 | 430,000.00 |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சு,**
**மத்திய மாகாணம்,**
**த. பெ. இல. 121, சங்கராஜ மாவத்தை,**
**கண்டி.**

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்,**
**மத்திய மாகாணம்,**
**இல. 615, வில்லியம் கோபல்லாவ மாவத்தை,**
**கண்டி.**

2021-04-30

# விலைமனுக்களுக்கான அழைப்பு

கல்வி அமைச்சு

**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்**

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கான கமத்தொழில் பீடத்திற்கு ஆய்வுகூட தொகுதியுடனான விரிவுரை மண்டபங்கள் ஆகியவற்றை வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் செயற்பட வைத்தல்

(ஒப்பந்த இல.: **RJT/CW/2017/57)**

01. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கான கமத்தொழில் பீடத்திற்கு ஆய்வுகூட தொகுதியுடனான விரிவுரை மண்டபங்கள் ஆகியவற்றை வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சார்பாக, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். செயற்றிட்ட மொத்த ஆகுசெலவானது பெசேவ நீங்கலாக 643 இலங்கை ரூபாவென்பதுடன் ஒப்பந்தக் காலப்பகுதியானது 720 நாட்களாகும்.
02. பெறுகை முறைமையானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையாகும். ஒப்பந்த வகையானது வடிவமைத்தல் மற்றும் கட்டுமானம்.
03. 2021 ஏப்ரல் 30 ஆம் திகதியிலிருந்து 2021 மே 17 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக சிறாப்பரிடம் 70,000 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத கொடுப்பனவாக செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பிரதான வேலைகளுக்கான உதவி பதிவாளரிடமிருந்து (தொலைபேசி: 025-2266311) பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. தகுதியுள்ள விலைமனுதாரர்கள் வடிவமைத்தல் அலுவலக கொள்ளளவு மற்றும் கட்டிட நிர்மாணித்தலில் **CIDA** சி-1 அல்லது மேற்பட்ட தரத்திற்கு அமைந்தொழுகுதல் வேண்டுமென்பதுடன் இப்பதிவானது விலைமனுவின் செல்லுபடியாகும் காலம் வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
05. மேலதிக தகவலை 025-2266311 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பிரதான வேலைகள் பிரிவின் உதவிப் பதிவாளரிடமிருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பிரதான வேலைகளுக்கான உதவி பதிவாளரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கலாம்.
06. விலைமனுக்கள் 2022 சனவரி 04 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
07. அனைத்து விலைமனுக்களும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக துணைவேந்தரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும் 6,500,000 இலங்கை ரூபாவிற்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டதும் 2022 பெப்ருவரி 1 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமாக இருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள வகையில் இலகுவில் ரொக்கப் பணமாக மாற்றக்கூடியதும் நிபந்தனையற்றதுமாகவுமிருத்தல் வேண்டும்.
08. 2021 மே 19 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக புளியங்குளத்திலுள்ள விவசாய பீட சபை அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
09. கொழும்பு-07, வோட் பிளேஸ், 18 ஆம் இலக்கத்திலுள்ள கல்வி அமைச்சின் (உயர் கல்வி) உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரிவின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும்.
10. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2021 ஓகஸ்ட் 10 ஆம் திகதியன்று மு.ப. 11 மணி என்பதுடன் மூடிய பின்னர் விரைவாகவே கொழும்பு-07, வோட் பிளேஸ், 18 ஆம் இலக்கத்திலுள்ள கல்வி அமைச்சின் (உயர் கல்வி) உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரிவின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
11. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
12. 03/ 2020(i) என்ற இலக்கத்தையும் 2021.01.11 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை மற்றும் 2020.11.09 ஆம் திகதியும் 04/2020 அன்றும் வழங்கப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை ஆகியனவற்றின் அடிப்படையில் மதிப்பீடானது மேற்கொள்ளப்படுமென்பது விலைமனுதாரர்கள் கவனிக்கவும்.

**துணை வேந்தர்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹிந்தலை.**
**திகதி: 2021 ஏப்ரல் 30 ஆம் திகதியன்று.**

## தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

# ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப அதிகாரிகளை சேர்த்துக் கொள்ளல்

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் நுவரெலியா, புத்தளம், பதுளை, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தற்போது வெற்றிடமாகவுள்ள தொழில்நுட்ப அதிகாரி பதவிக்காக தகைமையுள்ள இலங்கை விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித் தகைமைகள்:**
சிங்களம்/தமிழ் ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் வேறும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் ஆறு பாடங்களில் (06) கல்விப் பொது தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தரம்) பரீட்சையில் கணிதப்பாடத் துறையில் தூய கணிதம்/ பிரயோக கணிதம்/ இணைந்த கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்பம் பாடத்துறையில் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் உட்பட மூன்று பாடங்களில் ஒரேமுறையில் சித்தியடைந்திருத்தல்

**தொழில்சார் தகைமைகள்:**

i. மொறட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி (சிவில்) அல்லது
ii. தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா பாடநெறி (சிவில்) அல்லது
iii. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் நடத்தப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா பாடநெறி (சிவில்) அல்லது
iv. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்) அல்லது
v. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் 1ஆம் பிரிவை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் (சிவில்) அல்லது
vi. தொழில் துறையுடன் சம்பந்தப்பட்ட தேசிய தொழில்சார் திறமை (NVQ-06) மட்டத்தில் தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல் (சிவில் பிரிவில்) அல்லது
vii. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்படி தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனத்தில் விசாரித்த கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேலே குறிப்பிடப்படும் தொழில்நுட்ப தகைமைகள் சகல விதத்திலும் சமமானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகள் (சிவில் பிரிவில்) பெற்றிருத்தல்

**நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் வேலைகள்**

i. புதிய நீர் திட்ட வரைவுகளை தயாரித்தல்/மதிப்பீட்டை தயாரித்தல், பரீட்சித்தல்
ii. தற்போது காணப்படும் செயற்றிட்டங்கள் மறுசீரமைப்பு/மேம்பாடு
iii. மழைநீரை சேகரிப்பதற்கான செயற்றிட்டத்தை செயற்படுத்துதல்
vi நிர்மாண மதிப்பீடு

**பொது நிபந்தனைகள்**

i. ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இப் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர் (சேவையின் தேவை மற்றும் உங்களை சேவை செயற்பாட்டின் அடிப்படையில் காலம் நீடிக்கப்பட ஏதுவாகலாம்.)
ii. விண்ணப்பதாரிகள் வெற்றிடங்கள் காணப்படும் மாவட்டங்களில் 03 வருட நிலையான பதிவுடன் இருப்பதுடன் அம் மாவட்டங்களில் சேவையாற்றவதற்கு இணங்குதல் வேண்டும். (நேர்முகத் தேர்வில் பிரிவை உறுதி செய்வதற்கு கிராம அதிகாரியின் சான்றிதழ் கட்டாயமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)
iii. இந் நியமானம்/இரத்துச் செய்தல்/திருத்தம செய்வதற்கான அதிகாரம் திணைக்கள தலைமைக்கு உரியது.
iv. விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடையில் இருத்தல் வேண்டும். (அரச சேவையில் ஓய்வுபெற்றவர்களுக்கு கூடிய வயது 67 வருடமாகும்)

**சம்பளம்**
அரச நிர்வா சுற்று நிருபம் 03/2016இல் MN03 சம்பள அளவில் III தரத்தில் 2020.01.01ம் திகதிக்கு ஆரம்பமாகும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் (கிட்டியதாக ரூபா 38840 ஆகும்).

- ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் அரச நிர்வாக சுற்று நிருபம் 03/2018இன் விதிமுறைகளுக்கு அமைவானதாகும்.

மேற்படி தகைமை கொண்ட விண்ணப்பதாரிகள் பெயர், முகவரி, வயது, கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் போன்ற தகவல்களை உள்ளடக்கியதாக தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 2021.05.17 அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மற்றும் dnews.ad2019@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் அனுப்பலாம். (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப அதிகாரிகளை சேர்த்துக் கொள்ளல் .... மாவட்டம்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,**
**இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி, தலவத்துகொட.**

2021.04.03ம் திகதி
**தொலைபேசி: 011 2775861**

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

## மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு

# விண்ணப்பங்கள் கோரல்

மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை அதிகாரிகள் குழாமை உருவாக்குவதற்காக விண்ணப்பங்கள் கோரும் தினத்தை நீடித்தல்

| வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் மற்றும் பிரசுரமான திகதி | விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு அறிவித்த இறுதித்திகதி | விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி |
|---|---|---|
| அறிவித்தல் இல.2,216 மற்றும் 2021.02.19ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தின் iv (அ) பிரிவு - மாகாண சபைகள் | 2021.03.30 | 2021.05.15 |

ஒழுக்காற்று நடவடிக்கை அதிகாரிகள் குழாமிற்கான விண்ணப்பத்தின் போது குறித்த வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன், மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய நிபந்தனைகள் அவ்வாறே இருக்கும்.

இது பற்றிய மேலதிக விபரங்கள் மேல் மாகாண அரசசேவை ஆணைக்குழுவின் www.psc.wp.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## தென் மாகாண கல்வி அமைச்சு

# தென் மாகாண சபையின் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை ஆட்சேர்த்தல் - 2021

**தென் மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆசிரியர் சேவை ஆசிரியர் சேவை சட்டவாக்கத்தின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பு 1(அ) தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்காக பட்டதாரிகளிடமிருந்து நிகழ்நிலை மூலம் (Online) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**விண்ணப்பிக்கும் முறை**

**தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் (**www.psc.sp.gov.lk) ஊடாக நிகழ்நிலை மூலம் (Online) மட்டும் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அந்த இணையதளத்தில் காட்டப்பட்டுள்ள ''ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்கு பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல்'' அறிவுறுத்தலின் பிரகாரம் விண்ணப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை இந்த (www.psc.sp.gov.lk) இணையதளத்திற்குப் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**ரஞ்ஜித் யாபா,**
**செயலாளர்,**
**தென் மாகாண கல்வி அமைச்சு,**
**தக்ஷிணாபாய,**
**லபுதுவ.**

பெருந்தோட்ட அமைச்சு

தெங்கு, கித்துல் மற்றும் பனை பயிர் மேம்பாடு மற்றும் சார்ந்த கைத்தொழில் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

## தென்னை பயிர்ச்செய்கை சபை

# பதவி வெற்றிடம் — 2021

தென்னை பயிர்ச்செய்கை சபையின் மாதிரி தென்னந்தோப்பு சேவையின் கீழ்க்காணும் பதவிகளுக்கான வெற்றிடங்களுக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி : உதவி முகாமையாளர் (சிவில்) - தோட்டம் II தரம்**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானமாணி பொறியியல் (சிவில்) பட்டம்

**அல்லது**

ii. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப / தொழில்பயிற்சி நிறுவனத்திலிருந்து விநியோகிக்கப்படும் தேசிய தொழில்சார் திறமை (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்கு குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்

**அல்லது**

iii. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/தொழில்பயிற்சி நிறுவனத்தினால் விநியோகிக்கப்படும் தேசிய தொழில்சார் திறமை (NVQ) ஆறாம் (06) மட்டத்திற்கு குறையாத மட்டத்தில் திறமை சான்றிதழைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபை/நியதிகள் நிறுவனத்தில் குறைந்தபட்சம் குறித்த துறையில் நான்கு (04) வருட அனுபவத்தை பெற்றிருத்தல்

**அல்லது**

iv. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தொழில்நுட்ப/தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் விநியோகிக்கப்படும் தேசிய தொழில்சார் திறமை (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்கு குறையாத மட்டத்தில் திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபை/நியதிகள் நிறுவனம் என்பவற்றில் குறித்த துறையில் பத்து வருட (10) அனுபவத்தை பெற்றிருத்தல்

**சம்பள வகை : JM 1-2**
**சம்பள அளவு : ரூ.43355-755x10-1135x18-71335**

**வயது:** 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச/கூட்டுத்தாபன/சபைகள் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**வேறு நிபந்தனைகள்**
i. சகல விண்ணப்பதாரிகளும், இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் செயற்பாடுகளை சரியாக நிறைவேற்றுவது போலவே நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உளதகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள்**
- ❖ சுயதரவு மற்றும் கல்வித்தகைமைகள், தொழில்சார் தகைமை விபரங்கள் மற்றும் அனுபவம் பற்றிய விபரங்கள் உள்ளடக்கிய அத்தகைமைகளை உறுதி செய்யக்கூடிய சான்றிதழ்களின் பிரதியுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் தற்போது அரச/கூட்டுத்தாபன/சபைகள் சேவைகளில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவன தலைமையூடாக அனுப்புதல் வேண்டும்.
- ❖ விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு இருக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- ❖ சகல விண்ணப்பங்களும் 2021.05.14 அல்லது அத்தினத்திற்கு முன் கிடைக்குமாறு "தலைவர், தென்னை பயிர்ச்செய்கை சபை, 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இங்கு குறிப்பிடப்படாத விடயங்கள் இருப்பின், இது பற்றி குறித்த சேர்த்துக்கொள்ளல் அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். பதவி பற்றி மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட தொடர்புகள் அதற்காக தகைமை அற்றதாகக் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**தலைவர்,**
**தென்னை பயிர்ச்செய்கை சபை, 9/428**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல**

# பொது அறிவித்தல்



இக்கம்பனியின் இயக்கங்களுக்கான முகாமையாளராக சேவையாற்றியவரும் 197724510039 என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையின் உரிமையாளரும் பிலியந்தல, சித்தமுல்ல, 4 ஆம் ஒழுங்கை, 27ஏ என்ற முகவரியில் வசிப்பவருமாகிய திரு.ஜி.கே.ஜி. உத்திக இரோஷ் என்பவர் இதுமுதற்கொண்டு இக்கம்பனியின் ஊழியரொருவர் இல்லை என பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது. மேலே பெயர் குறிப்பிட்டுள்ளவருடன் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களையும் இக்கம்பனியின் சார்பில் மேற்கொள்ள வேண்டாமென்றும் அவருடன் எந்தவொரு நபர்/ கம்பனி ஏதாவதொரு செயலில் ஈடுபடின் அது அவருடைய (ஆண்/பெண்) தனிவிருப்பிலும் பொறுப்பிலும் இருக்கும். 2021 ஏப்ரல் 22 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் மேலே பெயர் குறிப்பிட்டுள்ளவரின் அதிகாரமற்றதும் சட்டரீதியிலுமற்ற செயற்பாடுகளுக்கு கம்பனியானது எந்தவொரு பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளாது.

**Et Lab Manufacturing (PVT) LTD.**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

**Daily News**

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

**பிரசித்தி நொத்தாரிசு எல் ஏ. பன்துல சமரசேகர அவர்களினால் 2020-08-21 ஆம் திகதி எழுதி அத்தாட்சி செய்யப்பட்ட 2349 இலக்கம் கொண்ட**

## அட்டர்னி தத்துவப் பத்திரத்தை இரத்துச்செய்தல்

உதுகொட, மஹரங்கல்லை வதிவிடமாக கொண்ட தஹனாயக்க விதானலாகே அமித் லக்மால் தகனாயக்கா (தே.அ.அ. இல. 198921510039) ஆகிய நான் எல்.ஏ. பன்துல சமரசேகர பிரசித்த நொத்தாரிசு அவர்களால் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 2349 கொண்ட விஷேச அட்டர்னி தத்துவ பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எனது செயல்களை மேற்கொள்வதற்காக எனது உண்மையானவரும். சட்டபூர்வ அட்டர்னி தத்துவருமான உதுகொட கஹடகஹமுல வதிவிடமாக கொண்ட மெத்தும பெருமால் ஆரச்சில்லாகே சுஜித் விக்ரமசிங்க (தே.அ.அ. இல. 833111370V) என்பவரை நியமித்ததோடு. அப்பத்திரம் உதவிப் பதிவாளர் ஜனரால், இரத்தினபுரி. ஊவா சபரகமுவ வலய காரியாலயத்தில் தொகுதி 27 இல் 63 ஆம் இலக்கம் கொண்ட பதிவுப்பத்திரத்தில் 794 ஆம் நாளேட்டு இலக்கத்தின் கீழ் 2020.09.08ம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மேற்கூறிய 2349 ஆம் இலக்க அட்டர்னி தத்துவ பத்திரத்தை இரத்து செய்கிறேன் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறேன்.
அதற்கமைய மேற்கூறிய 2349 இலக்கமுடைய அட்டர்னி தத்துவப்பத்திரம் இன்று முதல் செயல் இழப்பதோடு இப்பத்திரம் ஊடாக அட்டர்னி தத்துவம் பெற்ற வருடம் இதன் பிறகு மேற்கொள்ளும் எந்தவொரு செயற்பாடும் செல்லுபடியற்றது என்பதனையும் அறிவித்துக் கொள்கிறேன். மேலும், இதன் பிறகு அட்டர்னி தத்துவப்பத்திரம் எந்தவொரு நபருக்கும் கொடுக்கவில்லை என்பதனையும் இலங்கை குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**(வலு அமைச்சு)**
**ஒறுகொடவத்த இ.பெ.கூ. இடப்பரப்பிலுள்ள இளைப்பாறும் அறை கட்டிடத்தின் புனரமைத்தல்**


**B/32/2021**

1. கீழே விபரிக்கப்பட்டதும் (அண்ணளவாக) 3.8 மில்லியன் ரூபாவில் மதிப்பீடு செய்யப் பட்டதுமான ஒறுகொடவத்த, இ.பெ.கூ. இடப்பரப்பின் இளைப்பாறும் அறைக் கட்டிடத்தின் புனரமைத்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
2. இப்பணியின் நிர்மாணக் காலப்பகுதியானது 01 மாதமாகும்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப் படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் ICTAD பதிவின் சி-8 அல்லது மேற்பட்ட தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு: இந்த கேள்விக்கு விண்ணப்பிக்கும் விலைமனுதாரர்கள் ICTAD பதிவின் சி-8 அல்லது மேற்பட்ட தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரிடமிருந்து பெற்று விலைமனுக் கோரல் ஆவணங்களை http://ceypetco.gov.lk/public-tenders/. என்ற இ.பெ.கூ. உத்தியோகபூர்வ இணையதளத்தில் பரீட்சிக்கலாம்.
7. 2021.05.20 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப் படாத கட்டணமாக 2,000 ரூபாவை (அதாவது: 1,851.85 ரூபா **+ 8%** பெசேவ) செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமாக விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
8. கோவிட்-19 தொற்று காரணமாக, **www.ceypetco.gov.lk** என்ற இபெகூ இணையதளத்திலிருந்து விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாமென்பதுடன் அனைத்து பணக்கொடுப்பனவுகளும் மக்கள் வங்கி தலைமையக 004100110208633 என்ற இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.
9. 2021.05.21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் அவற்றை சமர்ப்பிக்கும் இறுதி திகதிக்குப் பின்னரான அறுபத்தி மூன்று (63) நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. அனைத்து விலைமனுக்களும் வங்கியொன்றிலிருந்து அல்லது திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனியொன்றிலிருந்து பெறப்பட்டதும் 60,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2021.08.21 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609,**
**கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**

**தொலைபேசி: 5455331. தொலைநகல்: 5455424**

BE BETTER INFORMED!



News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

# பெறுகை அறிவித்தல்

## நாரம்மல பிரதேச சபை

நாரம்மல பிரதேச சபைக்கு புத்தம் புதிய Trailer Mounted Gully Bowser ஒன்று மற்றும் 2WD Four wheel சகிதம் புத்தம் புதிய 50 HP டிராக்டர் ஆகிய இரண்டையும் ஒரு நிறுவனத்தில் கொள்வனவு செய்வதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

இதற்கு இயைபான சகல கேள்விப் படிவங்கள் மற்றும் விபரக்குறிப்புகளை நாரம்மல பிரதேச சபைக்கு 1000.00 ரூபா படிவக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கு இயைபான கேள்விப் படிவங்கள் வழங்குதல் 2021-05-19ஆம் திகதி பி.ப. 12.30 வரை மேற்கொள்ளப்படும் என்பதுடன் மே மாதம் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறுத்தப்படும் என்பதுடன் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். (விபரக்குறிப்புகள் தொடர்பில் ஏதேனும் சிக்கல்கள் அல்லது மேலதிக விபரங்களுக்கு 037-2249275, 037-4947461 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு தொழில்நுட்ப அலுவலருடன் தொடர்பு கொள்ளவும்.)

**தலைவர் / செயலாளர்,**
**நாரம்மல பிரதேச சபை,**
**நாரம்மல.**

# மக்கள் வங்கி

## மீட்கப்படாதிருக்கும் அடகு நகைகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 31.03.2020 வரை அடகு வைக்கப்பட்டும் 12 மாதங்கள் முடிவடைந்த நிலையில் மீளப்பெறாத நகைகள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள விபரத்தின் பிரகாரம் முற்பகல் 9.00 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| கிளையின் பெயர் | சேவை நிலையம் | பின்வரும் திகதி வரை மீளப் பெறாத நகைகள் | ஏல விற்பனை நடைபெறும் திகதி | ஏல விற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| காத்தான்குடி<br>மட்டக்களப்பு<br>மட்டக்களப்பு நகரக்கிளை<br>களுவாஞ்சிக்குடி<br>கல்லாறு<br>கொக்கட்டிச்சோலை<br>செங்கலடி<br>ஏறாவூர்<br>வாழைச்சேனை<br>ஓட்டமாவடி | ஆரையம்பதி<br>கிரான்குளம்<br>இருதயபுரம்<br>புதூர்<br>மண்டூர்<br>பழுகாமம்<br>சித்தாண்டி<br>வாகரை<br>கிரான் | 21.05.2021 | 22.05.2021 (சனிக்கிழமை)<br>23.05.2021 (ஞாயிற்றுக் கிழமை) | மட்டக்களப்பு நகரக்கிளை |

வாடிக்கையாளர்கள் தங்களது தேசிய அடையாள அட்டையை கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முன் அறிவித்தல் எதுவுமின்றி இவ் ஏல விற்பனையை ஒருங்கிணைக்கவோ, இரத்துச் செய்யவோ அல்லது பிற்போடவோ வங்கிக்கு உரிமை உண்டு என்பதை அறியத்தருகிறோம்.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**மக்கள் வங்கி**
**மட்டக்களப்பு**
**தொலைபேசி இல.: 065-2222652, 065-2224476**
**திகதி: 2021.04.22**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

## இலங்கை போக்குவரத்து சபை (இபோச)

# 2021 ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2021ஆம் ஆண்டிற்குள இ.போ.ச. தலைமையகம், பிரதேச அலுவலகங்கள், பிரதேச வேலைத்தளங்கள், டிப்போ, சாரதி பயிற்சிக் கல்லூரிகளில் பாவிக்கப்படும் உத்தியோகபூர்வ வாகனம் உட்பட சகல இலகு வாகனங்களையும் பழுது பார்ப்பதற்கு தேவையான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பழுது பார்த்தல் சேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற உள்ளூர் உற்பத்தியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மற்றும் பதிவு செய்துள்ள கராஜ் வலையமைப்பை பாவித்து (On Line) web URL-https://sltb.lk/supplyregistration/ பதிவு செய்தல் வேண்டும். அத்துடன் வழங்குநர்கள் பதிவு செய்யும் காலஎல்லை 2021.05.01 முதல் 2021.06.01 வரையாகும்.

**உருப்படி இலக்கம் மற்றும் விபரங்கள்:**

- இ.போ.ச. பஸ்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்கள் மற்றும் வேறு பொருட்கள்
- இ.போ.ச.வுக்கு சொந்தமான இலகு வாகனங்களுக்கு தேவையான உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் அவ் வாகனங்களின் பழுதுபார்த்தல் சேவை விடயங்கள்
- சிவில் பொறியியல் விடயங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகள்

**செயலாளர் பெறுகைக் குழு,**
**இலங்கை போக்குவரத்துச் சபை,**
**இல. 200, கிருல வீதி,**
**கொழும்பு -05.**

**தொடர்பு: செயலாளர், பெறுகைக்குழு:**
**011-7706110/077-1056110/ 011-2588457/ 011-7706111**
**ஈமெயில்:** tendersec@sltb.lk

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண சபை

## மாகாண கட்டிடத் திணைக்களம்

ஊவா மாகாண சபையின் கட்டிடத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற வேலைகளை நிறைவேற்றுவதற்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) இயைபுடைய துறையில் பதிவுத் தகுதி பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிர்மாண நிறுவனங்களிடமிருந்து 2021-05-25ஆம் திகதி வரை போட்டி கேள்வி கோரல் நடைமுறையின் அடிப்படையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இலக்கம் | வேலையின் பெயர் | சிவில் வேலையின் பெறுமதி (ரூபா மில்லியன்) (வெட் இன்றி) | தேவையான கட்டிட நிர்மாண துறைக்கான CIDA தரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி தொகை (ரொக்கப் பணமாகச் செலுத்துவ தானால்) (ரூபா) | நிர்மாணக் காலம் (நாட்கள்) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) | கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் அலுவலகம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | UPBD/EDU/PSDG/2021/03/01 | ப/தோவ மகா வித்தியாலயத்தில் 60'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 17.79 | C6 மற்றும் C5 | 89,000.00 | 180 | 5,000.00 | மாகாணக் கட்டிடப் பணிப்பாளர் அலுவலகம் |
| 02 | UPBD/EDU/PSDG/2021/03/02 | மொ/மதுருகெட்டிய கனிஷ்ட வித்தியாலயத்தில் 90'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (1ஆம் கட்டம்) | 15.54 | C6 மற்றும் C5 | 78,000.00 | 180 | 5,000.00 | |
| 03 | UPBD/EDU/PSDG/2021/03/03 | ப/வெலிமட விஜய வித்தியாலயத்தில் 110'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (1ஆம் கட்டம்) | 14.02 | C6 மற்றும் C5 | 70,500.00 | 180 | 5,000.00 | |
| 04 | UPBD/EDU/PSDG/2021/03/04 | ப/வெலிமட முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 110'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (1ஆம் கட்டம்) | 14.02 | C6 மற்றும் C5 | 70,500.00 | 180 | 5,000.00 | |
| 05 | UPBD/EDU/PSDG/2021/03/05 | ப/சீவளி மகா வித்தியாலயத்தில் 70'x25' நான்கு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (2ஆம் கட்டம்) | 12.41 | C6 மற்றும் C5 | 62,500.00 | 180 | 5,000.00 | |
| 06 | UPBD/EDU/PSDG/2021/03/06 | ப/பஹரகம்மான முஸ்லிம் வித்தியாலயத்தில் 100'x25' கட்டிடத்தை நிர்மாணித்தல் (நூலகம் மற்றும் ஆய்வுகூடம் சகிதம்) | 11.61 | C6 மற்றும் C5 | 60,000.00 | 180 | 5,000.00 | |
| 07 | UPBD/EDU/PSDG/2021/03/07 | மொ/முத்துகண்டிய 3ஆம் கட்ட கனிஷ்ட வித்தியாலயத்தில் 90'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - இறுதிக் கட்டம் | 8.34 | C7 மற்றும் C6 | 42,000.00 | 180 | 3,000.00 | பிரதேச பொறியியலாளர் (கட்டிடங்கள்) அலுவலகம் - மொனராகல |
| 08 | UPBD/H/PSSP/2021/03/01 | வெலன்விட்ட சிகிச்சை நிலையத்தை மறுசீரமைத்தல் (கூரை மற்றும் சீலிங்) | 2.10 | C8 மற்றும் C7 | 10,500.00 | 120 | 3,000.00 | பிரதேச பொறியியலாளர் (கட்டிடங்கள்) அலுவலகம் - பண்டாரவளை |
| 09 | UPBD/EDU/PSDG/2021/03/08 | ப/தம்பகொல்ல ஸ்ரீ சுமண வித்தியாலயத்தில் 100'x20' கட்டிடத்தை நிர்மாணித்தல் (அரை நிலையில்) | 8.00 | C7 மற்றும் C6 | 40,000.00 | 180 | 3,000.00 | பிரதேச பொறியியலாளர் (கட்டிடங்கள்) அலுவலகம் - பிபிலை |
| 10 | UPBD/EDU/PSDG/2021/03/09 | ப/கெமுனுபுர மகா வித்தியாலயத்தில் 100'x25' பாடசாலைக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | 3.35 | C8 மற்றும் C7 | 17,000.00 | 120 | 3,000.00 | |
| 11 | UPBD/EDU/PSDG/2021/03/10 | ப/பத்தலயாய மகா வித்தியாலயத்தில் 40'x20' கட்டிடம் மற்றும் மனையியல் பிரிவின் திருத்தவேலைகள் | 2.66 | C8 மற்றும் C7 | 13,500.00 | 120 | 3,000.00 | |
| 12 | UPBD/EDU/PSDG/2021/03/11 | மொ/ஹெபொல கனிஷ்ட வித்தியாலயத்தில் 80'x20' பிரதான மண்டபத்தின் திருத்தவேலைகள் | 2.34 | C8 மற்றும் C7 | 12,000.00 | 120 | 3,000.00 | |
| 13 | UPBD/EDU/PSDG/2021/03/12 | மொ/யகுன்னாவ மகா வித்தியாலயத்தில் 80'x25' ஆரம்பப் பிரிவு மண்டபத்தின் திருத்தவேலைகள் | 2.07 | C8 மற்றும் C7 | 10,500.00 | 120 | 3,000.00 | |

02. தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் நடைமுறையின் மூலம் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இந்த வேலைகளின் முழு மதிப்பீடுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு மேற்படாததனால் நிதி அமைச்சின் 4/2016(ii) இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களுக்கான மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பதிவுத் தர முன்னுரிமை என்பன கேள்வி மதிப்பீட்டின் போது கவனத்திற் கொள்ளப்படும்.

03. மேற்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் சீடா (CIDA) ஆகக் குறைந்த தரம் மற்றும் துறையில் பதிவுடன் அபகீர்த்தியாளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள் மற்றும் வெற்றிகரமான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்கள் கேள்விகளைப் பெற்றுக்கொள்ளத் தகைமை பெறுவர்.

04. கேள்விகளை மதிப்பீடு செய்கையில் நிதி அமைச்சின் 3/2020(i) இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் அதற்கு இயைபான திருத்தங்களின் பிரகாரம் கேள்விகளை மதிப்பீடு செய்கையில் பின்வரும் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும் என்பதுடன் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திராதிருத்தல் கேள்விகள் நிராகரிப்பதற்கான காரணமாகலாம்.

    I. கடந்த ஐந்து வருடங்களில் சிவில் வேலைகளின் பெறுமதியில் 80% அல்லது அதற்குச் சமமான ஒரு வேலையை நிறைவு செய்துள்ள அனுபவம். (மேற்படி அட்டவணையில் தேவையான சீடா தரமாக C7 மற்றும் C8 தரங்கள் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு இந்த நிபந்தனை ஏற்புடையதல்ல)
    II. கடந்த ஐந்து வருடங்களில் மேற்காணும் சிவில் வேலைகளுக்குச் சமமாக பேணப்பட்ட சமமான புரள்வு
    III. நிதிவள இயலுமை
    IV. தற்போது செய்து கொண்டிருக்கும் வேலைகளின் நிதி மற்றும் பௌதிக விளைவு

05. சிவில் வேலைகளில் 05 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். கேள்விகளுடன் அந்தப் பதிவுச் சான்றிதழை அல்லது உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு பதிவுச் சான்றிதழ் அல்லது உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாமை கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகலாம்.

06. இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான கேள்வி ஆவணத்தின் பிரதியொன்றை 2021-05-03ஆம் திகதி முதல் 2021-05-24ஆம் திகதி வரையான அலுவலக நேரத்தில் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்வி ஆவணக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

07. கேள்விப் பிணையை ரொக்கப் பணமாகச் செலுத்தவில்லையானால் கேள்வி பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பிணையின் பொருட்டு பிணை முறியொன்றைச் செலுத்துவதானால் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணை முறித் தொகையின் இரு மடங்குப் பெறுமதியான மாதிரிக்கு அமைவாக இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக் கொண்ட நிபந்தனையற்ற, கோரப்பட்டவுடன் செலுத்தப்படும் பிணைமுறி மூலமாக மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியானது 2021-09-25ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

08. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் உரிய பெறுகைக் குழுவுக்கு 2021-05-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் கேள்விப் படிவத்தின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறாக இரு உறையினுள் இட்டு அவ்விரண்டையும் ஒரு உறையினுள் இட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த வேலையின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரையிட்டு தலைவர், பெறுகைக் குழு, ஊவா மாகாண கட்டிடங்கள் திணைக்களம், பிங்அராவ, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

09. நகல் பிரதி மூலப் பிரதியின் எல்லா பக்கங்களும் சான்றுப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதியாயிருத்தல் வேண்டும்.

10. இயைபுடைய மேலதிக விபரங்களை ஊவா மாகாண கட்டிடங்கள் திணைக்களத்தின் - 055-2229629, பண்டாரவளை பிரதேச பொறியியலாளர் (கட்டிடங்கள்) அலுவலகம் - 057-2222025, மொனராகலை பிரதேச பொறியியலாளர் (கட்டிடங்கள்) அலுவலகம் - 055-2276038,055-2224753 மற்றும் பிபிலை பிரதேச பொறியியலாளர் (கட்டிடங்கள்) அலுவலகம் - 055-2265317 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

11. 2021-08-25ஆம் திகதி வரை கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

12. 2021-05-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாகாண கட்டிடங்கள் திணைக்கள அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் கலந்து கொள்ளலாம்.

13. கேள்வி கோரல் தொடர்பான முன்னோடிக் கூட்டம் (Pre Bid Meeting) 2021-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பதுளை, பிங்அராவ, மாகாண கட்டிடங்கள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும். இங்கு உத்தேச கேள்விதாரர்கள் செயற்றிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமானவற்றை தெளிவுபடுத்துமாறு கேட்கலாம். தேவையானால் வேலைத்தள விஜயமொன்றை ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

14. கிடைக்கப்பெறும் கேள்வி மனுக்களிடையே தகுதி வாய்ந்த மனுவை ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது அனைத்து மனுக்களையும் நிராகரிப்பதற்கான பூரண உரிமை பெறுகைக் குழுவைச் சார்ந்தது. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர், - பெறுகைக் குழு,**
**மாகாண கட்டிடங்கள் திணைக்களம்,**
**பிங்அராவ, பதுளை.**

**தொலைபேசி/தொலைநகல் இல. 055-2229629**
**மின்னஞ்சல் முகவரி: bdplanningunit@gmail.com**
**2021-04-29ஆம் திகதி.**

தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2021 ஏப்ரல் 30 வெள்ளிக்கிழமை

## பங்களாதேஷ் அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட்

# கருணாரத்ன மற்றும் திரிமான்னவின் சதங்களின் உதவியுடன் இலங்கை அணி வலுவான நிலையில்

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஒரு விக்கெட்டை இழந்து 291 ஓட்டங்களை பெற்றது.

கண்டி பல்லேகலை மைதானத்தில் நேற்று ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் கருணாரத்ன தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என்பதற்கு அமைய அணியின் தலைவர் கருணாரத்ன மற்றும் லகிரு திரிமான்ன இருவரும் களமிறங்கி முதலாவது விக்கெட்டுக்காக 209 ஓட்டங்கள் குவித்த போது அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன 118 ஓட்டங்கள் பெற்றிருந்த போது ஆட்டமிழந்து சென்றார்.அவர் நேற்றைய டெஸ்ட் போட்டியில் 12 ஆவது டெஸ்ட சதத்தை பதிவு செய்தார். அப்போது இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 180 ஓட்டங்களை குவித்து இருந்தது.

பின்னர் லகிரு திரிமான்னவுடன் இணைந்தார் ஓஷத பெர்னாண்டோ இருவரும் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த நிலையில் இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டமாக 82 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.திரிமான்ன தனது 3 ஆவது டெஸ்ட் சதத்தை பதிவு செய்தார்.

அவர் 131 ஓட்டங்களுடனும் ஓஷத பெர்னாண்டோ 40 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்து வீச்சில் செரிபுல் இஸ்லாம் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். பங்களாதேஷ் அணி விக்கெட்டை வீழ்த்த கஷ்ட பட்டதை காணமுடிந்தது. இந்த டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி சார்பாக பிரவீன் ஜயவிக்கிரம தனது கன்னி டெஸ்ட் வரத்தை பெற்ற அதே நேரம் பங்களாதேஷ் அணி சார்பாக செரிபுல் இஸ்லாம் தனது கன்னி டெஸ்ட் வரத்தை பெற்றார்.அவர் தனது கன்னி விக்கெட்டையும் வீழ்த்தினார்.இந்த போட்டியில் தனது 5000 ஓட்டங்கள் மைல்கல்லை இலங்கை அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன தொட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று போட்டியின் இரண்டாவது நாளாகும்.



## பல்லேகலை ஆடுகளம் சராசரிக்கும் குறைவானது – ஐசிசி

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டிக்கான கண்டி – பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் ஆடுகளம் சராசரிக்கு குறைவானது என ஐசிசி அறிவித்துள்ளது.

சுற்றுலா பங்களாதேஷ் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் கடந்த 21ம் திகதி ஆரம்பமானது. இந்தப்போட்டியின், ஆடுகளமானது அதிகமாக துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக இருந்தது.

குறிப்பாக முதல் டெஸ்ட் போட்டியில், இரண்டு அணிகளாலும் ஒட்டுமொத்தமாக 1289 ஓட்டங்கள் குவிக்கப்பட்டதுடன், 17 விக்கெட்டுகள் மாத்திரமே வீழ்த்தப்பட்டன. இந்தப்போட்டிக்கான ஆடுகளத்தில் விக்கெட்டுகளை கைப்பற்றுவதற்கான சராசரி 75.82 ஆக அதிகரித்திருந்தது.

இதனை அவதானித்த இந்தப்போட்டிக்கான ஐசிசியின் போட்டி மத்தியஸ்தர் ரஞ்ஜன் மடுகல்ல, ஐசிசியின் ஆடுகளம் மற்றும் மைதானத்துக்கான தன்மைக்கான விதிமுறைக்கு அமைய, பல்லேகலை மைதானத்தின் ஆடுகளம் "சராசரிக்கும் குறைவான" மதிப்பை கொண்டுள்ளதாக அறிவித்துள்ளார். அத்துடன், பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் இந்தப்போட்டிக்கான ஆடுகளமானது ஐந்து நாட்களாக எவ்வித மாற்றங்களுக்கும் உள்ளாகவில்லை. முற்றுமுழுதாக துடுப்பாட்ட வீரர்களுக்கு மாத்திரமே சாதகமாக இருந்தது. எனவே, ஐசிசியின் விதிமுறையின் படி, இந்தப்போட்டிக்கான ஆடுகளத்துக்கு ஒரு தரக்குறைப்பு புள்ளியும் வழங்கப்பட்டுள்ளது.

ஐசிசியின் விதிமுறையின் படி, பல்லேகலை மைதானத்துக்கு வழங்கப்பட்டுள்ள தரக்குறைப்பு புள்ளி, தொடர்ந்தும் ஐந்து வருடங்களுக்கு செல்லுபடியாகும். குறித்த காலப்பகுதியில் ஒரு மைதானத்தின் ஆடுகளம் 5 தரக்குறைப்பு புள்ளிகளை பெறும் பட்சத்தில், 12 மாதங்களுக்கு எந்தவித சர்வதேச போட்டிகளையும் நடத்த முடியாதபடி, சர்வதேச கிரிக்கெட் சபை தடை விதிக்கும்.

ஒரு மைதானத்தின் ஆடுகளம் 10 இற்கும் அதிகமான தரமிறக்கல் புள்ளிகளையும் பெறும் பட்சத்தில், 24 மாதங்களுக்கு எந்தவொரு சர்வதேச போட்டிகளையும் நடத்த முடியாதபடி, தடைவிதிக்கப்படும்.




## பீல்ட் கேம் கரப்பந்தாட்ட போட்டியில் புத்தளம் சோஷியல் அணி வெற்றி



(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் சவீவபுரம் கரப்பந்தாட்ட மைதானத்தில் மின்னொளியில் அண்மையில் (24) நடைபெற்ற பீல்ட் கேம் கரப்பந்தாட்ட போட்டியில் புத்தளம் நகரின் நீண்ட கால வரலாற்றினை கொண்ட சோஷியல் அணி சம்பியனாகியுள்ளது.

தொடரின் இரண்டாம் இடத்தினை புத்தளம் லயன்ஸ் கழக அணி பெற்றுக்கொண்டது.

அணிக்கு ஐந்து பேர்களை கொண்ட 20 அணிகள் பங்கேற்ற இந்த கரப்பந்தாட்ட தொடரினை புத்தளம் சோஷியல் அணி ஏற்பாடு செய்திருந்தது.

தொடர்ச்சியாக நான்கு இரவுகளாக போட்டிகள் நடைபெற்று விறுவிறுப்பான இறுதி போட்டி சனிக்கிழமை (24) இரவு இடம்பெற்றது.

சோஷியல் கரப்பந்தாட்ட கழகத்தின் மூத்த பொறுப்பாளர் எம். முளப்பர் நடுவர்களுக்கான நன்றி சின்னங்களையும், இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்ட லயன்ஸ் க்ளப் அணிக்கான கிண்ணத்தை சாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளர் ஏ.டபில்யூ.நசீபும், சோஷியல் அணிக்கான சம்பியன் கேடயத்தை சோஷியல் கழக மூத்த சிரேஷ்ட கரப்பந்தாட்ட வீரர் முஹம்மது நியாஸினாலும் வழங்கி வைக்கப்பட்டது.

## பலாங்கொடை தெதனகல விளையாட்டு மைதானத்தை புனரமைக்க கோரிக்கை

( பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடை மாரதென்ன உதைப்பந்தாட்ட சங்கத்தின் மூலம் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் பலாங்கொடை தெதனகல விளையாட்டு மைதானத்தை புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் சந்திரகுமார் தெரிவித்தார்.

வெள்ளைக்கார ஆட்சி காலத்தில் இருந்து வரும் இந்த விளையாட்டு மைதானத்தில் வெள்ளைக்காரர்களும் விளையாடி உள்ளதாக அமைச்சருக்கு சுட்டிக்காட்டியுள்ள இந்த சங்கம் இப்பகுதியில் ஐந்து உதைப்பந்தாட்ட சங்கங்கள் உள்ளதுடன் அவற்றில் உள்ள விளையாட்டு வீரர்கள் மைதானம் இன்மையால் தங்களுக்கு உதைப்பந்தாட்ட போட்டிகளை நடத்த முடியாது உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சினால் விளையாட்டு மைதானங்கள் புனரமைக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் மாரதென்ன தெதனகல விளையாட்டு மைதானத்தை புனரமைத்து தர நடவடிக்கை எடுக்குமாறு விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## டயலொக் ஜனாதிபதி தங்க கிண்ணத்துக்கான வடமாகாண ரீதியில் கரப்பந்தாட்டம்





(யாழ்.விளையாட்டு நிருபர்)

டயலொக் ஜனாதிபதி தங்க கோப்பைக்கான வடமாகாண ரீதியில் நடைபெற்ற ஆண், பெண் இரு பாலருக்குமான கரப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் கிளிநொச்சி அதியசம் விளையாட்டுக் கழக அணியும்,ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியும் கிண்ணம் வென்றன.

(18) திகதி ஞாயிற்றுக் கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி அதியசம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம் பெற்றது. இதில் கிளிநொச்சி அதிசயம் விளையாட்டுக்கழக அணி 20 என்ற நேர் செற்களினால் வெற்றி பெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம் பெற்றது.இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 30 என்ற செற்களினால் வெற்றி பெற்றது.

## தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடருக்கான விண்ணப்பம் கோரல்

நாட்டில் கொவிட் – 19 வைரஸ் வேகமாக பரவி வருகின்ற நிலையில், அடுத்த மாதம் நடைபெறவுள்ள 99ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் திட்டமிட்டபடி நடைபெறும் என இலங்கை மெய்வல்லுநர் சங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி, இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வருடத்துக்கான தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் எதிர்வரும் மே மாதம் 20ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் பங்குபற்றுகின்ற வாய்ப்பை பெறுவதற்கான இறுதி தகுதிகாண் போட்டியாக இம்முறை தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் அமையவுள்ளமை சிறப்பம்சமாகும்.

தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் பங்குபற்ற விரும்புகின்ற வீரர்கள் எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும் என இலங்கை மெய்வல்லுநர் சங்கம் அறிவித்துள்ளது.

இதனிடையே, உலக கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடருக்கான தகுதிகாண் போட்டியாக நடைபெறவுள்ள தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகளும் திட்டமிட்டபடி எதிர்வரும் ஜூன் மாதம் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

குறித்த போட்டியில் பங்குபற்ற விரும்புகின்ற வீரர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு முன் அனுப்பிவைக்க வேண்டும் என இலங்கை மெய்வல்லுநர் சங்கம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 30ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.